
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை நூற்றி ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா





Manifest der Kommunistischen Partei.


Veröffentlicht im Februar 1848.

Proletarier aller Länder vereinigt euch.

London.

Gedruckt in der Office der „Bildungs-Gesellschaft für Arbeiter" von J. E. Burghard.

46, Liverpool Street, Bishopsgate.



''இந்த சமுதாயத்தின் நிலைமைகள் யாவையையும் பலவந்தமாய் வீழ்த்த வேண்டும், அப்போதுதான் தமது இலட்சியங்கள் நிறைவேறும் என்று கம்யூனிஸ்டுகள் ஒளிவுமறைவின்றி பறைசாற்றுகின்றனர். கம்யூனிசப் புரட்சி வருகிறதென்று ஆளும் வர்க்கங்கள் அஞ்சி நடுங்கட்டும். பாட்டாளிகள் தமது அடிமைச் சங்கிலியைத் தவிர இழப்பதற்கு ஏதும் இல்லாதவர்கள். அவர்கள் வெல்வதற்கு அனைத்து உலகும் இருக்கிறது''

**உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!**

படிப்பகம்

www.padippakam.com

**ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும்**

# தாழ்த்தப்பட்டோர் தெருவில் சவேரியார் நுழையமாட்டார்

பாவிகளை இரட்சிக்க தேவ மகன் பிறந்து இருபது நூறு ஆண்டுகள் ஆகி றது. அவரது பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான புனித சவேரியார் தஞ்சை அருகே வல்லத்தில் ஆண்டுதோறும் தேரில் பவனி வருவது வழக்கம். இந்தி யப் பழக்கப்படி சேரிக்குள் சவேரியார் வரமாட்டார்.

உடையார், வெள்ளாளர், ஆசாரி போன்ற மேல் சாதியினரிடம் அடை பட்டிருக்கும் தேவனின் சீடனை விடு விக்கத் தாழ்த்தப்பட்ட மக்கள் பல ஆண்டுகளாய் போராடி வருகிறார்கள். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு திரு விழாவிற்குக் கொடி ஏற்றிவிட்டாலே போலீசு தாழ்த்தப்பட்ட மக்களை அடிக் கடி எச்சரித்து மிரட்டி வைக்கும். பங் குத் தந்தைகளும் கண்டு கொள்ள மாட் டார்கள்.

சேரிக்குள் வராத தெருக்குப் பின்னே சைக்கிளில் சவேரியார் படத் தைக் கட்டிக் கொண்டு பாடிச் செல்வார் கள் தாழ்த்தப்பட்ட மக்கள். சைக்கிள் டிராக்டராக மாறியபோது 'பறைய னுக்கு எதுக்கு ஆட்டம் பாட்டம்' என்று உடையார் சாதியினர் மறுத்தனர். சவே ரியார் மீண்டும் சைக்கிளுக்குத் திரும்பி னார்.

ஆரம்பத்தில் அதிகாரிகளிடம் மனுக் கொடுக்கவே பயந்திருந்த நிலை மையை மாற்றி கடந்த சில ஆண்டுகள் போர்க் குணத்தோடு போராடி வருகி றார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். மேல் சாதியினரால் மறுக்கப்படும் வழி பாட்டு உரிமையை எதிர்த்து 91,92,93-ம் ஆண்டுகளில் வழக்குத் தொடுத்தனர். நீதிமன்றம் விதித்த தடையை மீறி உள்ளூர் அரசியல்வாதி கள் - போலீஸ் உதவியுடன் மேல் சாதி யினர் 93-ம் ஆண்டு தேரை இழுத்த னர். மறியல் செய்த தாழ்த்தப்பட்ட மக் களை கடத்திச் சென்றது போலீசு.

அடுத்த இரண்டு ஆண்டுகள் ஒவ் வொரு சாதியினரும் ஓர் ஆண்டு தேரை இழுக்கலாம் என முடிவானா லும் மேல் சாதி கிறித்தவர்கள் 'மனமி ரங்க'வில்லை. 96-ம் ஆண்டு ம.க. இ.க. உதவியுடன் தாழ்த்தப்பட்ட மக் கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பலர் கலந்து கொண்டு விடிய விடிய பேசியதில் தேரைத் தாழ்த்தப் பட்ட மக்களிடம் ஒப்படைக்க வேண் டும் என முடிவானது. 'பறையனுக்குத் தேரா', என்று புழுங்கிய சாதிவெறியர் கள் அலங்கரிக்கப்பட்ட சவேரியார் தேரை நாசப்படுத்தினர். சாதி கௌர வத்திற்கு முன் சவேரியார் மட்டும் எம் மாத்திரம். பின்னர் மூளியாக்கப்பட்ட தேரையே போலீசு தாழ்த்தப்பட்ட மக்க ளிடம் கொடுத்தது.

'தலித் கிறித்தவ விடுதலை' இயக் கம் சார்பில் பங்குகுரு, ஆயர், மேல் சாதி கிறித்தவர்களை எதிர்த்து நீதிமன் றத்தில் முன்னர் வழக்கு தொடுத்திருந்த முன்னணியாளர்கள் சவரி முத்து, ஞானப் பிரகாசம். இவ்விருவரையும் அதிகாரிகள் ஆதரவுடன் மேல் சாதியி னர் மிரட்டி அடிபணிய வைத்தனர்.

வாதிகளும் அவர்களது வழக்குக றிஞர்களும் நீதிமன்றம் வராதநிலை யில் மனு தர்மத் தீர்ப்பு மேல் சாதியின ருக்கு சாதகமாக வழங்கப்பட்டது. 'ஆண்டாண்டு காலமாக, பரம்பரை யாக கிறித்தவ உடையார், ஆசாரி, வேளாளர் முதலான சமூகத்திற்குத் தான் தேரை இழுக்கும் உரிமை உண்டு. இவர்களுக்கு இடையூறு ஏதுமில்லா மல் தேர்த் திருவிழா கொண்டாட காவல்துறை பாதுகாக்க வேண்டும்'' வாழையடி வாழையாக இருந்து வரும் தீண்டாமை - சாதி வெறியையே உரி மையாக்கி - சங்கராச்சாரி - சாணக்கி யன் மொழியில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு இது.

இவ்விவரம் ஏதுமறியாத தாழ்த் தப்பட்ட மக்களிடம் 97 நவம்பர் முதல் வாரம் நீதிமன்றத் தீர்ப்பைக் காட்டி தேர் இழுக்கப்படும் என்று பூசையின் போது அறிவித்தார் பாதிரியார் ஏ.பி. தாசு. ஒவ்வொரு ஆண்டும் வஞ்சகமாக ஏமாற்றப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் கொதித்தெழுந்தார்கள். தேவனும் - திருச்சபையும் - அதிகாரிகளும் கைவிட்ட நிலையில் ம.க.இ.க. தோள் கொடுக்க மேல் சாதி கிறித்தவர்களுக்கு எதிரான போராட்டத்தை தொடுத்தனர் தாழ்த்தப்பட்ட மக்கள்.

தேர் இழுக்கப்படும் 2.12.97-க்கு முந்தைய நாளில் ஆர்ப்பாட்டம் நடத் தக் கோரிய போது, அனுமதி மறுத்தது போலீசு. ஆயிரக்கணக்கில் அணி திரண்ட மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனுக் கொடுத்தனர்.

பின்னர் தஞ்சை வட்டாட்சியரு டன் பேச்சு வார்த்தை நடந்தது. நீதி மன்ற உத்தரவைக் காட்டி வட்டாட்சிய ரும், போலீசு அதிகாரிகளும் ஏற்கச் சொல்லி தாழ்த்தப்பட்ட மக்களை வற்பு றுத்தினர். கையெழுத்திடவும் கோரினர்.

இதை எதிர்த்து அங்கேயே மக் கள் சத்தமிடத் தொடங்கினார்கள். 'யாராவது கையெழுத்துப் போட்டா இங்கேயே வெட்டிப் புதைச்சுருவோம்' என்றனர் சில பெண்கள். கொடுமை கண்டு கோபம் கொண்ட மக்கள் சக் தியை கைது செய்வோம் என்று மிரட்ட லெல்லாம் எடுபடவில்லை.

அதிகாரிகளின் ஏமாற்று வித் தையை இனம் கண்ட மக்கள் லாரி பிடித்து வல்லம் சவேரியார் கோவிலில் இறங்கினார்கள். அன்றுதான் தேர் இழுக்கப்படும் நாள். பல ஆண்டுக ளாய் சாதிக் கொடுமைகளை மௌனக் காட்சியாய் பார்த்து வரும் சவேரியா ரின் கோவிலை தாழ்த்தப்பட்ட மக்க ளின் உரிமைக் குரல் 'புனிதமாக்கியது'. தேரை அலங்கரிக்க வந்த ஆசாரிகளை திருப்பி அனுப்பிய இளைஞர்கள் அச் சாணியைக் கழற்றி விட்டு சக்கரம் அருகே படுத்து விட்டார்கள்.

ஆம். தேர் நகராது. பாதிரி - அரசு - மேல் சாதிக் கூட்டணியை தோற் றோட வைத்தது அடிமைத்தனம் மறுக் கும் மக்கள் சக்தி. பின்னர் திருவி ழாவை ரத்து செய்து 144 தடை உத்தி ரவை அமல்படுத்தியது போலீசு. வஞ்ச கம் பல புரிந்தும் தேரை இழுக்க இய லாத மேல் சாதி வெறியர்கள் மனம் புழுங்கினர்.

விழா ரத்தானது. அவர்களது சாதித் திமிர் ரத்தாகும் வரை இத்தடை யுத்தரவு நீடிக்கும் என்கிறார்கள் வல் லம் தாழ்த்தப்பட்ட மக்கள்.

தகவல்: ம.க.இ.க.,
தஞ்சை.

**சேரிக்குள் வராத தெருக்குப் பின்னே சைக்கிளில் சவேரியார் படத்தைக் கட்டிக் கொண்டு பாடிச் செல்வார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். சைக்கிள் டிராக்டராக மாறிய போது 'பறையனுக்கு எதுக்கு ஆட்டம் பாட்டம்' என்று உடையார் சாதியினர் மறுத்தனர்.**



படிப்பகம்

www.padippakam.com

# “தேசிய நலனை முன்னிட்டு ஒழுக்கக்கேடு தவிர்க்க இயலாதது”

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 15
• குரல்: 7-10
• டிச. '97 - மார்ச் '98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 48.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

மீண்டும் தொங்குநிலைப் பாராளுமன்றம்தான் என்பதைத் தேர்தலுக்கு முந்திய கருத்துக் கணிப்புகள் தெளிவாகத் தெரிவித்திருந்தன. எனினும், தமிழகத்தின் தேர்தல் முடிவுகள் கருத்துக் கணிப்புகளைப் பொய்யாக்கியிருக்கின்றன. தேநீர்க் கடைகளின் முன் கூடியிருந்த கூட்டம் வானொலியில் தேர்தல் முடிவுகளைக் கேட்டு அதிர்ச்சியில் உறைந்து நின்றிருந்தது. ஜெயலலிதாவின் வெற்றிக்காக ஆர்ப்பரிப்பதற்கு கூட்டத்தில் யாருமில்லை. தமிழகத்தில் பரவலாகக் கண்ட காட்சி இது. அப்படியானால் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை வெற்றி பெறச் செய்த வாக்காளர்கள் யார்? தி.மு.க.-வின் தோல்விக்குக் காரணம் என்ன? - தேர்தல் முடிவுகள் மீது பல விளக்கங்கள் தரப்படுகின்றன.

விலைவாசி உயர்வு, பொருளாதார மந்தம் ஆகியவற்றின் காரணமாக ஆட்சியிலிருக்கும் கட்சிக்கெதிராக வாக்களிப்பது என்ற முறையில்தான் இந்தியாவெங்கும் மக்கள் வாக்களித்துள்ளனர். அந்த வகையில் மகாராட்டிரம், இராஜஸ்தானில் பாரதிய ஜனதாவும், கர்நாடகத்தில் ஜனதா தளமும், ஆந்திரத்தில் தெலுங்கு தேசமும் அடிவாங்கியது போலத்தான் தமிழகத்தில் தி.மு.க. அடிவாங்கியுள்ளது என ஒரு விளக்கம் தரப்படுகிறது. பேருந்துக் கட்டண உயர்வின் விளைவு என்றும் கோவை குண்டு வெடிப்புகள் தோற்றுவித்த எதிர்ப்பு அலை என்றும், நிலையான ஆட்சியின்பால் தமிழக மக்களுக்கு உள்ள காதல் என்றும், தென் மாவட்டங்களில் சாதிக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் தி.மு.க.வுக்கு வாக்களிக்க மறுத்தது - என்றும் அ.தி.மு.க., பா.ஜ.க.வின் வெற்றிக்குப் பலவாறாகக் காரணங்கள் சொல்லப்படுகின்றன. இவையனைத்தும் ஓரளவு உண்மைதான் என்றாலும், நாம் கவனம் செலுத்த வேண்டிய இவற்றைக் காட்டிலும் முக்கியமான சில பிரச்சினைகள் உள்ளன.

பதினெட்டு வயது வாக்குரிமை பெற்ற இளைஞர்கள், விவசாயத்தின் சீர்குலைவால் நாள்தோறும் பெருகிவரும் உதிரிப் பாட்டாளி வர்க்கம், அரசியல் ஈடுபாடு இல்லாத பெண்கள் - போன்ற பிரிவினர் தேர்தலில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கின்ற தீர்மானகரமான சக்திகளாகி வருகிறார்கள். 'பதினெட்டு வயது வாக்காளர்கள்' அரசியலையும் தேர்தலையும் 'டேக் இட் ஈஸி' பொழுது போக்காக மட்டுமே எடுத்துக் கொள்கிறார்கள். உதிரிப் பாட்டாளி வர்க்கமோ தனது கண் முன்னே தெரிகின்ற உடனடிப் பிரச்சினை, அப்போதைய பிழைப்பு ஆகிய இவற்றை வைத்து மட்டுமே அரசியல் முடிவுகளை எடுக்கிறது; பெண்களோ ''எல்லாருக்கும் போட்டாச்சு - புதுசா தாமரை வந்திருக்கு போட்டுப் பாப்பமே'' - என்று முடிவு செய்யுமளவு அரசியல் 'அறிவு' கொண்டவர்களாகவும், அற்ப உணர்வுக்கும், பொய்ப் பிரச்சாரங்களுக்கும் எளிதில் பலியாகின்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

அரசியல் ரீதியாகச் சிந்திக்கத் தெரிந்த, அமைப்பு ரீதியாகத் திரண்டிருக்கின்ற தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோர் அரசியலில் ஈடுபடாமல் தன்னலத்தில் மூழ்கி இருப்பதையே நல்லொழுக்கமாகக் கருதும் நிலை உள்ளது. தனது சம்பள உயர்வு, தனது பணிப்பாதுகாப்பு, தனது சாதியின் அல்லது குழுவின் நலன் - இவற்றுக்காக பாசிஸ்டுகளையும் கொலைகாரர்களையும் திருடர்களையும் கூடப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே அரசியல் பண்பாடாக இருக்கிறது. ஒட்டு மொத்த நலனுக்காகத் தன்னை எள் முனையளவும் வருத்திக் கொள்ளத் தயாராக இல்லாத வர்க்கம், தனது தலைவிதியை உதிரிப் பாட்டாளிகள் தீர்மானிப்பதைக் கண்டு வானொலியின் முன் உறைந்து நிற்க மட்டுமே முடியும்.

இந்தத் தேர்தல் வெற்றி கட்சியின் அங்கீகாரத்தைக் காப்பாற்றி விட்டதால் இராமதாசு, வை.கோ. ஆகியோரின் அரசியல் விபச்சாரம் புனிப்படுத்தப்பட்டு விட்டது: ''ஜெயலலிதாவுடன் அரசியல் கூட்டு வைப்பது சகோதரியுடன் உறவு கொள்வதற்குச் சமம்'' என்று முகம் சுளித்த இராமதாசு மேற்படி உறவுக்கு ''சமூக அங்கீகாரம்'' கிடைத்து விட்டதால் முகமலர்ந்திருக்கிறார். தான் கொள்ளையடித்த சொத்துக்குக் கணக்கு காட்ட ஜெயலலிதாவுக்கு இனி மைசூர் மகாராஜாக்கள் தேவையில்லை; அவை தனது வாக்காளர்கள் தந்த அன்பளிப்பு எனக் கூறிவிடலாம்.


அரசியல் பிழைப்புவாதம், அரசியல் ஒழுக்கக் கேடு, அரசியலற்ற காரியவாதம், கிரிமினல் அரசியல், இலஞ்ச - ஊழல் ஆகிய சீரழிந்த பண்பாடுகளின் முதுகிலேறி வெற்றி பெற்றுள்ள பாசிச பாரதிய ஜனதா கும்பல், தேர்தலுக்கு முன் தொகுதிப் பங்கீடு செய்து கொண்டதையே தனது அரசியல் ஒழுக்கத்தின் சான்றாகத் தம்பட்ட மடிக்கிறது. அறுதிப் பெரும்பான்மைக்காகக் கையில் பணப்பெட்டியுடன் அலையும் காங்கிரசு - பாரதீய ஜனதா தலைவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது ''யார் ஒழுக்கசீலர்கள்'' - என்று அனல் பறக்க விவாதிக்கிறார்கள். கையில் பணப்பெட்டி எதற்கு என்று கேட்டால் அவர்கள் ஒரே குரலில் பதிலளிக்கிறார்கள்: ''தேசிய நலனை முன்னிட்டு ஒழுக்கக் கேடு தவிர்க்க இயலாதது.''

படிப்பகம்

www.padippakam.com

## கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை நூற்றிஐம்பது ஆண்டு நிறைவு விழா!

# காலத்தை வென்று ஒலிக்கும் போர்ப் பேரிகை



"ஐரோப்பாவை ஆட்டுகிறது ஒரு பூதம் - கம்யூனிசம் எனும் பூதம். போப்பாண்டவரும், ஜார் அரசனும்... ஜெர்மன் உளவாளிகளும், பழைய ஐரோப்பாவின் சக்திகள் அனைத்தும் இந்தப் பூதத்தை ஓட்டுவதற்காகப் புனிதக் கூட்டு சேர்ந்திருக்கின்றன."

— என்று துவங்குகிறது கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை. 1848 பிப்ரவரியில் லண்டனில் உள்ள ஒரு சிறிய அச்சகத்திலிருந்து வெளியிடப்பட்ட இந்தச் சிறிய வெளியீடு, ஐரோப்பாவை மட்டுமல்ல உலகத்தையே பிடித்து ஆட்டத் தொடங்கியது.

அறிக்கை வெளிவந்து இன்று 150 ஆண்டுகள் நிறைவடைந்த பின்னும் உலகைப் பிடித்து ஆட்டிக் கொண்டுதானிருக்கிறது.

இத்தகையதோர் வரலாற்று ஆவணம் உருவான 19-ம் நூற்றாண்டு ஒரு கொந்தளிப்பான காலம். 1831 நவம்பரில் பிரான்சின் நெசவாளர்கள் ஆயுதமேந்திப் போராடத் தொடங்கினர். அவர்கள் இராணுவத்தால் நசுக்கப்பட்டனர். எனினும் பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்குமிடையிலான இந்த மோதல் ஐரோப்பா முழுவதிலுமிருந்த மன்னர்களையும் முதலாளிகளையும் நடுங்கச் செய்தது.

நெசவாளர்களின் ஆயுத எழுச்சியை நேரில் கண்ட ஒரு ஆளும் வர்க்க சித்தாந்தவாதி கீழ்க்கண்டவாறு அபாயச்சங்கு ஊதினார்:

"செல்வந்தர்களின் ஆதாயத்திற்காக மட்டுமே நீங்கள் வியர்வை சிந்துகிறீர்கள். ஆலை முதலாளிகள்தான் உங்கள் இயற்கையான எதிரிகள்... ஆனால் நீங்கள்தான் எண்ணிக்கையில் மிகவும் பெரியவர்கள்; மிக வலிமையானவர்கள். ஒன்று சேருங்கள்! என்று தொழிலாளர்களை நோக்கிச் சொல்பவர்கள் தோன்றுவார்கள்."

ஆம்! ஆனால் அவர்கள் ஏற்கனவே தோன்றியிருந்தார்கள். அவர்கள் தேவ தூதர்கள் அல்ல; வரலாறு ஈன்றெடுத்த பிள்ளைகள். அவர்கள் தங்கள் வசனத்துக்கு மரியாதை சேர்க்க எந்தத் தேவனையும் துணைக்கு அழைக்க வில்லை.

"முந்தையை உலகக் கண்ணோட்டம் மற்றும் முந்தைய வரலாற்றின் தர்க்க ரீதியான, வரலாற்று ரீதியான, அவசியமான தொடர்ச்சி என்ற வகையில் நமது கோட்பாடுகளை வளர்த்து ஒரு சில படைப்புகளில் வடிக்காத வரை உண்மையான தெளிவு மக்களுக்கு இருக்காது. பெரும்பான்மையினர் இருளில் குழம்பித் திரிவார்கள்" - என்று 1844 அக்டோபரில் எங்கெல்சிற்குக் கடிதம் எழுதினார் மார்க்ஸ்.

ஆம்! பலர் குழம்பித்தான் திரிந்தார்கள். டஜன் கணக்கிலான சோஷலிசக் கோட்பாடுகள் தோன்றின. "எல்லோரையும் பேரரசர்களாகவும் போப்பாண்டவர்களாகவும் மாற்ற விழையும்" இந்தப் போக்குகளை ஏளனம் செய்து சாடினர் மார்க்சும் எங்கெல்சும்.

மன்னர்களையும், தொழிலாளிகளையும் அவர்களுடைய கொள்ளையையும் இரட்டை வேடத்தையும் தனது குத்தீட்டி போன்ற சொற்களால் மார்க்ஸ் கிழித்துக் காட்டியவுடன் "உன்னுடைய தொழிலாளி வர்க்கம் மட்டுமென்ன, கலப்பற்ற சொக்கத் தங்கமோ?" என்ற கேள்வியை எழுப்பினார்கள் முதலாளித்துவ அறிஞர்கள். "சாதி, மதம், சுயநலம், குடி, சூது, ஆடம்பர மோகம் - என்று இவை அனைத்திலும் ஊறிக்கிடக்கும் உன்னுடைய தொழிலாளிகளா புரட்சி செய்யப் போகிறார்கள்?" என்பதுதானே புரட்சியாளர்களை நோக்கி மார்க்சிய எதிர்ப்பாளர்கள் அனைவரும் எழுப்பும் கேள்வி.

"தூக்கியெறியும் (பாட்டாளி) வர்க்கத்தால் புரட்சியின் போது மட்டுமே தன்னிடமிருந்து பழைய ஆபாசம் முழுவதையும் விட்டொழித்து சமுதாயத்தின் புதிய அடிப்படையை தோற்றுவிக்க வல்லதாக மாறமுடியும்"...

"உழைக்கும் வர்க்கங்கள் இயற்கையை வென்றுவிட்டன. இனி அவர்கள் மனிதர்களை வெல்ல வேண்டும். இந்த முயற்சியில் வெற்றி காண அவர்களுக்கு வலிமை தேவையில்லை. ஆனால் அவர்களது பொதுவான வலிமையை ஸ்தாபனப்படுத்துவதுதான் தேவைப்படுகிறது" என விடையளித்தார் மார்க்ஸ்.

தொழிலாளி வர்க்கத்தை அமைப்பாக்கும் வேலையை மார்க்சும், எங்கெல்சும் முன்நின்று செய்தார்கள். அனைத்துலகக் கம்யூனிஸ்டு கழகத்தை ஏற்படுத்தினார்கள். பல்வேறு விதமான கற்பனைச் சோசலிசப் போக்குகளுக்கு எதிராகத் தங்களது விஞ்ஞான சோசலிசக் கோட்பாடுகளை முன்வைத்து அக்கழகத்தின் இரண்டாவது காங்கிரசில் வாதாடினார்கள்.

அறிக்கை எழுதும் பொறுப்பை கழகம் அவர்களிடம் ஒப்படைத்தது. பிறகு அறிக்கை அக்கழகத்தால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

"இந்தச் சிறு பிரசுரம் மிகப்பெரிய நூல் தொகுதிகளுக்குச் சமமானது" என்று பின்னாளில் குறிப்பிட்டார் லெனின். மார்க்சியத்தின் அரசியல் பொரு



படிப்பகம்

www.padippakam.com

ளாதார, தத்துவ ஆயுதமாக விளங்கிய கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை வெளிவந்தவுடனே விற்றுத் தீர்ந்து விடவும் இல்லை. உலகைக் கவர்ந்துவிடவும் இல்லை. ஐரோப்பாவில் தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் வெற்றியையும் பின்னடைவையும் ஒட்டி அறிக்கை மீதான ஆர்வம் கூடிக் கொண்டும் குறைந்து கொண்டும் இருந்தது.

அறிக்கை வெளியிடப்பட்டு சுமார் 40 ஆண்டுகளுக்குப்பின் 1887-இல் மார்க்ஸ் இவ்வாறு எழுதினார்:

''ஒரு உலகப் போரைத் தவிர, அதுவும் இதுவரை கனவு கண்டிராத விரிவும் வன்முறையும் கொண்ட ஒரு உலகப் போரைத் தவிர வேறெந்தப் போரும் முடிவில் ஜெர்மனிக்குச் சாத்தியமில்லை... இளவரசர்களே, ராஜதந்திரிகளே உங்களுடைய ஞானத்தால் இன்று நீங்கள் ஐரோப்பாவை இங்குதான் கொண்டு வந்துள்ளீர்கள்.. போர் தற்போதைக்கு எங்களைப் பின்னணிக்குத் தள்ளலாம். நாங்கள் ஏற்கனவே பெற்றுள்ள சில சாதகங்களை அது எங்களிடமிருந்து பறித்துக் கொள்ளலாம். ஆனால் உங்களால் மீண்டும் என்றுமே கட்டுப்படுத்த முடியாத சக்திகளை நீங்கள் கட்டவிழ்த்து விடும்போது, நிகழ்ச்சிகள் அவற்றின் போக்கிலேயே நடைபெறட்டும். இந்த யுத்தத்தின் முடிவில் நீங்கள் நாசமாக்கப்படுவீர்கள். பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி அடையப்பட்டிருக்கும் அல்லது தவிர்க்க முடியாததாகியிருக்கும்.''

உண்மைதான்! பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி அடையப்பட்டு விட்டது ரசியாவில். முதல் உலகப் போரின் முடிவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தோற்றுவிக்கப்பட்டது. மார்க்சியமும், கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையும் எட்டுத் திக்கும் பரவத் தொடங்கின.

சமூக உறவுகளின் இயக்கத்தைப் பற்றியும் அதன் உள் உறவுகளைப் பற்றியும் துல்லியமாகப் புரிந்து கொண்டு விட்டால் நிலவுகின்ற சமூக அமைப்பு தான் நீடித்திருக்க முடியும் என்ற மாயை அகன்று விடும் என்றார் மார்க்ஸ். அத்தகைய புரிதல் இருந்தால் இயற்கை விஞ்ஞானத்தையொத்த துல்லியத்தை சமூக விஞ்ஞானமும் பெற முடியும் என்றார் எங்கெல்ஸ்.



தொழிலாளி வர்க்கம் அவ்வாறு புரிந்து கொள்வதன் அபாயத்தை பாரிஸ் கம்யூனிலும், ரசியப் புரட்சியிலும் முதலாளி வர்க்கம் பட்டுத் தெரிந்து கொண்டது. தத்துவத்துறையில் விஞ்ஞானத்தைத் திட்டமிட்டே புறக்கணிக்கத் தொடங்கியது. அறியொணா வாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது; ''வல்லாண்மைக்கான விருப்புறுதி'' எனக் கூறி காலனியாதிக்கத்தை நியாயப்படுத்தியது.

கீனிசியப் பொருளாதாரமும் போலி சோசலிசமும் வீழ்ச்சியடைந்ததை கம்யூனிசத்தின் வீழ்ச்சியாகச் சித்தரித்தது. தான் உருவாக்கிய, தனது சொந்த மதிப்பீடுகளைத் தானே நொறுக்க நேர்ந்த போது, தன்னுடைய முடிவு நெருங்கும்போது, ஏகாதிபத்தியம் இன்று அதை 'சித்தாந்தத்தின் முடிவு' என்று பிரகடனம் செய்கிறது.

லட்சிய வீடு, லட்சியக்கார், லட்சிய வேலை, லட்சியத் தொலைக்காட்சி.... எல்லாவற்றையும் அடைய முடியும். லட்சிய சமூகம் ஒன்றை மட்டும் அடைய முடியாது என்கிறார்கள் ஏகாதிபத்தியத்தின் தத்துவஞானிகள். ''கம்யூனிசம் பற்றிக் கனவு காண்பவர்கள் இன்றைய சமூக சூழ்நிலையை உணராதவர்கள்'' என்று அனுதாபம் தெரிவிக்கிறார்கள் சில ஆய்வறிஞர்கள்.

''நாம் உயிர்வாழும் வாயு மண்டலம் நம் ஒவ்வொருவர் மீதும் 20,000 பவுண்டு சக்தியுடன் அழுத்திய போதிலும் நீங்கள் அதை உணர்கிறீர்களா என்ன? அது போலவே ஐரோப்பிய சமூகம் தன்னைச் சூழ்ந்து எல்லாப் பக்கங்களிலும் அழுத்திக் கொண்டிருந்த புரட்சிகர வாயுமண்டலத்தை 1848-க்கு முன் உணரவில்லை'' என்று கூறினார் மார்க்ஸ்.

1998-இலும் அப்படித்தான். தனது நலனுக்காக உலகப் பொருளாதாரத்தை ஒன்று சேர்க்கும் வல்லரசுகள், உலகத் தொழிலாளி வர்க்கம் மட்டும் ஒன்று சேரக் கூடாது என விரும்புகின்றன. ஆனால் விருப்பங்கள் மட்டும் வரலாற்றை இயக்கிச் செல்வதில்லை.

கம்யூனிசம் எனும் பூதம் மீண்டும் உலகை ஆட்டத் தொடங்கும். தனது உதடுகள் உச்சரித்த ''உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற முழக்கம் செயல் வடிவம் பெற்றதைக் காண அந்த ஆசான்கள் இல்லையே எனத் தொழிலாளி வர்க்கம் கண் கலங்கும். ■ சூரியன்

**''தனிச் சொத்தை நாங்கள் ஒழித்துக் கட்ட விரும்புகிறோம் என்று நீங்கள் கிலி கொண்டு பதறுகிறீர்கள். ஆனால் தற்போதுள்ள உங்களுடைய சமுதாயத்தில் பத்தில் ஒன்பது பங்கு மக்களுக்கு தனிச் சொத்து ஒழிக்கப்பட்டுவிட்டது; ஒரு சிலரிடத்தே தனிச் சொத்து இருப்பதற்கே காரணம், இந்தப் பத்தில் ஒன்பது பங்கு மக்களிடத்தே அது இல்லாது ஒழிந்ததுதான். ஆக சமுதாயத்தின் மிகப் பெரும் பகுதியோரிடம் எந்தச் சொத்தும் இல்லாதொழிவதையே தனக்குரிய அவசிய நிபந்தனையாய்க் கொண்ட ஒரு சொத்து வடிவத்தை ஒழிக்க விரும்புகிறோம் என்று எங்களை ஏசுகிறீர்கள்... ஆம், உண்மையில் அதுவேதான் நாங்கள் செய்ய விரும்பும் காரியம்.''**

*அட்டையில் 1848-இல் வெளியிடப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் முதல் பதிப்பின் முகப்பு*


படிப்பகம்

www.padippakam.com

## ராஜீவ் கொலை வழக்கு:

# நீதிமன்றம் நடத்திய மோதல் கொலை?

நீதித்துறை சுயேச்சையானது, அரசியல் தலையீடுகளுக்கு அப்பாற்பட்டது என்ற மயக்கத்தில் கிடந்தவர்கள் முகத்தில், அரசு தரப்பு ஆறரை ஆண்டுகளாக மென்று விழுங்கியதை வாந்தியெடுத்து விழிக்க வைத்திருக்கிறது நீதித்துறை.

ராஜீவ் கொலைக்குக் காரணமானவர்கள், உடந்தையானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேருக்கும் மொத்தமாக மரண தண்டனை வழங்கிய நீதிபதி நவநீதம், இதற்காகவே அல்லும் பகலும் கொல்லும் வெறியுடன் 'உழைத்த' சிறப்புப் புலனாய்வுக் குழுவினர், இவர்களது செயல்பாடுகளை துணிச்சலானது என வாழ்த்தி வரவேற்கின்றனர் அரசியல் கட்சிப் பிரபலங்கள்.

''சட்டத்தின் தொப்புள் கொடி ஆளும் வர்க்கத்தின் அடிவயிற்றிலிருக்கிறது, அங்கிருந்துதான் அது ஊட்டம் பெறுகிறது'' என்ற உண்மை புரியாதவர்களுக்கு நீதிபதி நவநீதம் நெற்றியிலடிக்கும் வசனம் இதுதான், ''இது போன்ற பயங்கரமான குற்றங்களில் ஈடுபடும் தீவிரவாத அமைப்புகளோடு கைகோர்த்துக் கொள்ள விரும்புகிறவர்களை இதுபோன்ற கடுமையான தண்டனைகளே தடுத்து நிறுத்தும்.''

ஒரு கொலை வழக்கில் கொலை நடந்ததற்கான காரணத்தையும் விரிவாக ஆராய்வதுதானே நீதித்துறையின் வேலை. ஆனால் நீதித்துறை தானே உருவாக்கிய குற்றவியல் சட்ட முறைகளையும் மதிக்காமல், கடைபிடிக்காமல், கைது செய்த ஆண்டின் கடைசி நாளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து, பின் ஆறுமாதம் கழித்து குற்றம் சுமத்தி, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு குற்றப்பத்திரிகை நகல் தராமல் இழுத்தடிக்கப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வழக்குரைஞர்கள் குறுக்கு விசாரணை செய்வதற்கான முறைகள் மாற்றப்பட்டு, எப்படியும் இருபத்தியாறு பேரையும், தீர்த்துக் கட்டவேண்டும் என்ற வெறியோடு அரசு தரப்பாகவே செயல்பட்டிருக்கிறது நீதிமன்றம். இந்த விசாரணை முறையில் அவர்களின் சாயத்தை அவர்களே வெளுத்துக் கொண்டார்கள்.

குற்றவாளிகள் எனக் கருதப்பட்டவர்களில் 12 பேர் விசாரணைக் காலக் கட்டத்திலேயே உயிரிழக்க வைக்கப்பட்டனர். எத்தனை வேகம், எத்தனை விறுவிறுப்பு! நாட்டின் நலனுக்கே உலைவைக்கும், பீரங்கிபேர ஊழல் விசாரணையில் இந்த வேகத்தைக் காண முடியவில்லையே ஏன்? தொண்ணூறு கோடி இந்திய மக்களின் உயிர் ஒரு ராஜீவ் காந்தியின் மயிருக்குச் சமம் என்ற மமதையா? இருக்கலாம். வேதத்தையும் சட்டத்தையும் கேள்வி கேட்கும் உரிமை நமக்கேது?

இரண்டும் பொருந்தும் அழகைக் கண்டு உச்சி மோந்த இந்தியா டுடே, ராஜீவ் கொலை வழக்கு தீர்ப்பை ''தெய்வம் நின்று கொல்லும்'' என்று உவக்கிறது.

''துப்பாக்கி ஈட்டியை செயல் திட்டமாக மாற்றினார்கள்,'' என்று ஜெர்மானிய அரசியலமைப்புச் சட்டத்தை அம்பலப்படுத்தினார் கார்ல் மார்க்ஸ். ஒரு கொலைக் குற்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் பங்கு, எந்த நிலையில், எந்த மாதிரி குற்றமிழைத்தார்களோ, அதற்கேற்ற தண்டனை என்று அவர்கள் உருவாக்கிய எந்த முறையையும் பின்பற்றாமல் ''ராஜீவ் கொலையா வெட்றா தி.மு.க. கொடி கம்பத்தை'' என்று களம்புகுந்த காங்கிரசு காலிகளைப் போல, நீதிபதி நேருக்கு நேர் இருபத்தியாறு பேரையும் வெட்டித் தள்ளாததுதான் பாக்கி. அப்படிப்பட்ட வெறித்தனத்தின் சட்டபூர்வமான வடிவம்தான் ராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பு.

குற்றவியல் நடைமுறைகள் மீறப்பட்டன; அவ்வாறு மீறுவதற்காகவே உருவாக்கப்பட்ட தடா சட்டம் காலாவதியான பிறகும் விசாரணைக்குப் பயன்படுத்தப்பட்டது; மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் 'குற்றவாளிகள்' தான் என்று ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை; ஜெயின் கமிசன் விசாரணையின் முடிவுகள் மீது என்ன நடவடிக்கை என்று தெரியாமலேயே அதற்கு இணையாகவும், குறுக்குச்சால் ஓட்டுவது போலவும் இந்தத் தீர்ப்பு வருகிறது... — என்று முரண்பாடுகள் பல உள்ளன.

இத்தனையும் கடந்து ஒரு கேள்வி இருக்கிறது. சொந்த ஆதாயத்துக்காகவோ வேறு காரணங்களுக்காகவோ அல்லாமல் அரசியல் நடவடிக்கையாக செய்யப்படும் ஒரு கொலைக்கு மரண தண்டனை விதிக்க முடியுமா என்பதே அந்தக் கேள்வி.

சிறீகாகுளம் ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்ற புரட்சியாளர்களான கிஸ்தா கவுடா, பூமையா என்ற இரு விவசாயிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உச்சநீதி மன்றமே உறுதி செய்தது.

பீகார் எம்.சி.சி. எனும் புரட்சிகரக் கட்சியின் 8 விவசாயிகளுக்கு அண்மையில் மரண தண்டனை விதிக்கப்பட்டு மேல் முறையீட்டில் உள்ளது.

இந்திரா கொலை வழக்கில் இவ்வாறு தூக்கு தண்டனை வழங்கப்பட்டது. இப்போது ராஜீவ் கொலை வழக்கில் 26 பேருக்குத் தூக்கு தண்டனை.

ஒரு அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கும், அதை ஆதரித்தவர்களுக்கும் தூக்கு தண்டனை வழங்

**ராஜீவ் கொலையாளிகள் எனக் கருதப்படுவோர்க்கு உணவு கொடுத்தது கொலைக் குற்றம் என்றால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட போபால் மக்கள் விசவாயுவால் படுகொலை செய்யப்படக் காரணமான யூனியன் கார்பைடு அமெரிக்க அதிகாரிகளுக்கு விருந்து வைத்த ராஜீவுக்கு என்ன தண்டனை?**

**குற்றவாளிகள் எனக் கருதப்படுவோர் தப்பிக்க வாகனம் கொடுத்தது கொலைக் குற்றமென்றால், நாட்டின் பாதுகாப்புக்கே அபாயமான வகையில் பீரங்கி வாங்கிய ராஜீவுக்கு என்ன தண்டனை?**


படிப்பகம்

www.padippakam.com

கலாம் என்றால் இந்திய இலங்கை ஒப்பந்தம் என்ற அரசியல் நடவடிக்கையை நிலைநிறுத்தவதற்காக இராணுவத்தை அனுப்பி பல்லாயிரம் கொலைகளுக்கும் பாலியல் வன்முறைக்கும் காரணமாக இருந்த ராஜீவ் மீதும், குற்றமிழைத்த ராணுவத்தினர் மீதும் என்ன நடவடிக்கை? அவர்களுக்கு என்ன தண்டனை?

ராஜீவ் கொலையாளிகள் எனக் கருதப்படுவோர்க்கு உணவு கொடுத்தது கொலைக் குற்றம் என்றால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட போபால் மக்கள் விசவாயுவால் படுகொலை செய்யப்படக் காரணமான யூனியன் கார்பைடு அமெரிக்க அதிகாரிகளுக்கு விருந்து வைத்த ராஜீவுக்கு என்ன தண்டனை?

குற்றவாளிகள் எனக் கருதப்படுவோர் தப்பிக்க வாகனம் கொடுத்தது கொலைக் குற்றமென்றால், நாட்டின் பாதுகாப்புக்கே அபாயமான வகையில் பீரங்கி வாங்கிய ராஜீவுக்கு என்ன தண்டனை?

செத்த பின்பு இறந்தவரின் எலும்புகளை எடுத்து கருமம் செய்வது இந்து மதக் கலாச்சாரம். செத்தவனுக்காக இருப்பவர்களின் எலும்பை எடுப்பது காங்கிரசு கலாச்சாரம். அன்று இந்திராவுக்காக சீக்கியரின் எலும்பு. இன்று ராஜீவுக்காக தமிழர்களின் எலும்பு. காங்கிரசின் கருமம் முடிக்க கடைசியாய் வந்திருக்கும் சோனியா ''சீக்கியர்களிடம் தனது வருத்தத்தையும், மன்னிப்பையும்'' கோரி வாக்கு கேட்கிறார்.

பாபர் மசூதி இடிப்பிற்காக இசுலாமிய மக்களிடம் மன்னிப்புக் கேட்கிறது காங்கிரசு. பஞ்சாபிலும், தில்லியிலும் கொல்லப்பட்ட சீக்கியர்கள், உ.பி.யிலும் பம்பாயிலும் வேட்டையாடப்பட்ட இசுலாமியர்கள் பல ஆயிரம் பேர்.

பல்லாயிரம் பேரைக் கொன்றுவிட்டு ஒரு 'மன்னிப்பு' கேட்டால் போதும் என்றால், ''ராஜீவ் கொலைக்காக ஒரு வேளை புலிகள் வருத்தம் தெரிவித்தால் விட்டுவிடுவீர்களா?'' என்று தனியார் தொலைக்காட்சி பேட்டியொன்றில் காங்கிரசு தலைவர் ஒருவரிடம் கேள்வி எழுப்பினார் ஒரு பெண் நிருபர். ''அதை சோனியாதான் முடிவு செய்ய வேண்டும்'' என்றார் அந்த காங்கிரசு தலைவர்.

நல்ல பதில்! அப்படியானால் அந்த உரிமை தாலியறுத்த ஈழத்துப் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டுமே!

● சுடர்விழி

## தோழர் கே.வி.ஆருக்கு சிவப்பு அஞ்சலி!

கே.வி.ஆர். என்று மூன்றெழுத்துக்களால் அறியப்பட்ட தோழர் கே.வி. ரமணா கடந்த சனவரி 15-ஆம் நாள் விடியல் நேரத்தில் மறைந்துவிட்டார். புரட்சிக் கவி சுப்பாராவ் பாணிக்கிராகி காங்கிரசு ஆட்சியில் கொல்லப்பட்டபோது ஆயுதமாய் உயர்த்திய பேனாவோடு 'விரசம்' (புரட்சி எழுத்தாளர் சங்கம்)-ல், புரட்சிக் களத்தில் இறங்கிவிட்டார் கே.வி.ஆர். 4.7.70-ல் விரசம் பிறந்தபோது கே.வி.ஆரும் உடனிருந்தார். 'விரசத்'தோடு கே.வி.ஆர். முற்றாகப் புரட்சி வார்ப்பெடுத்த இலக்கியப் போராளியாக வடிவெடுத்தார்.

அவர் தொகுத்த புரட்சிக் கவிதைகள் தொகுப்பு (ஜன்ஜா) எழுபதுகளில் தடை செய்யப்பட்டது. கைதுகள், தேடுதல் வேட்டைகள், பொய் வழக்குகள், சித்திரவதைகளின் உச்சக்கட்டமாக 1974-ல் 40 புரட்சியாளர்கள், 6 புரட்சி எழுத்தாளர்கள் மீது செகந்திராபாத் சதி வழக்கு போடப்பட்டது. அதில் கே.வி.ஆர். ஒருவர். அவசரநிலைக் காலத்திற்கு முன்பாக 3 மாதச் சிறையும் அவசரநிலைக் காலத்தில் 21 மாதச் சிறையும் அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 1983-ல் அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டுக் கூட்டமைப்பு (AILRC) தொடங்கியபோது அதன் அமைப்புச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 85-ல் கோவாவில் அ.இ.பு.ப.கூ. (AILRC) சார்பாக பத்திரிகையாளர் சந்திப்பின் போது தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணய உரிமை தேவை எனப் பேசியதற்காக அவர் மீது கோவா அரசு தேசத்துரோகக் குற்றச்சாட்டைச் சுமத்தி வழக்குப்போட்டது.

கே.வி.ஆர். உரிமை பற்றி கலை மூலமும் பேசினார்; கவிஞன் தன்னைப் பாதிக்கும் விஷயம் பற்றி கவிதையும் எழுதலாம், கட்டுரையும் எழுதலாம் அவை மக்கள் போராட்டத்துக்குப் பயன்பட வேண்டும் என்பதே முக்கியம் என்றார்.

புரட்சிக் கலாச்சார இயக்கம் வளரவும், விரிவு பெறவும் கே.வி.ஆர். அரும்பாடுபட்டார்; கடைசி சில நாட்களிலும் சிரிகாகுளம் உழவர் எழுச்சி நடந்த பகுதிகளுக்குச் சென்று வந்த கே.வி.ஆர். அங்கு நடந்த 'விரசம்' மாநாட்டிலே கலந்து கொண்டார். அப்போது 'விரசத்தின்' தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது நடந்து இரண்டே நாட்களில் கே.வி.ஆர். மறைந்துவிட்டார்.

மக்கள் கலைஞரும், புரட்சிக் கலாச்சாரத் தலைவருமான கே.வி.ஆருக்குச் சிவப்பு அஞ்சலி! ●

## புரட்சிக் கலைஞர் தோழர் (டோலக்) தயானந்துக்கு வீரவணக்கம்!

ஏழ்மையான ஒரு குடும்பத்தில் பிறந்த தயானந்து 1972-ல் புரட்சிக் கலாச்சார நடவடிக்கைகளால் ஈர்க்கப்பட்டு ஜனநாட்டிய மண்டலியில் இணைந்தார். எழுபதுகளில் கிராய்பள்ளி தியாகிகள் பற்றி எழுதி மேடையேற்றப்பட்ட ஒக்குகதாவான 'நக்சல்பாரிபிட்டலு' (நக்சல் குழந்தைகள்) இசை நாடகம் ஆந்திரம் முழுவதும் பலநூறுமுறை அரங்கேறியது. அந்த நாட்டுப்புறக் கலை வடிவத்தைப் புரட்சி உள்ளடக்கம் கொடுத்துப் பரப்பியவர்களில் தயனாந்தும் ஒருவர். 85 - 89 பாசிச என்.டி.ஆர். ஆட்சியின் போது 'ஆட்ட, மாட்ட, பாட்ட பந்த்' - (ஆடல், பேச்சு, பாடலுக்குத் தடை) விதிக்கப்பட்டது ஜ.நா.ம. தலைமறைவு அமைப்பாகச் செயல்படத் தொடங்கியது; அச்சமயம் வெளிப்படையாக இருந்து வேறு வடிவங்களில் கலை மூலம் பிரச்சாரம் செய்தவர்களில் முக்கியமானவர் தயானந்து. தலைமறைவு - வெளிப்படை இருவிதமான வாழ்க்கையும் வாழ்ந்தவர் புரட்சிக் கலைஞன் தயானந்து.

கடந்த டிசம்பர் 29 விடியல் நேரத்தில் ஐதராபாத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் தயானந்து இறந்து விட்டார். அவரது மறைவு இயற்கையானதல்ல. டெல்லியில் டிசம்பர் 4 அன்று இசைக்கருவிகளுக்கான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு, அந்நாட்களில் ஒரு நாள் இரவு சிறுநீர் கழிக்க வெளியே சென்றவரை அரசு கடத்திச் சென்று விட்டது. 15 நாட்கள் தேடியும் கிடைக்கவில்லை. மிக மோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டுக் குற்றுயிராய் ஐதராபாத்தில்தான் மறுபடி அவர் காணப்பட்டார். மருத்துவமனையில் முதலில் சேர்க்கப்பட்டுத் தேறிய பிறகு நடந்ததைச் சொல்வதாகத் தயானந்து கேட்டுக் கொண்டாரே தவிர, அவர் தேறவில்லை; இடையே ஒரு நாள் டெல்லி போலீசும், ஐதராபாத் குஷய்குடா போலீசும் செய்த சித்திரவதையால் தான் சாவதாகச் சொன்னார்.

தோழர். தயானந்தின் நினைவுகள் சுரண்டும் வர்க்கங்களுக்கெதிராகச் சீறிச் சினந்தெழும் ஒடுக்கப்பட்டோர் நெஞ்சங்களில், அவர்களுக்காக இசை மீட்டும் கலைஞர்களின் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும்! ●



படிப்பகம்

www.padippakam.com

## சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம்:

# பரிசுத்த ஆவிகளும் பாவிகளின் ஆவிகளும்

பாவத்தின் சம்பளம் மரணம். மரணத்தைச் சம்பளமாகப் பெற்ற பாவிகளையே மேல்சாதிப்பாவிகள், கீழ்சாதிப் பாவிகள் என இரண்டு ரகமாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள் திருச்சி நகரில்.




திருச்சி - வேர்ஹவுஸ் சுரங்கப்பாதை அருகேயுள்ள கிறித்துவ மயானத்தின் குறுக்கே 600 அடி நீளச் சுவர் ஒன்று சீன நெடுஞ்சுவர் போல நின்று கொண்டிருக்கிறது. சுவரின் தெற்கே ரோமன் கத்தோலிக்க மேற்குல கிறித்தவர்கள் கல்லறை; வடக்கே உத்தரிய மாதா கோயில் மயானம் என்றழைக்கப்படும் தாழ்த்தப்பட்டோருக்கான கல்லறை.

அந்தச் சுவரை இடிக்கவொட்டாமல் அதற்கு முட்டுக் கொடுத்து நின்று கொண்டிருக்கிறது ஒரு சங்கம். அதன் பெயர் ரோமன் கத்தோலிக்க மேற்குல கிறித்துவ கல்லறைச் சங்கம்.

கல்லறைச் சங்கம் என்பதால் செத்துப் போனவர்களின் ஆவிகள்தான் கமிட்டி உறுப்பினர்களோ என்று எண்ண வேண்டாம். ரத்தமும் சதையுமாக (அப்பமும் ஒயினுமாக) உயிரோடிக்கும் 'பாவிகள்'தான் உறுப்பினர்கள். சரியாகச் சொன்னால் வெள்ளாளக் கிறிஸ்தவப் பாவிகள்; இன்னும் குறிப்பாகச் சொன்னால் ''தாழ்த்தப்பட்டோர் வீடுகளில் மட்டுமே இனி சாப்பிடுவேன்'' என்று சபதம் செய்திருக்கும் மூப்பனார் அவர்களைத் தலைவராகக் கொண்ட த.மா.கா. எம்.பி. அடைக்கலராஜ உறுப்பினராகக் கொண்டிருக்கும் சங்கம் அது.

உயிரோடிருப்பவர்கள் தங்கள் சொந்த நன்மைக்காக சங்கம் வைத்து நடத்துவதே பெரும்பாடாக உள்ள இந்தக் காலத்தில், பிணங்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு சங்கம் வைத்து நடத்துகிறார்கள் என்றால் அதற்குப் பின்னால் நிச்சயமாக ஒரு லட்சியவெறி இருக்க வேண்டும். அந்த வெறி சாதிவெறி; அந்த லட்சியம் தீண்டாமை. அதுவும் நகர்ப் புறத்தில் தனி மயானத்தைச் சுவர் எழுப்பி நிலைநிறுத்துவது என்றால் அது வரம்புகடந்த சாதித்திமிர்.

சாதித்திமிர் அடையாளமான இந்தச் சுவரை இடித்துத் தள்ளுவோமென திருச்சி நகர புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியும் மக்கள் கலை இலக்கியக் கழகமும் - அறிவித்துள்ளன. எனினும், இந்தச் சுவர் ஏற்கனவே இடித்துத் தள்ளப்பட்டு மீண்டும் 'உயிர்த்தெழுந்த' சுவர்தான்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து தொடுக்கப்பட்ட சிவில், கிரிமினல் வழக்குகள் சாதி - மதம் - சொத்துடமை - சட்டம் இவற்றுக்கிடையிலான உள் உறவுகள் குறித்த ஒரு புரிதலை நமக்கு அளிக்கின்றன.

• •

''14.3.76 அன்று காலை சுமார் 7 மணியளவில் பாதிரியார் சைமன், பாதிரியார் ஜான் பீட்டர் ஆகியோர் தலைமையில் ராஜமாணிக்கம், சந்தியாகு, டேவிட், பால்ராஜ் மற்றும் 17 பேர் கத்தோலிக்க மேற்குல கிறித்தவர்கள் கல்லறைக்கும், அரிசன கிறித்தவர்கள் கல்லறைக்கும் இடையே இருந்த மேற்குல கிறித்துவர்களுக்குச் சொந்தமான சுவரை இடிக்கும் நோக்கத்துடன் சட்ட விரோதமாகக் கூடினர்.''

''கையில் பயங்கரமான ஆயுதங்களை வைத்திருந்த சுமார் 200 முதல் 300 பேர் அடங்கிய அந்தக் கும்பல் சுவரை இடித்துத் தள்ளியது. பிறகு அந்தக் கும்பல் மேற்குல கிறித்தவர்கள் மயானத்திற்குள் அத்துமீறி நுழைந்தது. பாதிரியார் சைமனும், ஜான் பீட்டரும் சில நிமிடங்கள் உரையாற்றினர். பின்னர் அந்தக் கூட்டம் கலைந்து சென்றது.''

கத்தோலிக்க மேற்குல கிறித்தவர்கள் சங்கம் கொடுத்த புகாரின் பேரில் காவல்துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகை 20 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற ''சுவர் இடிப்புப் போராட்டம்'' பற்றி மேற்கண்டவாறு கூறுகிறது.

மேற்குல கிறித்தவர் சங்கம் குற்றவியல் நீதிமன்றத்தில் வைத்த வாதம் கீழ்வருமாறு:

எங்களது மயானம் ஒரு தனியார் மயானம். கத்தோலிக்க மேற்குல கிறித்தவர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே அங்கே புதைக்க முடியும். எமது சங்கத்தின் உறுப்பினர்கள் எல்லாம் உயர்சாதி இந்துக்களாக இருந்து பின்னர் கிறித்தவர்களாக மதம் மாறியவர்கள்.

தாழ்த்தப்பட்டவர்களாக இருந்து கிறித்தவ மதத்திற்கு மாறியவர்களுடைய கல்லறை அருகாமையில் உள்ளது. இரண்டுக்கும் இடையிலான சுவர் பன்னெடுங்காலமாக உள்ளது. இந்தச் சுவர் மேற்குல கிறித்தவர் சங்கத்துக்கு சொந்தமானது. எங்களுக்குச் சொந்தமான சுவரை அவர்கள் இடித்து அத்துமீறி நுழைந்ததும் கிரிமினல் குற்றமாகும்.''

இந்த வழக்கை விசாரித்த முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு: 148, 447, 427 ஆகியவற்றின் கீழ் 'குற்றவாளி'களுக்குத் தலா ரூ. 50 அபராதமும் மூன்று வாரம் கடுங்காவல் தண்டனையும் விதித்துத் தீர்ப்புக் கூறினார்.

குற்றம் சாட்டப்பட்ட தாழ்த்தப்பட்ட கிறித்தவர்கள் இந்தத் தீர்ப்புக்கு எதிராக சென்னை நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர்.

''இடித்துத் தள்ளப்பட்ட சுவர் எங்களுக்குச் (தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களுக்கு) சொந்தமானது. கிறித்தவ மக்களிடையேயான சமத்துவம் என்ற கருத்துக்கு எதிரானதாக இந்தக் குறுக்குச் சுவர் இருந்ததால் அதை இடித்துத் தள்ளினோம்'' என்று வாதிட்டனர்.

மேற்குல கிறித்தவ மயானத்திற்கான



படிப்பகம்

www.padippakam.com

நிலம் வாங்கப்பட்டதற்கான கிரயப் பத்திரத்தின் நகலையும் அவர்கள் (13.3.1879 தேதியிட்டது) தாக்கல் செய்தனர். அந்தப் பத்திரத்தில் மேற்படி காலி மனையின் வடக்கு எல்லை ''பரயன் கல்லறை சுவர்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஆவணத்தை செசன்சு நீதி மன்றம் கணக்கில் எடுத்துக் கொண்டது. சுவர் மேற்குலத்தினருக்குத்தான் சொந்தம் என்பதற்கோ, சுவரை அவர்கள் தான் மராமத்து செய்து பராமரித்து வந்தார்கள் என்பதற்கோ உரிய ஆதாரம் இல்லாத காரணத்தினால் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்து தீர்ப்பளித்தது மாவட்ட குற்றவியல் நீதிமன்றம்.

ஆனால் இடிக்கப்பட்ட சுவர் மீண்டும் எழுப்பப்படாமல் இல்லை. மேற்குல கிறித்தவ மயானமும் புறம்போக்கு தான் என்ற அடிப்படையில் மீண்டும் அங்கே சுவர் எதுவும் எழுப்பக்கூடாது என 1978-இல் மாவட்ட ஆட்சியர் ஒரு உத்தரவு பிறப்பித்தார். ஆனால் அந்த உத்தரவுக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் இடைக்காலத் தடை பெற்று மீண்டும் சுவரை எழுப்பி விட்டனர் மேல்சாதி வெறியர்கள்.

மேற்குல கிறித்தவக் கல்லறை நிலம் தனியார் நிலமா, அரசு புறம்போக்கா? மாவட்ட ஆட்சியர் அதனை அரசுப் புறம்போக்கு என்று கூறுவதால் அரசுக்கெதிராக மேற்குல கிறித்தவர்கள் வழக்கு தொடுத்திருக்க வேண்டும்.

இங்கேதான் அவர்களது நரித்தனம் வேலை செய்கிறது. அரசுக்கெதிராக வழக்கு தொடுத்து தோற்றுவிட்டால் நிலம் பறி போவது மட்டுமல்ல, சுவரும் இருக்காது, சுவரைக் காவல் காக்க கல்லறைச் சங்கமும் இருக்காது.

எனவே அரசுக்கெதிராக வழக்கு தொடுப்பதற்குப் பதிலாக தாழ்த்தப்பட்ட கிறித்தவர்களுக்கெதிராக சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.


''வழக்கிடைச் சொத்து (மேற்குலக் கல்லறை நிலம்) சாதி கிறித்தவர்களுக்குச் சொந்தமானது... எதிர்வாதிகளோ அரிசன கிறித்தவர்களின் பிரதிநிதிகள். அவர்களுடைய மயானம் புறம்போக்கு ஆகும். இரண்டுக்குமிடையில் உள்ள

**''உயிரோடிருப்பவர்கள் தங்கள் சொந்த நன்மைக்காக சங்கம் வைத்து நடத்துவதே பெரும்பாடாக உள்ள இந்தக் காலத்தில், பிணங்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு சங்கம் வைத்து நடத்துகிறார்கள் என்றால் அதற்குப் பின்னால் நிச்சயமாக ஒரு லட்சியவெறி இருக்க வேண்டும். அந்த வெறி சாதிவெறி; அந்த லட்சியம் தீண்டாமை.''**

காம்பவுண்டு சுவர் உள்ளது. தேவையில்லாத சாதி உணர்வுகள் ஏற்பட்டு மேற்படி எல்லைக் கோட்டை இடித்தனர். வாதிகளின் (மேற்குலத்தினரின்) சொத்தில் அரிசன கிறித்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்தால் அமைதி குலையும். தேவையற்ற குழப்பங்கள் உண்டாகும். எனவே அந்நியர்கள் (அரிசன கிறித்தவர்கள்) எமது நிலத்தை ஆக்கிரமிக்காமலிருக்க நிரந்தர உறுத்துக் கட்டளை (Permanent injunction) பிறப்பிக்க வேண்டும்'' என மாவட்ட சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வெற்றியும் பெற்று விட்டனர்.

அரசு தரப்பில் ஆஜரான வருவாய்த்துறை அதிகாரிகள், 1924-ம் ஆண்டு வருவாய்த்துறை ஆவணங்களின் படி இது அரசு புறம்போக்குதான் என்றும், ஆனால் இது மேற்குல சங்கத்தின் மேற்பார்வையில் இருந்து வருவதும், நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மயானமாக உபயோகப்படுத்தப்பட்டு வருவதும் உண்மை என்று கூறியுள்ளனர். அது மட்டுமல்ல, இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் இந்த நிலத்தை அரசு கையகப்படுத்துவதற்கான விசாரணை நடந்தது என்றும், ஆனால் அது தொடர்பான கோப்புகளைக் காணவில்லை என்றும் அவர்கள் கைவிரித்து விட்டனர்.

புறம்போக்கு என நிரூபிக்க அரசு சாட்சிகள் உரிய ஆதாரம் ஏதும் தராததால் நிலம் மேற்குல கிறித்தவ சங்கத்திற்கே சொந்தம் என திருச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ''அந்நியர்கள் யாரும் தங்கள் மயானத்திற்குள் நுழையக் கூடாது என்றுதான் மேற்குல கிறித்தவர்கள் கூறியுள்ளனர். அவ்வாறு கூறுவது தீண்டாமைக் குற்றம் ஆகாது. மேலும், பாரம்பரியமாக தாழ்த்தப்பட்டோர் யாரும் அங்கே பிணத்தைப் புதைப்பதில்லை; மேற்குல கிறித்தவ சங்கத்தில் அவர்கள் உறுப்பினராகவும் இல்லை. எனவே தங்கள் சங்க உறுப்பினர்கள் மட்டுமே மயானத்தைப் பயன்படுத்தலாமென மேற்குலக் கிறித்தவர்கள் கூறுவது தீண்டாமைக் குற்றம் ஆகாது; அது அவர்களுடைய மரபுரிமை ஆகும்'' — என்றும் சிவில் நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது.



இவ்வாறாக தீண்டாமைக் கெதிரான ஒரு போராட்டத்தை சட்டம் கேலிக்கூத்தாக்கிவிட்டது.

தீண்டாமை பாராட்டுவது கிரிமினல் குற்றம்; அதே நேரத்தில் சொத்துரிமை அடிப்படை உரிமை. இதுதான் நம் அரசியல் சட்டம். ''தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளே நுழையக்கூடாது'' என்று எழுதி வைத்தால் அது தீண்டாமைக் குற்றம். ''அந்நியர்கள் அத்துமீறி பிரவேசிக்கக் கூடாது'' என்று கூறு



படிப்பகம்

www.padippakam.com

வது உரிமை. யார் அந்நியன் என்பதை சொத்துக்கு உரியவன்தான் முடிவு செய்ய வேண்டும். ''அந்நியர்கள்'' தாழ்த்தப்பட்டவர்களாக இருக்க நேர்ந்தால் அதற்காக அதனை தீண்டாமைக் குற்றம் என்று சொல்லிவிட முடியாது. சொத்துரிமை சாதியைப் பாதுகாப்பது இப்படித்தான்.

கிறித்தவ மதக் கோட்பாடுகளின் படி சாதி என்பது கிடையாது. ஆனால் இந்த மயானப் பிரச்சினையில் ''அது தனியார் சொத்து; அதில் மதம் எப்படித் தலையிட முடியும்'' என்கிறது ரோமன் கத்தோலிக்க மத நிறுவனம். அரசு நிலமாக இருந்தால் ''நடவடிக்கை எடு'' என்று அரசைக் கோரப் போகிறோம். அங்கே மதத்துக்கு வேலையில்லை. ஆனால் இடம் தனியாருக்கு - கிறித்தவருக்கு - சொந்தமாக இருக்கும் போது பிஷப் அல்லவா நடவடிக்கை எடுக்க வேண்டும்?

ஆனால் இடித்த சுவரை மீண்டும் கட்ட பணம் கொடுக்கிறார் பிஷப். பிஷப்புக்கு பைபிள் புனிதம்தான்; ஆனால் தனிச்சொத்து அதைவிடப் புனிதமாயிற்றே!

திருச்சி மயானப் பிரச்சினையில் மட்டுமல்ல, தீண்டாமைக்கெதிரான போராட்டம் ஒவ்வொன்றிலும் சொத்துரிமை குறுக்கிடுகிறது. கிராமப்புற கோயில் நுழைவுப் போராட்டங்களின் போது தீண்டாமையைச் சட்டப்படி நியாயப்படுத்த முடியாத ஆதிக்க சாதியினர் ''இது நாங்க பணம் போட்டு கட்டின கோயில். எங்களுக்கு விருப்பம் உள்ள ஆட்களைத்தான் உள்ளே விடுவோம். உங்களுக்கு தனிக்கோயில் கட்டிக்கிங்க'' என்று சொத்துரிமையைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஒரு புரட்சியின் மூலம் உடைமை உறவுகளில் மாற்றம் கொண்டு வராமல் சாதி - தீண்டாமையை ஒழிக்க முடியாது என்ற உண்மையைத்தான் இவை அனைத்தும் நிரூபிக்கின்றன.

புரட்சி செய்வது கம்யூனிஸ்டுகளின் வேலை; சாதி - தீண்டாமையை ஒழிப்பது எங்கள் வேலை - என்று புரட்சிக்கும் சாதி ஒழிப்புக்குமிடையில் கனமான சுவரொன்றை சில அறிஞர்களும், தலித் தலைவர்களும் எழுப்பியிருக்கிறார்கள். பல காரணங்களால் இது அவர்களுக்கு வசதியாக இருக்கலாம்.

ஆனால் இந்தச் சுவரை இடிக்காமல் கல்லறைக் காம்பவுண்டு சுவர்களை நிரந்தரமாக இடித்துத் தள்ளவியலாது.

• மருதையன்

*சாதி தீண்டாமை ஒழிப்பு இயக்கம்:*

# தனிக்குவளை தகர்க்கும் பண்ணைப்புரம் போராட்டம்

பண்ணைப்புரம் என்ற கிராமத்தை வாசகர்களுக்கு அறிமுகம் செய்யத் தேவையில்லை. இளையராஜா வாழ்ந்த பண்ணைப்புரத்தை வாசகர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். ஆனால் அவருடைய உறவினர்களும் இளமைக்கால நண்பர்களும் இன்னமும் வாழ்கின்ற பண்ணைப்புரத்தை வாசகர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

மதுரை மாவட்டத்தின் மேற்குப் பகுதியைச் சேர்ந்த பண்ணைப்புரம் கிராமத்தில் பண்ணையாரும் உண்டு; பண்ணையடிமைகளும் உண்டு. செத்துப்போன வடிவேல் கவுண்டர் எனும் கொடுங்கோல் நிலப்பிரபுவின் மகன் பிரசாத் என்பவர்தான் இப்போது பண்ணைப்புரத்தின் பண்ணை.

ஒக்கலிக கவுண்டர் - 400 குடும்பங்கள், பறையர் சமூகத்தினர் - 400 குடும்பங்கள், சக்கிலியர் சமூகத்தினர் - 150 குடும்பங்கள், செட்டியார், கள்ளர் போன்ற பிற 'மேல்' சாதியினர் சில குடும்பங்கள் - என்பதுதான் பண்ணைப்புரம் மக்கள் தொகையின் சாதி வாரியான சேர்க்கை.

நிலங்கள் மற்றும் சிறிய, நடுத்தர எஸ்டேட்டுகளும் வைத்திருப்போர் பெரும்பாலும் ஒக்கலிக கவுண்டர்கள். தாழ்த்தப்பட்டோரில் ஆகப்பெரும்பான்மையினர் நிலமற்ற கூலி விவசாயிகள் அல்லது எஸ்டேட் தொழிலாளிகள். பெரும் பண்ணையாரான பிரசாத்தின் பண்ணையில் சக்கிலியர், பறையர் சமூகத்தைச் சேர்ந்த பலர் பண்ணையடிமைகள். பறையர் சமூகத்தில் கிறித்தவர்களாக மதம் மாறியவர்கள் விவசாயம் தவிர சாதிரீதியான அடிமைத் தொழில்களெதுவும் செய்வதில்லை. மேலும் பறையர் சமூகத்தில் ஓரளவு படித்தவர்களும் உள்ளனர்.

இருப்பினும் பண்ணைப்புரம் தேநீர்க் கடைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு தனித் தேநீர்க் குவளைதான்; சக்கிலியர் சமூகத்தைச் சேர்ந்தவர்களோ கடைக்கு வெளியே ஒதுங்கி உட்கார்ந்துதான் தேநீர் குடிக்க வேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளூர் சலூனில் முடி திருத்த முடியாது; துணியும் சலவைக்குப் போட முடியாது. பண்ணைப்புரத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் இதுதான் நிலைமை.

இந்த இழிவைச் சகிக்க முடியாத தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் பலர் தேநீர்க் கடைக்குள் போவதில்லை; அல்லது தேவைப்படும்போது யாரையேனும் அனுப்பி வாங்கிவரச் செய்து குடித்துக் கொள்வார்கள்.

உள்ளூர்க்காரர்களுக்கு மட்டுமல்ல; சுமார் இரண்டாண்டுகளுக்கு முன் தாழ்த்தப்பட்டவர் வீட்டுத் திருமணத்துக்கு வந்த உறவுக்கார இளைஞர்கள் தேநீர் குடிக்கச் சென்றபோது அவர்களுக்கும் தனிக்குவளை தரப்பட்டது. டாக்டர் படிப்பு போன்ற உயர்கல்வி கற்ற அந்த இளைஞர்கள் மனம் குமுறி தங்கள் எதிர்ப்பைக் காட்டுமுகமாகக் காசைக் கொடுத்து விட்டு தேநீர் குடிக்காமல் சென்றிருக்கின்றனர்.

உள்ளூர் தாழ்த்தப்பட்ட மக்களை இப்படி ஒடுக்கும் சாதி வெறியர்களுக்கு அருகாமையிலுள்ள மீனாட்சிபுரத்து இளைஞர்கள் என்றால் மட்டும் நடுக்கம். சுமார் 8 மாதங்களுக்கு முன் தங்களுக்குத் தனிக்குவளை என்று புரிந்து கொண்ட மீனாட்சிபுரத்து தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் கூட்டமாகத் திரண்டு வந்து கடையை அடித்து நொறுக்கினர். மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த சீரங்கன் என்பவர் தனிக்குவளை தந்தால் உடனே வேல்கம்பால் பாய்லரை ஓட்டை போட்டுவிட்டுப் போய்விடுவார் என்றும் பழைய சம்பவங்ளை மக்கள் நினைவு கூர்கின்றனர்.

1956, 57 வாக்கில் இளையராஜாவின் சகோதரர் பாவலர் வரதராசன், சாமுவேல், கருப்பண்ணன், சின்னையா போன்ற ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து ''ராயல் உணவு விடுதி'' என்ற கடையில் சாதி ஒதுக்கலும் தீண்டாமையும் கடைப்பிடிக்கப்படுவதை எதிர்த்துப் போராடியுள்ளனர். அது பாவலர் கம்யூனிஸ்டு கட்சியில் இருந்த காலம். அதன்பின் 1972 வாக்கில் நக்சல்பாரி இயக்கத்தின் ஆதரவாளராக மாறிய பாவலர், தனது இறுதிக் காலத்தில் தி.மு.க.வில் இணைந்தார்; பின் 1976-இல் மரணமடைந்தார்.

தனித் தேநீர்க் குவளைக்கெதிராக யாராவது குரல் கொடுத்தால் பிரச்சினை பெரிதாகும் எனத் தெரிந்தால் உடனே தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கண்ணாடி கிளாஸ் வைப்பது, ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

அதில் லேசாக ஆணியால் கீறி அடையாளம் செய்து கொள்வது - பிறகு சிறிது நாளில் பழைய வடிவத்துக்கே திரும்பிவிடுவது என்பதுதான் பண்ணைப்புரத்தில் நடந்து வருகிறது.

சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தையொட்டி பண்ணைப்புரத்தில் தனி தேநீர்க் குவளை ஒழிப்புப் போராட்டத்தை அறிவித்தது விவசாயிகள் விடுதலை முன்னணி. தனித் தேநீர்க் குவளை வைப்பது சட்டப்படி குற்றம் என்பதைச் சுட்டிக்காட்டி அரசு அதிகாரிகளுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது.

பண்ணைப்புரத்தில் கடை வைத்திருப்பவர்கள் கவுண்டர், கள்ளர் சாதிகளைச் சேர்ந்தவர்கள். "31.10.97 அன்றுபோராட்டம்" என்று அறிவிக்கும் தட்டியைப் பார்த்தவுடன் சாதி வெறியர்களிடையே சூடு பரவத் தொடங்கியது. பண்ணையார் பிரசாத் வீட்டில் சாதி வெறியர்களின் சதியாலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது. இரவோடிரவாகத் தட்டிகள் எரிக்கப்பட்டன.

தட்டி எரிக்கப்பட்டது பற்றி புகார் கொடுக்கப்போன பண்ணைப்புரம் வி.வி.மு. தோழர் (கள்ளர் சாதியில் பிறந்தவர்) காவல் நிலையத்திலேயே கைது செய்யப்பட்டார்.

அதே நேரத்தில் கோம்பை நகரில் குத்தகை விவசாயியை வெளியேற்றிய TELC பாதிரியாருக்கு எதிராக வி.வி.மு. போராடிக் கொண்டிருந்தது. சமரசப் பேச்சுவார்த்தை நடத்தலாமென்று தோழர்களைக் காவல் நிலையத்திற்கு அழைத்துவந்து சுமார் 11 பேர் மீது பாதிரியா. ரைக் கொல்ல முயன்றதாக வழக்கு போட்டு சிறையில் அடைத்தது காவல்துறை.

இதுவன்றி கம்பம் வட்டாரம் முழுவதும் வி.வி.மு. தோழர்கள் தடுப்புக் காவலில் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டார்கள். முன்னணியாளர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு விட்டதால் போராட்டம் நடைபெறாது என்று பிரச்சாரத்தையும் போலீசே கட்டவிழ்த்துவிட்டது.

இருப்பினும் 31.10.97 காலை பண்ணைப்புரம் தேநீர்க்கடை வாயிலில் போலீசு இறக்கப்பட்டுவிட்டது. சாதிவெறியர்கள் சுமார் 300 பேர் கையில் கட்டைகளுடனும் கற்களுடனும் தயாராக நின்று கொண்டிருந்தனர். வரமாட்டார்கள் என்று சொல்லப்பட்டவர்கள் வந்தார்கள்; கையில் கொடியுடன் தீண்டாமைக்கெதிராக முழக்கமிட்டபடியே வந்தார்கள்; முன்னணியாளர்கள் சிறைபிடிக்கப்பட்டாலும் சோர்ந்து முடங்கிவிடாத தோழர்கள் வந்தார்கள்; எதிரில் கொலை வெறியுடன் நின்று கொண்டிருந்த சாதி வெறியர்களையும், கோபத்தால் துடித்துக் கொண்டிருந்த போலீசாரையும் சட்டை செய்யாமல் தேநீர்க்கடையை நோக்கி வந்தார்கள்; சாதி வெறியர்கள் வீசிய கற்கள் தலையில் பட்டுத் தெரித்தபோதும் பார்வை சிதறாமல் தேநீர்க்கடை நோக்கி வந்தார்கள்.

**போராட வந்த வி.வி.மு. தோழர்களில் பாதிப் பேர் தேவர் சாதிக்காரர்கள் என்பதை அங்கே கூடி நின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் கொஞ்சம் ஆச்சரியத்துடன் கவனித்தார்கள்; அதுவும் அவர்கள் சாதி வெறிக்கும், வெட்டு குத்துக்கும் பேர் போன கூடலூரிலிருந்து வந்தவர்கள் என்பதை உள்ளூர் மறவர்களும், கவுண்டர்களும் அதிர்ச்சியுடன் கவனித்தார்கள்.**

தனிக்குவளையைப் பாதுகாப்பதற்காகவே தருவிக்கப்பட்டிருந்த போலீசு அவர்களைப் பாய்ந்து மறித்துப் பிடித்தது. போராட வந்த வி.வி.மு. தோழர்களில் பாதிப்பேர் தேவர் சாதிக்காரர்கள் என்பதை அங்கே கூடிநின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் கொஞ்சம் ஆச்சரியத்துடன் கவனித்தார்கள்; அதுவும் அவர்கள் சாதி வெறிக்கும், வெட்டு குத்துக்கும் பேர் போன கூடலூரிலிருந்து வந்தவர்கள் என்பதை உள்ளூர் மறவர்களும், கவுண்டர்களும் அதிர்ச்சியுடன் கவனித்தார்கள்; இளையராஜாவின் வீட்டு வாசலில் நின்றபடியே இவையனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த அவரது மனைவி, கைது செய்யப்பட்ட தோழர்கள் வண்டியில் ஏற்றப்பட்டவுடன் காரில் ஏறிக் கிளம்பினார்.

*கைது செய்து கொண்டு போன தோழர்களை கோம்பை நகரத் தெருவில் வைத்து மிருகத்தனமாகத் தாக்கிக் குதறின காவல் நாய்கள், "திமிரெடுத்த பள்ளன் - பறையனையும், அவனுடன் கூடப் போகும் மானங்கெட்ட கள்ளனையும்" வாய்க்கு வந்தபடி ஏசவும் செய்தார்கள்.*

கைது செய்து கொண்டு போன தோழர்களை கோம்பை நகரத் தெருவில் வைத்து மிருகத்தனமாகத் தாக்கிக் குதறின காவல் நாய்கள், "திமிரெடுத்த பள்ளன் - பறயனையும், அவனுடன் கூடப்போகும் மானங்கெட்ட கள்ளனையும்" வாய்க்கு வந்தபடி ஏசவும் செய்தார்கள்.

போராட்டத்தில் பங்கு கொண்ட பண்ணைப்புரத்தைச் சேர்ந்த தேவர் சாதியிற்பிறந்த தோழர்களின் குடும்பங்களான சாதிவெறி கொண்ட பெண்கள் சாடை பேசினார்கள். "கொண்டு போய் மகளைப் பள்ளனுக்குக் கட்டிக் கொடு" என்று வைதார்கள். கட்டிக் கொடுக்கத் தயராக இருப்பவர்களை இந்த 'வசவு' ஆத்திரப்படுத்தாது என்பது கூட சாதிவெறி கொண்ட அந்த மண்டைகளுக்கு உரைக்கவில்லை.

போலீசாரின் சாதிவெறித் தாக்குதலைக் கண்டித்து கூடலூரில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் பேசினார் ஆண்டிப்பட்டி வி.வி.மு. தோழர் செல்வராசு, "சூத்திரன் என்றால் பாப்பாரின் வைப்பாட்டி மகன் என்ற மனு தர்ம ரகசியத்தை பெரியார் அம்பலப்படுத்தினார். தமிழக போலீசில் எத்தனை பேர் 'தேவடியா மக்கள்' என்று தெரியவில்லை. ஆனால் இந்த ஊரில் இன்னின்னார் இருக்கிறார்கள்" என்று பேசினார் செல்வராசு.

ஆத்திரம் கொண்ட போலீசு அதிகாரிகள் நள்ளிரவில் வீடு புகுந்து அவரது குடும்பத்தினரை மிரட்டினர். ராஜத்துரோக (124-A) குற்றத்தில் அவர்மீது வழக்கு போட்டனர்.

வசவுகள், தாக்குதல்கள், வழக்குகள்... அனைத்தும் ஒருபுறமிருக்க பண்ணைப்புரத்தில் தனிக்குவளை எடுக்கப்பட்டு விட்டது. பண்ணைப்புரத்தின் பண்ணையாருக்கும் சாதி வெறியர்களுக்கும் அடங்கி மவுனமாக இருந்த தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டிவிட்டார்கள். "இந்த ஊரில் தீண்டாமை இல்லை" என்று ஊர்க்கூட்டம் போட்டு எழுதிக் கையெழுத்து வாங்க பிரசாத் முயன்றபோது "முடியாது" என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்.

தனிக்குவளை எடுக்கப்பட்டதைக் காட்டிலும் முக்கியமான வெற்றி இதுதான்.

■ பாலன்



படிப்பகம்

www.padippakam.com

## சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம்:

# சேரியைத் தரிசித்த அம்மனுக்குச் சிறை!

விழுப்புரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் இருக்கும் அந்த கிராமத்திற்கு பெயர் காரப்பட்டு. ஊருக்குள் வரவேற்கும் வாய்க்கால் கரைக்கு எதிரே தாழ்த்தப்பட்டோர் சுடுகாட்டில் தலை நிமிர்ந்து அழைக்கிறது ஒரு கல்லறை. அங்கே விதை நெல்லாய் உறங்கும் ஒரு மனிதரை அந்த ஊரே தன் நெஞ்சில் நிறுத்தி மகிழ்கிறது. கம்யூனிசப் புரட்சியாளர் தோழர் ரெங்கநாதன் அவர்களின் கல்லறையை வர்க்கப் போராட்டத்தின் ஒரு மைல் கல் என்றால் மிகையில்லை. இனி அந்த ஊரின் திருத்தலப் பெருமையைப் பார்ப்போம்.

தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழைந்து வழிபட்டாலே ''அந்த சாமியே நமக்கு வேணாம், தூக்கி ஏறக் கட்டு'' என்பதுதானே பிற சாதியின் பக்தி நெறி. காரப்பட்டிலும் அதே நிலைமைதான். ஆனால் மற்ற கிராமங்களைப் போல வீச்சரிவாள், வேல் கம்போடு ஆதிக்க சாதி வெறியர்கள் ஆலவட்டம் போடாததற்கும் காரணமிருக்கிறது. பிறசாதி தெருவுக்குள்ளும் விவசாயிகள் விடுதலை முன்னணி கால் ஊன்றி இருக்கிறது. இரு தரப்பிலும் தன்னை அமைப்பாக்கிக் கொண்டவர்கள் இருக்கிறார்கள், வி.வி.மு. நடத்திய பல்வேறு விவசாயப் போராட்டங்களில் பிறசாதி தெருவிலுள்ள மக்களும் இணைந்து ஒன்றாகப் போராடி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட வர்க்க அமைப்பான வி.வி.மு. தலைமையில்தான் காரப்பட்டு கோயில் நுழைவுப் போராட்டம் நடந்தது.

இங்குள்ள ரெட்டியார்களும் உடையார்களும் கோயில் நுழைவுப் போராட்டத்தைக் கடுமையாக எதிர்க்க முன்வரவில்லை. வன்னியக் கவுண்டர்கள் வகையறாக்கள் தான் ஊர்கூட்டம், மனைப்பிரச்சினை என்று உருவேற்றிக் கொண்டிருப்பவர்கள். தாழ்த்தப்பட்டவர்களை ஒத்த வர்க்க நிலையில் இருக்கும் வன்னியக் கவுண்டர்கள் இந்த ஒன்றிலாவது தம்மை மேலானவர்களாக நிலை நிறுத்திக் கொள்ள விரும்பும் சாதி வெறியோடு இருக்கிறார்கள்.

காலமெல்லாம் உழைத்து, விளைவித்து ஊர் மகிழ்ந்து உற்சவம் காண யார் காரணமானவர்களோ, அந்த தாழ்த்தப்பட்ட மக்களின் காய்ப்பேறிய பாதங்கள் முதன் முறையாக கோயிலை மிதித்தபோது, அதுவரை 'மேல்'சாதி அர்ச்சனையில் மெய் மறந்து கிடந்த ஆத்தாளுக்கு, புரட்சியின் முழக்கத்தில் மெய் சிலிர்க்கும் அருள் கிடைத்தது. ஆர்வம் பொங்க, ''ஏய் இன்னைக்கு தாண்டா மனசு குளிந்துச்சு. இன்னைக்கு நடந்த மாதிரி எல்லா ஜனங்களும் சேர்ந்து படையல் போட்டா தாண்டா ஏத்துக்குவேன்'' என்று தாழ்த்தப்பட்ட பெண் மேல் வந்த 'சாமி' சாதி ஒழிப்பை வேண்டியது. பதிலுக்கு, ''ஏய் நொழஞ்சிட்டீங்களா, கால வச்சிட்டீங்களா, என் ஒடம்பெல்லாம் பொச பொசன்னு எரியுதுடா, இனிமே நான் இருக்க மாட்டேன்டா'' என்று பிற சாதி பெண்மேல் சாமி வந்து தனது சாதி புத்தியைக் காட்டியது.

சாதிக் கட்டுப்பாட்டை மீறிய பிறகு சாமிக்கு சந்தனக் காப்பு எதற்கு? தந்தனத்தான் பாட்டெதற்கு? என்று கோயில் பக்கத்தை விட்டு விலகிக் கொண்ட பிற சாதியினர், கோயிலுக்கு இதுநாள் வரை இலவசமாய் கொடுத்த மின்சாரத்தையும் பிடுங்கி அருள்மிகு அம்மனை இருள்மிகு தனிமையில் தள்ளி பூட்டுப் போட்டு விட்டனர்.



பூட்டப்பட்ட காரப்பட்டு அம்மன் கோவில்

தெருவுக்குள் நுழைந்த நம்மிடம் இன்னும் கோயில் நுழைவு போராட்ட அதிர்ச்சியிலிருந்து மீளாத முதியவர் பண்டரிநாதன் தனது மனக்குமுறலைக் கொட்டினார், ''சுத்து பத்துல உள்ள எல்லாரும் இந்த கோயிலுக்கு வருவாங்க. இப்ப இப்படி ஆயிப்போச்சு. ஒரு பெங்களூர்காரரு அவரும் கவுண்டர்தான், வந்து செலவு பண்ணி முயற்சி எடுத்து கட்டுண கோயிலு சார் இது. அவரு பம்பாய் இன்னும் பல எடத்துல அடகு கடை வச்சிருந்தாரு, இன்னும் இது தெரிஞ்சு வந்து பாக்குல, எந்த காலத்துலயும் இப்படி நடக்குல, கட்சிகாரர்களோட இந்த ஊர்கார பசங்களும் சில பேர் சேர்ந்துட்டு சேரி ஆளுங்களை அழைச்சிட்டு போயிட்டானுங்க. யார் இதை கேக்கறது. ஒரு திரையும் இல்ல, மொறயும் இல்ல எப்பவும் நடக்காத விஷயம் நடந்து போச்சு, என்னத்த சொல்றது?'', எப்போதும் எதுவும் நடக்காது என இறுமாந்து இருக்கும் அதிகாரத்தை தலைகீழாகப் புரட்டிப்போடுவது தான் புரட்சி என்பது அவருக்கு புரியவில்லை போலும். ஆனால் அதைப் புரிந்து கொண்டு விட்டார்கள் தாழ்த்தப்பட்ட இளங்குருத்துக்கள் ''நாங்களும் அன்னைக்கு கோயிலுக்கு போனோம். ஜாலியா ஓடுனோம், குதிச்சோம். திரும்பவும் போயி வெளையாடுவோம்'' இது 3-ஆம் வகுப்பு படிக்கும் சிறுமிகளின் போராட்ட மகிழ்ச்சி. ஆம்! புரட்சியின் சுவையறிந்தவர்கள் இனி விடமாட்டார்கள். இதனால் பிற சாதியைச் சேர்ந்த பள்ளிகுழந்தைகளும் ''ஓங்க வூட்டுக்கு நெருப்பு வைக்கிறோம் பார்'' என்று திட்டுகிறார்களாம்.

தீண்டாமை ஒரு குற்றச்செயல், பாவச்செயல் என்று அரசாங்கம் பாட புத்தகங்களில் சொல்கிறது. ஆனால் அதை படிக்கும் மாணவர்களுக்கு அது அனிச்சைச் செயலாகவே இருக்கும் போது, சாதி உணர்வை பாடத்திட்டம் போட்டு ஒழிக்க முடியாது. திட்டமிட்ட போராட்டங்களாலேயே முடியும் என்பதே சமூக அனுபவமாகும்.

சாதி - வெறியர்களிடம் எதையோ பறிகொடுத்த உணர்வும், இளைஞர்களிடம் தோற்றுவிட்ட உணர்வும் வெளிப்பட்டது. முருகன் ITI படிப்பவர். (ஊர் நாட்டாண்மை முத்து



படிப்பகம்

www.padippakam.com

லிங்கத்தின் மகன்) நாம் போராட்டத்தை பற்றி கேட்டதற்கு, ''இத எப்படி ஏத்துக்க முடியும்? இந்த கோயிலு நாங்க கட்டுனது, கால காலமா அவங்க கோயிலுக்குள்ள வந்தது இல்ல, இப்ப அவங்க போனது சரியே கெடையாது. அப்புறம் கட்டுப்பாடு உடைஞ்சி போயிடும் அவங்க திருந்த மாட்டாங்க.''

''மெல்ல மெல்ல கோயில்ல வுட்டா அப்புறம் எங்க தெரு பொண்ணுங்கள பார்ப்பாங்க. கலாட்டா ஆகும் நெறைய பிரச்சினை இருக்குங்க, விட்டா பொண்ணு கேப்பாங்க'' என்று மேல்சாதி உணர்வின் மறைவிடம் அகமணமுறையில் இருக்கிறது என்ற மேலான உண்மையை எடுத்து விட்டார்கள் இளைஞர்கள்.

காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் தமது ஆதிக்கம் கொடிகட்டி பறக்கும். அதை இந்த தேதியோடு நிறுத்திக் கொள் என ஒரு தாழ்த்தப்பட்டவன் சொல்வதா, தானாகக் கருணைபட்டு செய்ய வேண்டியதை, இந்த தேதியில் செய்வேன் என்று தாழ்த்தப்பட்டவர்கள் தமது அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்குவதா? அடுத்தவரை ஆதிக்கம் செய்யும் அசிங்கத்தை மானமாகக் கருதுவதுதான் ஆதிக்கச் சாதி இளைஞர்களின் மனப்பான்மை, ஆனால் ''மயிலு மயிலுன்னா இறகு போடுமா, அவங்க செஞ்சது சரிதான் எங்க காலத்துல'நடக்காதது இப்ப நடந்திருக்கு'' என்று முகம் மலர்ந்து சொல்கிறார் ஒரு தாழ்த்தப்பட்ட முதியவர்.

தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழைந்தவுடன் எதிர்த்து சாமி வந்து ஆடிய பூசாரியின் மனைவியை சந்தித்து, ஏம்மா காலனிகாரங்க நுழைஞ்சிட்டாங்கன்னு கதவு பூட்டி வச்சிருக்கீங்களே, உங்க சாமி பக்தி அவ்ளோதானா? என்றதற்கு, ''நான் என்னங்க பண்றது, இப்படி போயி சேரி சனங்க நுழைஞ்சோன்ன, தெரு சனங்க இனிமே கோயிலுக்கு போகலைன்னு பூட்ட பூட்டி சாவியை பிரசிடென்டு கைல கொடுத்து இனிமே சேரியாளுங்களையே கோயிலு நிர்வாகத்த நடத்தச் சொல்லுன்னு சொல்லிட்டாங்க. கார்த்திக அன்னிக்கு கூட மனசு கேட்காம போயி தள்ளி நின்னு விளக்கை ஏத்திட்டு வரப் போனேன். மாரியம்மா போட்டு பொறட்டி எடுத்துட்டு, தினம் கனவில் கருப்பு சீலையோடு வந்து நீயுமா பார்த்துகிட்டு இருக்குற இனிமே பொறுக்க மாட்டேன்னு கனவுல வந்து புடுங்குது, வந்து வெளக்கேத்துன்னு தினம் கனவு புடுங்குது தம்பி. இவங்க பிரச்சினையினால எங்க பொழப்பு போச்சு.''

'சாமி வந்து மயக்கமடைந்தவருக்கு சலைன் பாட்டில் போடாமல் துன்னூறிலேயே வைத்தியத்தை முடித்த நர்சம்மாவை சந்திக்க முயன்றோம். அந்நேரம் ஆளில்லை. நர்சம்மாவின் கணவருக்கும் அடிக்கடி 'சாமி' வந்து போராட்டத்தை பற்றி புலம்பி தீர்ப்பதாக தகவல். ஊருக்குள் ரெட்டியார், உடையார் பிரிவு மக்களில் கணிசமான பேரிடம் வி.வி.மு.,க்கு ஆதரவு இருக்கிறது. காரப்பட்டின் கிராம முக்கியஸ்தர் எனக் கருதப்படும் R. கிருஷ்ண மூர்த்தி என்பவர், ''இந்த கோயில் நுழைவு நடக்கறதுக்கு முன்னாடி இதை தடுக்க ரெட்டியார்கள் கிட்ட ஆதரவு கேட்டாங்க, ஆனால் அவங்க ஆதரவு இல்லை, இங்க மூனு வகையறா குடும்பங்கள்தான். இதில் வன்னியக் கவுண்டர்கள்ல சிலர்தான் எதிர்க்கிறது. நான் அவங்க சாமி கும்பட்டும் அவங்க உழைப்பிலதான் கிராமமே இருக்குன்னு சொன்னேன். பஞ்சாயத்துல அதிர்ச்சியானாங்க. நான் சாமி கும்புடுற ஆளு கிடையாது, கம்யூனிச இயக்கத்த புடிக்கும்.'' எது சொன்



போராட்டத்தில் கலந்து கொண்ட சிறுவர் - சிறுமியர்



(காரப்பட்டு, தனி வாக்காளர் தொகுதினடிப்படையில் பெண்கள் தொகுதியும் கூட. தாழ்த்தப்பட்டவர்பஞ்சாயத்து தலைவரானாலும், பிறசாதிக் காரர்களுக்கே கட்டுப்பட்டவர். பெண் பஞ்சாயத்து தலைவியானாலும் கணவருக்கே கட்டுப்பட்டவர் என்ற எழுதப் படாத தமிழகத்து பஞ்சாயத்து விதிக்கு காரப்பட்டும் விதிவிலக்கல்ல, பஞ்சாயத்து தலைவியின் கணவர் சிவலிங்கமே நடைமுறையில் பஞ்சாயத்து தலைவராகச் செயல்படுகிறார். அவரே நம்முடன் நேர்காணலுக்குச் சம்மதித்தார்)

**கே:** கோயில் நுழைவுப் போராட்டம் பற்றி என்ன சொல்ல விரும்புறீங்க?

**ப:** சரிதான். இப்படி தேதி வச்சு செஞ்சிருக்க வேண்டியதில்லை. எனக்குதான் இப்ப பெரிய ரோதன, காலனிக்காரங்க நுழஞ்சதால நாங்க இன்னம கோயிலுக்குள்ள போக மாட்டோமுன்னு கதவு பூட்டி எங்கிட்ட சாவிய குடுத்திட்டு, சாமி நகையெல்லாம் இது, இதுன்னு ஒரு நோட்ல எழுதி கையெழுத்து வாங்கிட்டாங்க, 42 நாளா கோயிலு பூட்டி கெடக்கு. தெறந்து வைக்கலாமுன்னா நக நட்டு என்னருக்கின்னே புரியல, பயமாயிருக்கு.

**கே:** நீங்கதான் இந்த ஊர் பஞ்சாயத்து தலைவர்; தலைவர் ஆன பிறகு நீங்க கோயிலுக்கு போனீங்களா?

**ப:** அதெப்படிங்க? பரம்பரை பரம்பரையா கோயிலுக்குள்ள போனதில்லை. பஞ்சாயத்து தலைவரா ஆனாமட்டும் போகலாமுங்களா! நான் இப்புடி நடு ஆளா இருந்தும் கூட, அவுங்க நாங்கதான் உன்ன தேர்ந்தெடுத்தோம். 'நீ ஒங்க ஆளுங்கல கட்டுப்படுத்தல பாரு'ன்னு கேக்குறாங்க. நான் என்ன பண்றது சொல்லுங்க? செய்யறது எல்லாம் வி.வி.மு. காரங்க. நான் கேட்டவங்ககிட்ட சொல்லிட்டேன், ''நீங்க முன்ன மாதிரி கட்டுக்கோப்பா இல்லாம சும்மா காலனிகாரங்க பண்ணிட்டாங்கன்னு சொல்லாதீங்கண்ணு.

**கே:** சட்டப்படி தீண்டாமை தப்புன்னு அரசாங்கம் சொல்லுது. நீங்க சட்டப்படி நடக்குற பஞ்சாயத்து தலைவர் பொறுப்புல இருக்குறீங்க, அதன்படி நடக்க வேண்டியதுதானே?

**ப:** அவுங்க பாத்து நிக்க வச்சாங்க. பொசுக்குன்னு எதுக்கலாமா?


படிப்பகம்

www.padippakam.com

**(விவசாயிகள் விடுதலை முன்னணி காரப்பட்டு செயலாளர் நாராயணன் அவர்களது நேர்காணல்:)**



**கே:** இந்த ஊரில் விவசாயிகள் விடுதலை முன்னணி கடந்த காலத்தில் எப்படியெல்லாம் போராடியிருக்கு?

**ப:** இங்க தோழர் ரெங்கநாதன் காலத்துலேர்ந்தே வர்க்கப் போராட்டம் மட்டுமல்லாது, சாதி ஒழிப்பு போராட்டமும் தொடர்ச்சியா நடந்துச்சு. ரெங்கநாதன் அவர்கள் அமைப்ப திரட்டிப் போராடி ஒழிச்சாரு, பஞ்சாயத்துல தாழ்த்தப்பட்ட மக்கள சமமா உட்கார வைத்து பேசுவாரு, தாழ்த்தப்பட்ட மக்கள் வீடுகளில் சாப்பிடுவது, என பழக்கவழக்கத்த மாத்தறது மட்டுமில்லாம சாதி ஆதிக்கம் கடைபிடிக்கும் வீடுகளில் வேலை செய்வதில்லை எனவும் முடிவெடுத்தோம். அதுபோல இருசாராரும் கூலி உயர்வு பேச்சு கூட வி.வி.மு. இல்லாமல் பேச மாட்டாங்க. இரு தரப்பு கருத்துக்களையும் கேட்டறிந்து முடிவு சொல்வோம். தோழர் ரெங்கநாதன் காலத்துல வெட்டியான்வேல செய்யும் மக்களுக்கு வெறும் சோறு மட்டும் கூலியா போகும். இலவச உழைப்பை எதிர்த்துப் போராடி மற்ற வேலையாள் போல அவங்களுக்கும் கஞ்சிபடி தரவேணுமுன்னு கேட்டு போராடி சாதிச்சார். இதை ரெட்டியார் பண்ணையார்கள் எதிர்த்து ரவுடிகள ஊருக்குள்ள வுட்டு அடிக்க வரும் போது, ஜனங்க எண்ணையை காய்ச்சி ஊத்துவது, கூழை காய்ச்சி ஊத்துவது, கம்பியை நெருப்புல காச்சி அடிப்பது, அதுமட்டுமில்லாம பண்பாட்டு அளவிலும் இங்கு அமைப்பு சாதிச்சிருக்குது. சூதுவிளையாட்டு, கோலி குண்டு விளையாட்டு, திருட்டுத்தனம், சாராயம் காய்ச்சிறது, விக்கிறது இங்க கிடையாது. முடியாது. நேர்மையாக உழைப்பது. உரிமைக்காக உறுதியாகப் போராடுவது, கட்டுக்கோப்பாகச் செயல்படுவதுன்னு மற்ற கிராமங்களைவிட மாறுபட்ட நிலைமை இங்க உண்டு. தோழர். ரெங்கநாதன் தன்ன தாழ்த்தப்பட்டவங்க சுடுகாட்டுலதான் பொதைக்கணும்னு உயில் எழுதி வச்சு செத்தப்ப, மேல் சாதிக்காரங்க கூடாதுன்னு மறிச்சப்ப எதிர்த்து அவரை தாழ்த்தப்பட்டவர் சுடுகாட்டில்தான் அடக்கம் செய்தோம். இன்னைக்கும் போராட்டங்கள் தொடருது.

னாலும் கட்சி முடிவோடுதான் சொல்லுவேன் என்று முதலில் தயங்கிய சி.பி.எம்., மாவட்ட குழு உறுப்பினர் M. ராஜகண்ணு, ''சார் இதை மெல்ல மெல்ல ஜனங்களா மாற்றி செய்யணும் இப்படி திடீர்னு நுழையக் கூடாது'' என்றவரை அறிவித்து சுவரொட்டியெல்லாம் இருக்குதே என்ற பிறகு, ''ஆமாம் எங்க தெருவுலகூட வந்து தெருமுனை கூட்டம் போட்டு போராட்டத்திற்கு வாங்கன்னு கூப்பிட்டாங்க, நாங்களும் தாழ்த்தப்பட்டவர்தான் ஆனா எப்படி போக முடியும்? அதுவும் மக்கள மாத்தாம செய்யறது சரியில்லை'' என்றார்.

சரி நீங்க மக்களை மாத்தி செய்ய மாதிரி என்ன நடவடிக்கை எடுத்தீங்க? என்பதற்கு, ''நாங்க கூட முன் ஆடி மாச திருவிழாவுல இதே மாதிரி போராட்டம் செய்யலம்னு இருந்தோம். அதுக்குள் விசயம் தெரிஞ்சுடுச்சி அவங்களுக்கு, நாங்க சடல் போட்ட கையோட அப்படியே நுழைஞ்சிடலாம்னு இருந்தோம். விசயம் தெரிஞ்சதால மேல் சாதிகாரங்க உருட்டு கட்டையால அடிக்க வந்தாங்க வந்துட்டோம்'' என்றார்.

என்னங்க வி.வி.மு.வை மட்டும் பிரச்சாரம் பண்ணி செய்யணும்னு சொல்லிட்டு நீங்க மட்டும் ஆடிமாச திருவிழாவில அசந்த நேரத்துல நுழையலாம்னு திட்டம் போட்டீங்களே? என்றதற்கு, ''இல்லை சார் அதற்கு பிறகு எங்க மாவட்ட செயலாளர்கிட்ட இது மாதிரி போராடலாம்னு கேட்டதற்கு, மேல் சாதி தெருவுல நமக்கு ஆதரவு இருக்குதான்னு கேட்டாரு, இல்லை நமக்கு SC மட்டும்தான் ஆதரவுன்னு சொன்னோம். அதுக்கு மாவட்ட செயலாளர் மேல்சாதி தெரு சனங்க நம்ப பக்கம் ஆதரவு தந்தால் தான் செய்ய முடியும்னு சொன்னாங்க. சரின்னு விட்டுட்டோம்.

> **எந்த காலத்துலயும் இப்படி நடக்கல, கட்சிகாரர்களோட இந்த ஊர்கார பசங்களும் சில பேர் சேர்ந்துட்டு சேரி ஆளுங்களை அழைச்சிட்டு போயிட்டானுங்க. யார் இதை கேக்கறது. ஒரு திரையும் இல்ல, மொறயும் இல்ல, எப்பவும் நடக்காத விஷயம் நடந்து போச்சு, என்னத்த சொல்றது?''**

இந்திய குடியரசு கட்சியை சார்ந்த இளைஞர்களுக்கு மனத்தளவில் மகிழ்ச்சிதான், அவர்களின் கருத்து, ''செஞ்சது சரிதான், பறையன் நுழைஞ்சதால கோயில் பூட்டி கெடக்குது சரியில்ல, ஆனாலும் அணு அணுவா மாத்தணும், வி.வி.மு.காரங்க வேகமாக செய்யறாங்க, நாங்களும் இதெல்லாம் ஏத்துக்கிட்டாலும் ஆனால் நட, உட பாவனைதான் வேற''. தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் சி.பி.எம்.லும் இந்திய குடியரசுக் கட்சியிலும் அங்கம் வகித்தாலும், கோயில் நுழைவு போராட்டத்தை மனத்தளவில் ஆதரிப்பதும், வி.வி.மு.வின் வேலைப்பாணியைக் கண்டு தயங்குவதுமே சந்தித்தபொழுது வெளிப்பட்டது.

கிராம முக்கியஸ்தர் R. கிருஷ்ணமூர்த்தி தமது ஊரின் வரலாற்றுப் பெருமையை கூறினார். இந்த ஊரே தமிழ்நாட்டு கிராமங்களில் மாறுபட்டது. தாழ்த்தப்பட்டவர்கள வீட்டுக்குள்ள அனுமதிக்கிறது. விருந்துல கலந்துக்குறது, தெருவுக்குள்ள தாராளமாக பொழங்கறது இப்படி எந்த தடையும் இல்ல. இப்ப இந்த கோயில் நுழைவு பேராட்டத்துலதான் பிற சாதிக்காரங்க வெலகி நிக்கிறாங்க. அதுவும் பிறசாதிகாரங்க மத்தியிலும் வி.வி.மு. ஆதரவு இருக்கதறால, முழுசா எதிர்க்க முடியாம. அடிதடி இல்லாம ஆள்திரட்ட முடியாம தாழ்த்தபட்டவங்க கோயிலுக்குள்ள நுழைஞ்சதால நாம இனிமே கோயில் பக்கம் போறதில்லேன்னு ஒதுங்கிட்டாங்க கோயில் இப்ப பூட்டியே கிடக்கு.''

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்கின்றன தமிழ் இலக்கியங்கள். இல்லை மதமும் சாதியும்தான் என்று சாதிக்கின்றன தமிழக கிராமங்கள். அதை அமைப்பும், அமைப்பு சார்ந்த விதிமுறைகளிலுமே அழுத்தி திருத்தி எழுத முடியும் என்பதை எல்லோரின் மனங்களிலும் எழுதிக் காண்பித்திருக்கிறார்கள் விவசாயிகள் விடுதலை முன்னணியினர்.

● துரைசண்முகம்,
உதவி : வாசு



படிப்பகம்

www.padippakam.com

## சாதி தீண்டாமை ஒழிப்பு இயக்கம்:

# போராட்டமே மண வாழ்க்கை

தமிழகமெங்கும் ம.க.இ.க, பு.மா.இ.மு, வி.வி.மு. சார்பாக சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம் கருத்திலும், களத்திலும் நடைபெற்றது குறித்து வாசகர்கள் அறிந்திருக்கக் கூடும். தமிழ்ச் சமூகவாழ்க்கையில் குறுக்கும் - நெடுக்குமாக ஊடுருவிய இவ்வியக்கத்தின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று விழுப்புரத்தில் சென்ற ஆண்டு நவ. 22-இல் நடைபெற்ற சாதி மறுப்பு மணவிழா.

சாதி சடங்கு பொருத்தங்களுடன் சமூகத்தில் நடக்கும் திருமணம், ஒரு மகிழ்ச்சியான நினைவு. ஆனால் சாதி மறுப்பு மணவிழா ஒரு மலரும் நினைவல்ல.

வெட்டரிவாள் மூலம் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயலும் மேல் சாதிக் கொடூரத்தைக் கூட நேருக்கு நேர் சந்திக்க முடியும். ஆனால் கண்ணீரும், ஒதுக்கும் போக்கும், வெட்டவெளி வசவுகளும், திண்ணைப் பேச்சு அவதூறுகள் முதல் பொதுக் குழாய் குடிநீர் பிடிப்பது வரையிலும் ஒவ்வொன்றையும் எதிர்த்து சாதி மறுப்பு மணமக்கள் ஒவ்வொரு நொடியிலும் போராட வேண்டும்.

இன்று தீண்டாமை, நகரங்கள் - அதன் சுற்றுப்புறங்களில் பெருமளவு ஒழிந்திருந்தாலும், தீண்டாமை மறுப்பு மணம் என்பது இந்தியாவெங்கும் கிராமப்புறங்களில் நடக்க முடியாத ஒன்று. சாதி ஆதிக்கத்தின் உயிர் போகும் 'மானப் பிரச்சனை' இதில் தான் அடங்கியுள்ளது. எந்தச் சாதியில் பிறந்த பெண்ணும் தீண்டாமை மறுப்பு மணத்தை ஏற்கும் போது மேல் சாதியினர் தமது ஆத்மா குத்திக் கிழிக்கப்பட்டதாக அலறுகிறார்கள்.

இதனால் தான் இரண்டாயிரம் ஆண்டுகளாக ஆண்-பெண் இயல்பினால் காதலித்து கல்லறைக்கு போன மணமக்கள் எத்தனை பேர் என்பதற்கு வரலாறு ஏதுமில்லை.

பறையரான காத்தவராயன் பார்ப்பன ஆரியமாலாவை காதலித்து ஊரை விட்டு ஓடுகிறார். இவ்வழக்கு அரசனுக்கு வருகிறது. முதலில் விடுதலை செய்தவன் பார்ப்பனர்களின் போராட்டத்தினால் முடிவை மாற்றுகிறான். மணமக்கள் உயிரோடு கொளுத்தப்படுகிறார்கள். நாட்டுப்புற பாடல் ஒன்றின் கதை இதுவென்றால் தற்போதைய நாட்டு நடப்பும் மாறவில்லை. தேர் இழுப்பதற்கு மட்டும் ஊர் கூடுவதில்லை, கலப்பு மணம் கண்ட மணமக்களை ஒற்றைப் பனையில் கட்டி வைத்து எரிப்பதற்கும் கூடுகிறது.

சாதி - மறுப்பு மணவிழா வெறும் பெருமையடையக் கூடிய ஒன்றல்ல. மாறாக இதில் சந்திக்கின்ற பிரச்சனைகளை வென்று கடப்பதுதான் முக்கியம்.

70 ஆண்டுகளுக்கு முன்பே 'சுயமரியாதைத் திருமணம்' என்ற பெயரில் தந்தை பெரியாரின் இயக்கம் இதை ஆரம்பித்து வைத்தது. 1968-ல் இத்திருமணங்களை அங்கீகரிக்கின்ற சட்டப்பிரிவும் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இயற்றப்பட்டது. எழுபது ஆண்டுகளாய் சமூகத்தில் பரவ வேண்டிய சாதி மறுப்பு மணம் வளராமல் போனது ஏன்?

இன்றைக்கு சுய மரியாதை மணம் என்பது புரோகிதர் இல்லாத மணம் என்பதாகச் சுருங்கி விட்டது. தாலி, சாதி, ஆடம்பரவிருந்துகள், அலங்காரங்கள் இவையெல்லாம் இருந்துவிட்டு ஐயர் இல்லை என்பதால் மட்டும் இவை பார்ப்பனிய எதிர்ப்பாகாது. மாறாக பார்ப்பனியமயமாக்கப்பட்ட தமிழ்த் திருமணங்கள் என்று தான் அழைக்க முடியும்.

ஆனால் எழுபது ஆண்டுகளில் உள்ளூர் அளவிலான சாதி தனது வலைப் பின்னலை இந்திய அளவில் நிறுவியிருக்கிறது. நகரமயமாக்கம், செய்தி ஊடகத்தின் வளர்ச்சி காரணமாக, ஃபேக்ஸ், கணிப்பொறி வசதிகளுடன் சென்னையில் தலைமையகத்தை வைத்துக் கொண்டு சாதிச் சங்கங்கள் செல்வாக்குடன் செயல்படுகின்றன. பத்திரிகைகளில் வரும் மணமக்கள் விளம்பரங்கள் வயது, உயரம், நிறம், சம்பளம், போன்ற எண் கணக்குகளோடு உட்சாதிப் பிரிவையும் அழுத்தமாகக் குறிப்பிடுகின்றன.

> **''சாதி சடங்கு பொருத்தங்களுடன் சமூகத்தில் நடக்கும் திருமணம், ஒரு மகிழ்ச்சியான நினைவு. ஆனால் சாதி மறுப்பு மணவிழா ஒரு மலரும் நினைவல்ல.''**

காலனீய ஆட்சியிலிருந்தே 'வடமாள், பாரத்வாஜம், அனுஷம்' என்று தனது குல - கோத்திர - ஜாதக விவரங்களை வெளியிட்டு மண விளம்பரம் செய்யும் பார்ப்பன சாதியினரே இதற்கு முன்னோடிகளாவர். தெரு - ஊருக்குள்ளே சம்பந்தம் முடிக்கும் சாதியினரெல்லாம் இன்று அவாள் பழக்கப்படி தேச அளவில் தேடுகிறார்கள். முன்பைவிட உட்சாதி அக மணமுறை மேலும் இறுகியிருக்கிறது.

மேலும் நிச்சயதார்த்தம் முதல் சாந்தி முகூர்த்தம் வரை விரிவான சடங்குகள், மாப்பிள்ளை அழைப்பு, கார் - குதிரை ஊர்வலம், ஆடம்பர மண்டபம் - விருந்து - வீடியோ என்ற பார்ப்பனியத்துடன் நுகர்வுப் பண்பாடும் சேர்ந்துவிட்ட திருமணங்கள் தான் இன்று அனைத்துச் சாதிகளும் ஏற்றுக் கொண்ட முறையாகிவிட்டது.

இப்படி சுயமரியாதைத் திருமணங்களையே வீழ்த்திவிட்ட பார்ப்பனியமயமாக்கம் மட்டும்தான் கடந்த தலைமுறையின் வரலாறா? இல்லை. நகரமயமாக்கம், திரைப்படம், தொலைக்காட்சி, தொழில் வளர்ச்சி, கல்விப் பரவல் காரணமாக காதல் - கலப்புத் திருமணங்களும் தற்போது அதிகரித்து வருகின்றன. அப்படியானால் இயல்பாகவே சமூகத்தில் தோன்றி வளருகின்ற காதல் திருமணங்களுக்கும், நமது மணவிழாவிற்கும் என்ன வேறுபாடு?

சமூக அக்கறை இன்றியும், வாழ்க்கை - பண்பாடு குறித்து சுயநல கண்ணோட்டமும் கொண்ட காதல் திருமணங்களின் புரட்சியும் - போராட்டமும் மணமேடையிலே தாலி கட்டியவுடன் முடிவுக்கு வருகிறது. ஆணாதிக்கமும், பார்ப்பனிய - சாதியப் பண்



படிப்பகம்

www.padippakam.com

பாட்டை ஏற்றுக் கொண்டும், ஆண் அல்லது பெண்ணின் சாதிக்குள் சங்கமமாகிவிடும் இந்தக் காதல் மணங்கள் சாதி ஒழிப்பு என்ற சமூகப் போராட்டத்திற்கு எவ்வகையிலும் உதவவில்லை.

விழுப்புரம் மணவிழாவில் தோழர். மருதையன் குறிப்பிட்டதைப் போல எமது திருமணங்கள் - குடும்பங்கள், மூலமாக சாதி வெறியை எதிர்த்து மட்டுமல்ல, நான்கு சுவற்றுக்கு நடுவில் தாமும் - தன் வாரிசுகளுமே வாழ்க்கையின் இலட்சியம் என்று வாழும் குடும்பத்தின் கடைந்தெடுத்த சுயநலத்தையும் எதிர்த்தும் தான் போராடுகின்றனர் புரட்சிக்காக தன்னையும், குடும்பத்தினரையும் மாற்றிக் கொண்டு போராடுவதற்கு அமைப்பு வாழ்க்கை உதவி செய்கிறது. ஊருக்குள்ளே தீண்டாமை மறுப்பு மணமக்கள் போராடி வாழ்வதற்கும் இதுவே காரணம்.

மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய மதுரை பாளையம் வட்டார வி.வி.மு. செயலர் தோழர். மோகன் பேசும் போது, "தென் மாவட்ட ஆதிக்க சாதியினர் கலவரங்கள் நடத்தும் காலகட்டத்தில் தங்களது திருமணத்தின் மூலம் சாதி ஒழிப்புப் போராட்டத்தினைத் தொடுத்திருக்கும் மணமக்கள் இந்தப் பெருமையை தங்கள் வாரிசுகளுக்கும் வழங்க வேண்டும்" என்று வாழ்த்தினர். தீண்டாமை மறுப்பு மணம் செய்திருக்கும் தோழர். மோகனது வாழ்க்கையும் அந்தப் போராட்டப் பெருமையைக் கொண்டதுதான்.

'அமைப்பிற்கு வருவதற்கு முன்பே என் திருமணம் முடிந்துவிட்டபடியால் குழந்தையில்லாதவன் தொட்டிலை முகர்வது போல தீண்டாமை மறுப்பு மணம் புரியும் இந்த மணமக்களை வாழ்த்தி நிறைவடைகிறேன்' என்று பேசிய ஆண்டிப்பட்டி வி.வி.மு. செயலர் செல்வராசின் வாழ்க்கையும் போராட்டங்களைக் கொண்டதுதான். அருகாமை தாழ்த்தப்பட்டவர் வீட்டில் வடை சாப்பிட்டதற்காகச் சிறுவயதில் அவரைக் குளிப்பாட்டி வீட்டில் அனுமதித்தவர் அவரது தாய். இன்று சேரியோடு உறவாடும் தோழரை தாயால் சகிக்க முடியவில்லை. தாயும், தனயனும் தத்தமது போராட்டங்களைக் கைவிடவும் தயாரில்லை. விளைவு? இருவரும் 13 வருடங்களாகப் பேசுவதில்லை. அவரவர் வீடுகளுக்குப் படியேறுவதில்லை.

## சாதி ஒழிப்பு முழக்கங்களுடன் மணவிழா ஊர்வலம்



கலப்பு மணம் கண்ட தம்பதியினர் சேரியில் குடியிருப்பது எளிது. ஊருக்குச் சென்றால்? தருமபுரி அருகே மேல் சாதித் தெருவில் குடியிருக்கும் தோழர் ஒருவரது மனைவி தாழ்த்தப்பட்டவர். பொதுக் குழாயில் குடிநீர் பிடிக்கும் போது மேல் சாதி கௌரவத்தை நெஞ்சிலே கொண்டிருக்கும் பெண்கள் சண்டை போடுகிறார்கள். முன்பு போல ஊரைவிட்டு ஒதுக்கவோ, பனைமரத்தில் கட்டி வைத்து அடிக்கவோ முடியவில்லை. தமது சாதிக் கௌரவத்தை குத்திக் கிளறும் வி.வி.மு. என்ற 'அரக்கனை' பகைத்துக் கொள்ள அவர்கள் தயாரில்லை. போராட்டத்தை தொடருகிறார்கள் எமது தோழர்கள்.

பார்ப்பனச் சாதியில் பிறந்த அந்த பெண்ணும் ம.க.இ.க. தோழர் ஒருவரும் விரும்புகிறார்கள். பெண்ணின் உறவினர்களது தடைகளைத் தாண்டி அமைப்பின் உதவியுடன் காதல் வெற்றி பெருகிறது. புதிய ஊரில் நிலையில்லாத வேலை - பொருளாதார நெருக்கடிகளுடன் குடும்ப வாழ்க்கை தொடங்குகிறது. தங்களுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு 'வெண்மணி' என்று பெயரிட்டு மகிழுகின்றனர். விழுப்புரம் மணவிழாவில் 'மாட்டுக்கறி விருந்துண்ணும்' அளவிற்கு தன்னை மாற்றிக் கொண்டுவிட்ட அந்தப் பெண் தோழரை அவரது உறவினர்கள் இன்றுவரை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

**சமூக அக்கறையின்றியும், வாழ்க்கை - பண்பாடு குறித்து சுயநல கண்ணோட்டமும் கொண்ட காதல் திருமணங்களின் புரட்சியும் - போராட்டமும் மணமேடையிலே தாலி கட்டியவுடன் முடிவுக்கு வருகிறது.**

சாதி - தீண்டாமை மறுப்புத் திருமணங்களைத் திட்டமிட்டு எமது அமைப்பே ஏற்பாடு செய்கிறது. அப்படி ஒரு விதியில்லை என்றாலும் உறுப்பினர்கள் அனைவரையும் அவ்வாறே மணம் செய்யுமாறு போராடுகிறோம். சமூகத்தில் நடைபெறும் காதல் மணங்கள் வெற்றியடைய கவர்ச்சி - வர்க்க அந்தஸ்தை உள்ளடக்கிய காதல் உணர்வு ஊக்குவிக்கிறது. தீண்டாமை மறுப்பு மணம் வெற்றியடைவதற்கு எம் தோழர்களின் சமூக உணர்வே காரணமாகிறதன்றி வெறும் காதல் உணர்வல்ல.

சென்ற ஆண்டு சாதி மறுப்புத் திருமணங்களை பல தோழர்கள் அவரவர் ஊர்களில் நடத்திவிட்டார்கள். விழுப்புரம் மணவிழாவிற்காக அமைப்பைப் பற்றித் தெரிந்த ஆதரவாளர்கள், நண்பர்கள், மற்றும் பொதுவானவர்கள் வீட்டிற்குச் சென்று மணவிழா குறித்து பேசி விளக்கிய போது மக்களுக்கு பல சந்தேகங்கள், கேள்விகள், 'தாலியில்லாமல் கல்யாணம் செஞ்சா கூட்டிக் கொடுக்கிற மாதிரியில்லை' என்றனர். திருச்சி அருகே துறையூரைச் சேர்ந்த சி.பி.எம். கட்சிக்காரர் 'இந்தத் திருமணங்களுக்கு அத்தாட்சியில்லை' என்று பெண் கொடுக்க வந்த ஒரு வீட்டினரைத் தடுத்து விட்டனர்.

'உங்க சைடுல நீங்க எப்படி வேணா கல்யாணம் செஞ்சாலும் எங்களுக்கு ஒரு மாதா கோவில்ல மோதிரம் மாத்தினாத்தான் நிம்மதி' என்றனர் ஒரு குடும்பத்தினர். அழைப்பிதழில் 'மாட்டுக்கறி விருந்து' என்று போட்டிருப்பதால் 'எங்க உறவுக்காரங்களுக்கு எப்படி பத்திரிக்கை வைக்க முடியும்' என்றார் ஒரு தந்தை.

இப்படி பல சுற்றுப் போராட்டங்களைத் தாண்டி ஆறு தம்பதியினர் தயாராயினர் என்றாலும் சரி பாதி மணமக்களின் பெற்றோர்கள் நிகழ்ச்சிக்கு வர


படிப்பகம்

www.padippakam.com

## உறுதிமொழி ஏற்கும் மணமக்கள்




வில்லை. மேலும் மணப் பெண்கள் இருவருக்கு இது மறுமணமும் கூட. மணமகன்களில் ஒருவரான விழுப்புரம் பகுதி தோழர். நடராசன் விழா நடந்த அன்று காலை வரை தனது பெற்றோர்களைத் திருமணத்திற்கு வருமாறு மன்றாடுகிறார். 'ஊர் முன்னாடி அசிங்கப்படுத்தி அவமானமாக்கிட்ட' என்ற பெற்றோர்கள் திருமணத்தன்று வெளியூருக்குச் சென்றுவிட்டனர்.

வேறு ஒரு தோழர் தனது தந்தையை திருமணத்திற்கு அழைத்த போது, "நம்ம உறவுக்காரங்க இருக்குற கிராமத்தில உள்ள 'இந்த' பெண்ணை என்னை இழிவுபடுத்துறதுக்குன்னே கல்யாணம் செய்யப் போறே' என்று வர மறுத்து விட்டார்.

வேதாரண்யம் அருகே ஆயக்காரன்புலம் ஊரைச் சேர்ந்த தோழர் ராஜா விழுப்புரம் நிகழ்ச்சியில்தான் தனது சாதி மறுப்பு மணம் நடக்க வேண்டும் என்று உறுதியாக முடிவு செய்கிறார். சாதி ஆதிக்கத்திற்குப் பேர் போன அவரது ஊரைக் கண்டஞ்சி பல பெண் வீட்டினர் தயங்குகின்றனர்.

இதே வட்டாரத்தில் இரு மாதங்களுக்கு முன்னர்தான் அமைப்பில் சேர்ந்த தோழர் ஒருவரது தங்கையை மணப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆனால் ராஜாவின் உறவினர், பெற்றோர் யாரும் விழுப்புரம் வரவில்லை. (பின்னர் தம்பதியினராய் ஊருக்குத் திரும்பும் தோழர்கள் இருவரையும் சாணிக் கரைசல் ஆரத்தி வரவேற்கிறது. குடியிருக்க வீடு கூட கிடையாது என முடிவு செய்த ஊரார். அதனாலென்ன? அதே ஊரில் மணமக்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சியை பொதுக்கூட்டமாக நடத்தினார்கள் தோழர்கள்.)

இப்படிப் பல தடங்கல்கள் இருந்தாலும் விழுப்புரம் மணவிழா தோழமையின் குதுகலத்தோடு நடந்தேறியது. தமிழகம் முழுவதிலிருந்தும் பல தோழர்கள், நண்பர்கள் குடும்பத்தோடு விழாவில் கலந்து கொண்டனர். தந்தை பெரியார் சிலைக்கு மாலையணிவித்து, மணமக்களின் பின்னே சாதிய ஒழிப்பு முழக்கங்களோடு அனைவரும் அணிவகுத்து வர - இந்த புதிய திருமண ஊர்வலத்தை விழுப்புரம் மக்கள் மகிழ்ச்சி கலந்த வியப்புடன் பார்த்தனர்.

தேசிய நெடுஞ்சாலையில் லாரி ஓட்டுநரான அவர் தேநீருக்காக விழா மண்டபம் அருகே லாரியை நிறுத்தியவர், திருமண நிகழ்ச்சியைக் கேட்டறிந்து மனமார வாழ்த்தி நன்கொடையும் அளிக்கிறார். மண்டபத்தின் கடைசியிலே அமர்ந்து நிகழ்ச்சிகளை முழுவதுமாய் கவனித்துக் கொண்டிருந்த கருப்புச் சட்டையணிந்த இரண்டு முதிய திராவிட இயக்கத் தோழர்களின் கண்களில் ஆனந்தம் ததும்புகிறது.

விழுப்புரம் அருகே ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரியும் அந்த நண்பர் விழாவினைப் பாராட்டி தனது முகவரியைக் கொடுத்து அமைப்பில் சேரவேண்டும் என்கிறார்.

விழாவிற்கு வந்த அனைவரும் மணமக்களுக்கு பல்வேறு நூல்களை பரிசாக அளிக்கின்றனர். விருத்தாசலம் சட்டக் கல்லூரி மாணவர்கள் சாதி ஒழிப்பு வெளியீட்டைப் (சிறு நூல்) பாராட்டி ரூ. 500 நன்கொடை அளிக்கின்றனர்.

குறைந்த சம்பளம் வாங்கிக் கொண்டு மாட்டுக்கறி பிரியாணி சமைக்கின்றனர் அந்த முஸ்லீம் இளைஞரின் தலைமையிலான குழுவினர். இளைய தலைமுறையினர் விருந்தைச் சுவைத்த போது, சில முதியவர்கள் மட்டும் விருந்துண்ணவில்லை. ஒரே நாளில் அவர்கள் மாறிவிடுவார்கள் என எதிர்பார்க்க முடியாதுதான். அதே சமயம் பல நண்பர்கள் முதல் முறையாக மாட்டுக்கறியைச் சுவைக்கிறார்கள். இந்த விழா அவர்களது புதிய சிந்தனைக்கு ஒரு துவக்கம்.

> சமூகத்தில் நடைபெறும் காதல் மணங்கள் வெற்றியடைய கவர்ச்சி - வர்க்க அந்தஸ்தை உள்ளடக்கிய காதல் உணர்வு ஊக்குவிக்கிறது. தீண்டாமை மறுப்பு மணம் வெற்றியடைவதற்கு எம் தோழர்களின் சமூக உணர்வே காரணம் ஆகிறதன்றி வெறும் காதல் உணர்வல்ல.

புதிய ஜனநாயகப் புரட்சிக்காக தமது குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வதாக மணமக்கள் உறுதிமொழியேற்று மாலை மாற்றுகின்றனர். சாதி - தீண்டாமை மறுப்பு மணமக்கள் வாழ்க வாழ்கவே என்ற முழக்கம் மண்டபத்தை நிறைக்கிறது. இதுவரையிலும் இனிமேலும் வாழ்க்கையைப் போராட்டப் பாதையில் அமைத்துக் கொள்வதற்கான நம்பிக்கையையும், துணிவையும், பொறுப்புணர்வையும் அக்கணத்தில் பெறுகிறார்கள் மணமக்கள்.

விவசாயப் புரட்சி என்ற வர்க்கப் போராட்டத்தினூடாகத்தான் சாதி ஒழிப்பிற்கான அடித்தளத்தை நிறுவமுடியும் என்ற போதிலும், சாதிகளற்ற எதிர்கால சமூகத்தை இன்றே வாழ்ந்து காட்டுவதன் மூலம், சாதிகளிலான இன்றைய சமூகத்திற்கு நம்பிக்கை ஏற்படுத்துகிறார்கள் கம்யூனிஸ்டுகள். அதுதான் சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்லும் செயலூக்கமுள்ள நம்பிக்கை.

மணவிழா நடந்த மண்டபத்தில் வேலை செய்யும் ஒரு பெண்மணி. முறையான திருமணங்களைக் கண்டிருந்த அவர் இவ்விழாவை ஆரம்பத்தில் சட்டை செய்யவில்லை. நேரம் செல்லச் செல்ல மண்டபத்தில் நிறைந்திருந்த மக்களை வியப்புடன் பார்க்கிறார். நிகழ்ச்சிகளையும் சற்று கவனிக்கிறார். ஒதுங்கியிருந்தவர் முழு மனதுடன் உரைகளைக் கேட்கிறார். விழா முடிந்து நள்ளிரவு அமைதியில் தோழர்களை அணுகிக் கேட்கிறார், "எங்க வீட்லயும் ஒரு பொண்ணு இருக்கு. உங்க தோழர்கள்ள ஒருத்தருக்கு கட்டிக் கொடுக்கலாம்னு நினைக்கிறேன்."

■ இளநம்பி



படிப்பகம்

www.padippakam.com

# உங்கள் தலையில் மலத்தைச் சுமக்கத் தயாரா?

"புகைப்படம் எடுப்பதற்காக யாராவது ஒரு கூடை மனித மலத்தை தலையில் சுமந்து கொண்டு நில்லுங்கள், உங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு தருகிறேன்" என்று அந்த வழக்கு மன்றத்தில் பகிரங்கமாக அறிவித்தார், அந்த வழக்குத் தொடுத்த சமூக சேவையாளர் மார்டின் மக்காவான். ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை, உறைந்து போய் நின்றார்கள் - எதிரிகள். வழக்கில் அவர் வெற்றி பெற்று விட்டார்.

வழக்கே என்னவென்றால், மிக மிக இழிவானதாகவும் அவமானகரமானதாகவும் கருதப்படும் மனித மலம் அள்ளும் தொழிலை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதுதான்.

மனித மலத்தை மனிதர்களே அள்ளும்படி செய்யும் இழி செயலை ஒழிக்கும் கோரிக்கை எழுந்து ஒரு நூறாண்டுக்கும் மேலாகிறது. இதற்காகக் கடந்த 50 ஆண்டுகளில் பல கமிட்டிகளும் போட்டு, அவற்றின் பரிந்துறைகள் அரசாங்க ஆவண இருட்டு அறைகளில் உறங்குகின்றன.

1993-இல் எடுப்புக் கழிப்பறைகள் கட்டுவதையும், மனித மலம் அள்ளிச் சுமக்கும் தொழிலையும் மத்திய அரசு தடை செய்தது. அத்தொழில் செய்யும் நகர சுத்தித் தொழிலாளர்களின் மறுவாழ்விற்கென்று ஒரு திட்டமும் தீட்டியது. ஆனால் இன்றும் நகர சுத்தித் தொழிலாளர்கள் அல்லது பங்கிகள் என்று அரசுப் பதிவேடுகளில் குறிப்பிடப்படுவோர் எட்டு இலட்சம் பேர் - சமுதாயத்தால் இழிவாகக் கருதப்படும், கொடிய நோய்களுக்குக் காரனமான அத்தொழிலை செய்யும்படி நிர்பந்திக்கப்படுகின்றனர்.

எடுப்புக் கழிப்பறை கட்டுவது மற்றும் மனிதர்களே மலம் அள்ளுவது தடுப்புச் சட்டப்படி அதற்குக் காரணமான அதிகாரிகளுக்கு ஓராண்டு சிறையும் இரண்டாயிரம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும். அதோடு தாழ்த்தப்பட்டவர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழும் தண்டிக்கப்படுவார்கள். இவ்வளவு இருந்தும் கேரளம் தவிர எல்லா மாநிலங்களிலும் இந்த முறை இன்னமும் நீடிக்கிறது.

இதை எதிர்த்து, குஜராத் மாநிலம் தண்டுகா வட்டம் ரான்பூர் நகரில் உள்ள 35 நகர சுத்தித் தொழிலாளர்கள் சார்பாக வழக்குத் தொடுத்தார், சமூக சேவகர் மார்ட்டின். தனது வழக்குக்குச் சாட்சியமாக தலையில் மலம் சுமக்கும் பெண்களின் புகைப் படங்களையும், "வீடியோ" படங்களையும் வழக்கு மன்றத்தில் சமர்ப்பித்தார்.

அதை மறுத்த அரசு வக்கீலும் அதிகாரிகளும், "அந்தப் பெண்களுக்குக் கூலி கொடுத்து (போஸ் கொடுக்கும்படி) நிற்க வைத்து புகைப்படம் எடுத்து வந்திருக்கிறார், ஆகவே அந்த சாட்சியத்தை ஏற்கக் கூடாது" என்று வாதாடினர். அப்போதுதான், அப்படிச் செய்தும் காட்டும் எவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் தருவதாக சவால் விட்டார், மார்ட்டின். நகர சுத்தித் தொழிலாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்தது. அப்போதைக்கு வாயடைத்து நின்ற அரசு வக்கீல்களும் அதிகாரிகளும் உயர்நீதி மன்றத்திடம் மேல் முறையீடு செய்தனர். உயர்நீதி மன்றம் விசாரணைக் கமிசன் போட்டுள்ளது.

இதற்கிடையே, ரான்பூர் நகரசுத்தித் தொழிலாளர்கள் சட்ட விரோத வேலை நிறுத்தம் செய்ததாகக் கூறி



மனிதர்கள் மலம் அள்ளும் முறையை எதிர்த்து, குஜராத் மாநிலம் தண்டுகா வட்டம் ரான்பூர் நகரில் உள்ள 35 நகரசுத்தித் தொழிலாளர்கள் சார்பாக வழக்குத் தொடுத்த சமூக சேவகர் **மார்ட்டின் மக்காவான்.**

வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். மீண்டும் ஒரு வழக்கு நடத்தி, அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி தீர்ப்பு வந்தது. ஒப்புக் கொண்ட உள்ளூராட்சி மீண்டும் அதே வேலை செய்யும்படி நிர்பந்தித்தது; அவர்கள் மறுக்கவே ஊரிலுள்ள எல்லா எடுப்புக் கழிப்பறைகளையும் பூட்டிவிட்டது. "இவர்கள் சம்பளம் மட்டும் கேட்கிறார்கள், கழிப்பறைகளைச் சுத்தம் செய்ய மாட்டார்களாம்!" என்று கூறி, ஊர் மக்களைத் தூண்டிவிடுகிறார் உள்ளூராட்சித் தலைவர். கழிப்பறைப் பூட்டை உடைத்து மக்கள் தொடர்ந்து பயன்படுத்துகின்றனர். ஊரில் உள்ள ஏழை, எளிய மக்கள் நகர சுத்தித் தொழிலாளர்களை ஆதரிக்கின்றனர்; எடுப்புக் கழிப்பறைகளை இடித்து நீரடித்துச் சுத்தம் செய்யும் நவீனக் கழிப்பிடம் கட்டித்தருமாறு மக்களும் நீதிமன்றமும் கோருகிறது. ஆனால் அதற்கு நிதி கிடையாது என்று சொல்லி உள்ளூராட்சி நிர்வாகம் மறுக்கிறது.

கடந்த நவம்பரில், அகமதாபாத் நகர கல்வியாளர்கள், சமூக சேவகர்கள், வழக்கறிஞர்கள் உட்பட முக்கியப் பிரமுகர்கள் முன்பு ரான்பூர் நகர சுத்தித் தொழிலாளர்களின் விளக்கக் கூட்டம் நடந்தது. அவர்களது குறைகளைக் கேட்ட பார்வையாளர்களில் சிலர் கண்களில் கண்ணீர் பனித்தது.

பலியாடு கிராம நகர சுத்தித் தொழிலாளி லீலா பெண் சொன்னார், "மழைக் காலங்களில், நீரும் மலமும் கலந்து, அதை நாங்கள் தலையில் சுமந்து செல்லும்போது கூடைகளில் இருந்து அப்படியே தலை, முகம், துணியெல்லாம் வழியும்... வீடு திரும்பியபின் சாப்பிடவே அருவெறுப்பாக இருக்கும். துணி, மயிர்களில் இருந்து அந்த நாற்றம் போகவே போகாது. கோடை காலத்திலோ சாப்பிட முன் கைகளைக் கழுவவே தண்ணீர் கிடைக்காது. இரண்டு காலங்களில் எது மோசமானது என்று சொல்லவே முடியாது."

இதைக் கேட்டு மனம் நெகிழாதவர்கள், அருவெறுப்போடு முகஞ் சுழிப்பவர்கள் மனிதர்களே இல்லை. மனிதர்களாக இருந்தாலும் அவர்கள் கல்நெஞ்சம் படைத்தவர்களாகத்தான் இருக்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

''பீ'', ''மலம்'' ஆகிய சொற்கள் உச்சரிக்கவே அசிங்கமானவை என்று கருதப்படும் இங்குதான் எடுப்புக் கழிப்பறைகளும் உள்ளன; மனித மலத்தை மனிதர்களே அள்ளிச் சுமப்பதை தொழிலாகக் கொண்ட ஒரு சாதியும் வாழ்கிறது. இதற்காக இந்த நாடே, இந்தச் சமுதாயமே வெட்கித் தலை குனிய வேண்டாமா? இது இந்த நாட்டுக்கே அவமானச் சின்னம் அல்லவா? இருந்த போதும் இதை முற்றாக ஒழிக்க வேண்டும் என்கிற எண்ணம் உள்ளூராட்சி உறுப்பினர்களில் இருந்து நாட்டின் முதல் குடிமகனாகக் கருதப்படும் அரசுத் தலைவர் வரை யாருக்குமே தோன்றவில்லை. இதில் வேதனைக்குரியது, சமூக நீதிக்காக வாதாடும் தலைவர்கள், ''தலித்'' போராளிகள் ஆகியோரும் கூட இந்தப் பிரச்சினைக்குப் பாரா முகம் காட்டுகின்றனர்.

கிராமங்கள், சிறு நகரங்களின் செல்வந்தர்கள் தமது மாளிகைகளின் புறக்கடைப் பக்கம் உயரமான மேடை அமைத்து வீட்டுக்கு வெளிப்புறமாக, ஒரு தகரத் கதவால் மூடப்பட்ட, குகை போன்ற அமைப்புக் கொண்ட எடுப்புக் கழிப்பறையை அமைத்துக் கொள்கிறார்கள். இவை நடுத்தர வசதியுள்ளவர்களின் புறக்கடையில் அமைக்கப்படும் நான்கு சுவருக்குள் உள்ள திறந்த வெளி கழிப்பறைகளைவிட மோசமானவை. குகை அமைப்புக் கழிப்பறைக்குள் கைகளையும், தலையையும் உள்ளே விட்டு மலம் வாறுவதும், மேலிருந்து, குறிப்பாக மழைக் காலங்களில் மலமும் சிறுநீரும் கொட்டுவதுமாக கொஞ்சமும் சகிக்க முடியாத வேலையாக்கி விடுகிறது.

தென்னந்துடைப்பங்களும், சிறு தகரத்தட்டுகளும், தகரச் சட்டிகளும் தான் இந்தத் தொழிலாளர்களுக்குத் தரப்படும் கருவிகள். பல ஊர்களில் பிரம்புக் கூடைகள்தாம் தரப்படுகின்றன. தேய்ந்து போன கட்டைத் துடைப்பங்களுக்கும், உடைந்து போன தகரத் தட்டுகள், தகரச் சட்டிகளுக்கும், பிய்ந்து போன பிரம்புக் கூடைகளுக்கும் மாற்றுப் பெறுவதற்கே அவர்கள் கெஞ்சுவதை கண்டு மனிதனாக உள்ளவன் எப்படிச் சகித்துக் கொள்ள முடிகிறது!

சில நகராட்சிகளில் மலத் தொட்டிகள் வைத்த தள்ளு வண்டிகளும், மாட்டு வண்டிகளும் தருகின்றன. புதுக்கோட்டை போன்ற சில நகராட்சிகளில் நான்கு சுவர் வைத்த திறந்த மைதானம் தான் கழிப்பறை. நகராட்சிகளும் சென்னை போன்ற மாநகராட்சிகளும் நவீனக் கழிப்பிடங்களையே பராமரிக்கத் தவறுவதாலும், இப்போது கட்டணக் கழிப்பிடங்கள் அமைத்து வசூல் செய்வதிலேயே அக்கறை காட்டுவதாலும், ஏழை மக்கள் விடிவதற்கு முன் பொதுக் கழிப்பிடங்களைச் சுற்றியுள்ள திறந்த வெளியையே பயன்படுத்துகிறார்கள். நவீன கழிப்பிடங்களும், பாதாள சாக்கடைகளும் உள்ள பெரு நகரங்களில் கூட அடைப்பு நீக்குவதற்காக மனிதர்களே சாக்கடைக் குழாய்களுக்குள் மூழ்கி எழுந்திரிக்க வேண்டியுள்ளது. அப்படி மூழ்கும் பொழுது நச்சுக் காற்று தாக்கிச் சாவதும் உண்டு. அரசு அமைப்புகள் நன்கு அறிந்த இத்தகைய முறைகளை இன்னமும் வைத்துக் கொண்டிருக்கின்றன.

குஜராத், தண்டுகா வட்டம்: மலம் சுமக்கும் தினசரி வேலைக்கு புறப்படும் பெண்கள்.



பிற மனிதர்களின் நலன்களுக்காக இவ்வளவு கடினப்பட்டு உழைக்கும் நகர சுத்தித் தொழிலாளர்களின் சமூக, பொருளாதார நிலையோ அவர்களுடைய தொழிலைப் போலவே அவலமாக உள்ளது. நகரங்களில் திறந்த வெளிச் சாக்கடையோரம், கிராமப்புறங்களில் ஊருக்கு வெளியே - பிற தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கும் காலனிகளில் கூட சேர்க்க மறுத்து சேரிகளுக்குத் துரத்தப்படுகிறார்கள். தொழிலின் அவலங்களை மறப்பதற்காக சாராயம் - போதைக்கே அற்பக் கூலியும் போய் விடுகிறது. பசியிலும் நோயிலும் பன்றிகள் மேயும் மைதானத்திலும் வசிக்கும் அவர்களுடைய குழந்தைகள் சிறு வயதிலேயே தொழில் வாரிசுகளாகப் பயிற்றுவிக்கப் படுகிறார்கள். இந்திய சாதிய அமைப்புகளில் கடையோரிலும் கடையோராக வைக்கப்பட்டுள்ளனர். கொடிய நோய்கள் தாக்கி சொற்ப வயதிலேயே மாண்டுப் போகும் இம்மக்களுக்கு சாவில் கூட மரியாதை கிட்டுவதில்லை; இடுகாடுகளில் கூட இடம் மறுக்கப்பட்டு விரட்டப்படுகிறார்கள்.

''நகர சுத்தித் தொழிலாளர்களின் இந்தத் தொழில், வாழ்க்கை அவலத்துக்குக் காரணம் போதிய நிதியில்லை; எல்லா மக்களுக்கும் எல்லா கிராமங்கள் நகரங்களுக்கும் நவீனக் கழிப்பிடங்களும் பாதாள சாக்கடை வசதிகளையும் ஏற்படுத்தித் தர முடியாது'' என்று எல்லா ஆட்சியாளர்களும் சொல்கிறார்கள்.

அது உண்மையல்ல. ஆயிரம் இணை செருப்புகள், சந்தன மரக் கதவுகள், பளிங்குக் குளியல் அறைகள் - தொட்டிகள் - குளங்கள், வளர்ப்பு நாய்களுக்கும் குளு குளு வசதி, குலுங்கும் சொகுசுக் காரிலும் கூட பூதூவிய பாதையில் பயணம் - இப்படிப்பட்ட ஆடம்பர-உல்லாச-ஊதாரி வாழ்க்கை ஜெயா - சசி கும்பல் மட்டும்தான் அனுபவிப்பது என்றில்லை; பிற அரசியல் தலைவர்கள், முதலாளிகள், நிலவுடைமையாளர்கள் அவற்றில் பத்தில் ஒரு பங்காவது அனுபவிக்கின்றனர். இந்நாட்டில் தான் அவலமே வாழ்க்கையாகக் கொண்ட இந்தத் தொழிலாளர்களையும் காண்கிறோம்.

இந்தக் காட்சியைக் காணும் மனம் கொதிக்கவில்லை என்றால், அது மரத்துப்போய் விட்டது என்றுதான் பொருள். ''இல்லை, அந்தச் சாதியில் பிறந்தவர்கள், அந்த வாழ்க்கைக்காகவே விதிக்கப்பட்டவர்கள், அதற்காக நான் ஏன் கவலைப்பட வேண்டும், அக்கறைப்பட வேண்டும்'' என்று எண்ணும் அளவுக்கு மனம் வக்கரித்துப் போயிருக்க வேண்டும்.

• சாத்தன்



படிப்பகம்

www.padippakam.com

## சாதி–தீண்டாமை ஒழிப்பு இயக்கம்:
# நமது நடைமுறையும் அவர்களது சவடாலும்

கடைந்தெடுத்த சாதி - மதவெறி சமூக அமைப்புகள், சங்கராச்சாரிகள் போன்ற படுபிற்போக்கான பார்ப்பனியக் கருத்தாளர் தவிர தமிழ்நாட்டிலுள்ள அநேக அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்கள், பத்திரிக்கைகள் கடந்த சில காலமாக சாதி - தீண்டாமைக்கு எதிராகக் குரல் எழுப்பி வருகிறார்கள். இந்தக் குரல்கள் எல்லாமே உண்மையான அக்கறையுடன் ஒலிப்பவை என்று எடுத்துக் கொள்ள முடியாதுதான் என்றாலும் தென் மாவட்டங்களில் தொடர்ந்து நடந்த சாதிப் படுகொலைகள் அந்தப் பிரச்சினையில் அக்கறை கொள்ளும்படி பல இயக்கங்களைத் தூண்டியுள்ளன.

சாதி - தீண்டாமை ஒழிப்பு எதிர்ப்பில் எப்போதும் சீர்திருத்த கண்ணோட்ட முறையை, தி.மு.க., சி.பி.ஐ. முதல் அதில் திடீர் அக்கறை காட்டும் கபிஸ்தலம் பண்ணையார் கருப்பையா மூப்பனார், பூணூல் மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சி வரை மாநாடுகள் நடத்திவிட்டன. தம் பங்குக்குக் கணக்குக் காட்டும் தோரணையில் பெரியார் தி.க., மணியரசனின் த.தே.பொ. கட்சி முதல் மக்கள் யுத்தக் குழு சார்பாகவும் மாநாடுகள் நடத்தப்பட்டன.

இதே கால கட்டத்தில் சிறப்பான முக்கியத்துவம் கொடுத்து சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை தமிழ்நாடு முழுவதும் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிர மாணவர் - இளைஞர் முன்னணி ஆகியவை இணைந்து நடத்தி வருகின்றன. ''பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவுமொன்று'' என்று கருத முடியாத அளவு வீச்சோடு இவ்வியக்கம் நடக்கிறது.

இதற்கு எதிராக ஆதிக்க சாதி வெறியர்கள் போலீசுத் துணையோடு நேரடித் தாக்குதலில் ஈடுபடுவது புதிதோ, வியப்புக்குரியதோ இல்லை. ஆனால் பெரியாரியம், அம்பேத்காரியம், இவற்றோடு மார்க்சியம் - லெனினியம் கலந்து நூற்றுக் கணக்கில் தோன்றியுள்ள மண்டல்வாதிகள், தலித்தியர்கள், தமிழினவாதிகள் - நான்குபேர் கூடினாலும் சரி, அரங்கத்திலோ - பொதுக் கூட்டத்திலோ ஒலிவாங்கிமுன் நின்றாலும் சரி இந்தப் புரட்சிகர அமைப்புகளின் இயக்கங்களைத் தாக்கிப் பேசுவது கொஞ்ச நஞ்சமல்ல.

தினமணி சம்பந்தத்தையும் இந்தியா டுடே வாசந்தியையும் கூட சமூக நீதி, சாதி - தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் நம்பகமான நட்பு சக்தியாகக் கருதும் இவர்கள் இந்தப் புரட்சிகர அமைப்புகள் நம்பத்தகாத, ஒழித்துக் கட்ட வேண்டிய எதிரிகளாகவே சித்தரிக்கின்றனர். இவர்களின் சித்தாந்தக் குருக்களாகக் காட்டிக் கொள்ளும் பேராசிரியர்கள் கல்யாணி, அ. மார்க்ஸ், ராஜ கௌதமன், பழமலய், சுப.வீ., இன்குலாப், அரசியல் - தத்துவ ஆய்வாளர்கள் ரவிக்குமார், ராஜதுரை போன்ற மேதைகளும் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாசு, பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் கான்சிராம், புதிய தமிழகம் நிறுவனர் கிருஷ்ணசாமி ஆகியோரை சமூக, சாதி - தீண்டாமை ஒழிப்புத் தலைவர்களாக நம்பலாம்; ஆனால் ம.க.இ.க.வின் திருவரங்கம் கருவறை நுழைவு, அசுரகானம் ஒலிப்பேழை போன்ற முயற்சிகள் தி.மு.க.வைப் போன்று பிரச்சார நலன்களுக்காக மேற்கொள்ளப்படுபவைதாம்; அதன் இயக்கங்கள் எல்லாம் வெறும் பரபரப்பை ஏற்படுத்தி ஆதாயம் தேடுவதுதான் என்று மதிப்பீடு செய்கிறார்கள். இவர்களுக்கிடையே இந்த மதிப்பீட்டின் அளவில் மட்டும் வேறுபாடு இருக்கலாம்.

ஆனால் 1940-களின் இறுதியில் தஞ்சை மாவட்டத்தில் பொதுவுடமையாளர்கள் நடத்தியதற்குப் பிறகு, சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை சரியாகவும் வீச்சாகவும் முன்னெடுப்பவர்கள் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள்தாம். ஏனென்றால்

* இந்தப் புரட்சிகர அமைப்புகள் சாதி - தீண்டாமை ஒழிப்புக்காக முன்வைக்கும் முழக்கங்கள், தீர்வுகள் தாம் மிகச் சரியானவை, அவசியமானவை
* இந்தப் புரட்சிகர அமைப்புகள் மட்டும்தான் தாம் முன்வைக்கும் முழக்கங்களின் அடிப்படையில் மக்களைத் திரட்டி உறுதியாக, தீவிரமாக நடைமுறைப்படுத்துபவை.
* அதற்காக ஆதிக்க சாதி அமைப்புகள், வெறியர்களின் தாக்குதலுக்கு இலக்காகின்றன. அது மட்டுமல்ல மண்டல்வாதிகள், தலித்தியர்கள், தமிழினவாதிகளின் கடுமையான அவதூறு - வசவுகளுக்கும் இலக்காகின்றன.
* மண்டலவாதிகள், தலித்தியர்கள், தமிழினவாதிகள், சாதி - தீண்டாமை ஒழிப்புக்காக என்ன திட்டம், நடைமுறை வைத்திருக்கிறார்கள் என்று நெருங்கிப் போய் நேரடியாகக் கேள்வி எழுப்பும் போது ஒன்றுமே இல்லை என்பதை அப்பட்டமாக ஒப்புக்கொள்கிறார்கள்.

சாதி - தீண்டாமை இரண்டு கூறுகள் இணைந்த அமைப்பு முறை. ஒன்று, மற்றவரை ஒதுக்கி வைப்பது. உயர்குலப் பிறப்பினரை சமுதாயத்தின் பிற பகுதியினர் தீண்டக்கூடாது; அவர்கள் பார்வையில் படக்கூடாது; அவர்கள் வழியில் எச்சில் துப்பக்கூடாது, அதற்காக கழுத்தில் கலயத்தைக் கட்டிக் கொண்டு நடக்க வேண்டும்; அவர்கள் வசிக்கும் குடியிருப்புகளில் இருந்து ஊருக்குள் காற்று வராத வகையில் காலனிகள் அமைய வேண்டும் - இப்படி மற்றவரை விலக்கி வைப்பது ஒரு கூறு.

இன்னொன்று உயர்குலப் பிறப்பினராகக் கருதும் தமது பரம்பரையில் மற்றவர் இரத்தம் கலந்து விடக்கூடாது என்பதற்காக அகமணமுறையைக் கடைப்பிடிப்பது, ஊரைச் சுற்றிச் சுவர் எழுப்பிக் கொள்வது - இப்படி மற்றவரிடம் இருந்து விலகி நிற்பது.

விலக்கி வைப்பது, விலகி நிற்பது இரண்டையுமே தகர்க்காமல் சாதியத்தையும் தீண்டாமையையும் ஒழிக்க முடியாது. விலக்கிவைக்கும் முறையைக் கடைப்பிடிக்கும் போது எதிராளியை நேரடியாகப் புரிந்து கொள்வதும் எதிர்த்துப் போராடுவதும் எளிது. இது நேரடியான பகைப் பிரகடனம். சில சமயம் பகிரங்கமாகவும், சில சமயம் மறைமுகமாகவும் சாதிகளுக்கிடையே பகைத் தன்மை நீடிப்பதைக் குறிக்கிறது. ஆனால் விலகி நிற்பது நயவஞ்சகமானது. எளிதில் முறியடிக்க முடியாதது.

சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களாலும் போராட்டங்களாலும் சாதியம் - தீண்டாமைக்கு எதிரான தாக்குதல் தீவிரமடைய, தீவிரமடைய விலக்கி வைக்கும் முறையை விட விலகி நிற்கும் முறையை உயர்குலப் பிறப்பினராகக் கருதிக் கொள்வோர் அதிகம் கையில் எடுத்துக் கொண்டு வருகின்றனர்.

தேநீர்க் கடைகளில் தனிக் குவளைகள் வைக்கும் முறையை ஒழிப்பதற்கான போராட்டங்கள் - நடவடிக்கைகள் வலுவடையும் போது, சில குறியீடுகளைக் குவளைகளில் பொறித்துக் கொண்டு தீண்டத்தகாதவர் - தீண்டத்தக்கவருக்குப் பிரித்து தேநீர் கொடுப்பது கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நயவஞ்சகத்தைத் தட்டிக் கேட்டால் கடையையே மூடிவிட்டுப் போய் விடுகிறார்கள்.

விழுப்புரம் - காரப்பட்டு கிராமத்தில் கோவில் நுழைவு உரிமை கேட்டு வி.வி.மு தலைமையில் தாழ்த்தப்பட்டவர்கள் போராடியபோது, கோவில் சாவியையே தாழ்த்தப்பட்ட உள்ளூராட்சித் தலைவரிடம் கொடுத்து விட்டார்கள், மேல் சாதியினர். ''எங்களுக்கு சாதி இருந்தால் போதும் கோவில் வேண்டாம்'' என்று பூசையையே நிறுத்தி விட்டார்கள்.

திருச்சி கிறித்துவர் இடுகாட்டில் சாதி அடிப்படையில் எழுப்பப்பட்ட தடுப்புச் சுவரைத் தகர்த்தபோது, ''உயர்குல கிறித்தவர் இடுகாடு அந்தச் சாதிகளைச் சேர்ந்த தனியாருக்குச் சொந்தமானது என்று நிலைநாட்டி மீண்டும் தடுப்புச் சுவர் கட்டிக் கொண்டார்கள்.'' பொது இடுகாடு என்று வைத்தால்தானே பிரச்



படிப்பகம்

www.padippakam.com

சினை, நாங்கள் சொந்தமாக நிலம் வாங்கி கல்லறை, இடுகாடு வைத்துக் கொள்கிறோம்; அங்கே நாங்கள் அனும திப்பவர்கள் மட்டுமே புதைக்கப்பட வேண்டும்'' என்று போகிறார்கள்.

திருச்சி - காந்திபுரத்தில் கோவில் தேர் தாழ்த்தப்பட்டவர் வீதி வழியே போவது குறித்த பிரச்சினை எழுந்த போது, ''எங்கள் சொந்தச் செலவில் தேர் கட்டி இழுப்பது, நாங்கள் விரும்பும் வழி யிலேதான் போகும்'' என்று மேல்சாதிக் காரர்கள் வாதிட்டனர்.

உயர் சாதிக்காரர்கள், தமது குலம், கோத்திரம், இரத்தத் தூய்மையைப் பாது காத்துக் கொள்வதற்கான அகமண முறை தான், இந்த விலகி நிற்கும் முறைதான் தீண்டாமையின் அதி உயர்ந்த வடிவமாக உள்ளது.

''இந்து மதத்தில் இருந்தால்தானே சாதிய - தீண்டாமைக் கொடுமை, புத்த மதத்துக்குப் போகிறோம், இசுலாமிய மதத்துக்குப் போகிறோம்'' என்பது ஒரு தீர்வாக அம்பேத்கரும் பெரியாரும் சொன்ன வழியை சிலர் பின்பற்றினர். இதனால் பௌத்த, இசுலாமிய, கிறித்துவ மதங்களில் சமத்துவம் இருக்கிறதா இல் லையா என்பது இருக்கட்டும். அப்படி மதம் மாறியவர்களைக் கொண்ட சமுதா யத்தையே தனிச் சாதியாக, தீண்டத்தகா ததாக ஒதுக்கி வைத்து விடும்போது என்ன செய்வது. ''இவரு நம்ம தமிழா ளுங்க, அவரு முஸ்லீம்ங்க'' என்று அடையாளப்படுத்திப் பேசுவது இந்து, கிறித்தவ மதங்களைச் சேர்ந்த சாதாரண மனிதர்களே பேசுவதைக் காண்கிறோம்.

''சாதி ஒழிய வேண்டும் என்று நிர் பந்திக்கிறீர்களா? நாங்கள், எங்களைப் பொருத்தவரை அகமண முறையைப் பின்பற்றி சாதியைப் பராமரிப்போம். தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று தீவிரமாகப் போராடுகிறீர்களா, நாங்கள் மற்ற சாதிகளிடம் இருந்து விலகி நின்று விடுவோம்'' என்கிற போக்கு அதிகரித்து வரும்போது என்ன செய்வது?

ஆகவே, விலக்கி வைப்பது, விலகி நிற்பது என்கிற இரண்டையும் முடிவுக் குக் கொண்டு வருவதுதான் சாதியம் - தீண்டாமையை உண்மையில் ஒழிப்பதா கும். அதாவது ஒவ்வொரு மனிதனும் மற்றவரை சாதி - தீண்டாமை காரணமாக ஒதுக்கி வைக்காமல், ஒதுங்கி நிற்காமல் வாழ ஒப்புக் கொள்வதுதான் உண்மை யில் சாதி - தீண்டாமையைத் துடைத்தெ றிவதாகும்.

★☆★

''தீண்டாமைக் கொடுமையை ஒழிப்பதற் குத் தீண்டத்தகாதவர்களுக்கு நீங்கள் உப தேசம் செய்வது இருக்கட்டும். அதற்காக நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று யோசித்துப் பாருங்கள்'' என்று தீண்டத் தக்க சாதி அறிஞர்களிடம் கேட்டார் அம் பேத்கர். இதுதான் முக்கியமானது.

''இனிமேலும் இந்த சாதீய - தீண்டா மைக் கொடுமையை சகித்துக் கொள்ள மட்டோம்; இதைத் தொடர்ந்து எங்கள் மீது திணித்தால் நாங்கள் பதிலடி கொடுப் போம், திருப்பித் தாக்குவோம்'' என்கிற நடவடிக்கையில் இறங்குவதுதான் தாழ்த் தப்பட்டவர் அமைப்புகள் செய்யக் கூடிய ஒரே காரியம்.

இதை மட்டுமே செய்வது, தீண்டத் தக்க சாதிகளிடம் சாதி வெறியைத் தூண்டி, பகையை நிரந்தரமாக்கி தாழ்த் தப்பட்ட மக்கள் மீது பழிவாங்கும் தாக்கு தல் தொடர்வதற்குத்தான் துணை புரியும்.

அதற்குமாறாக, தாழ்த்தப்பட்டவர் களின் விடுதலைப் போராட்டங்களுக்கு இணையாக, இன்னும் அதைவிட மேலாக சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக் கங்கள் தீண்டத்தக்க சாதிகளிடம்தான் எழவேண்டும்.

''சாதி - தீண்டாமை அமைப்பு முறை அநீதியானது, பிற்போக்கானது, ஒட்டு மொத்த சமுதாய வளர்ச்சித் தடை யானது இனிமேலும் நீடிக்க முடியாது, நீடிக்கக் கூடாது'' என்பதை ஏற்று நிராக ரிக்கும்படி தீண்டத்தக்க சாதிகள் நிர்பந் திக்கப்பட வேண்டும். அதற்கான இயக் கம் தீண்டத்தக்க சாதிகளை மையமாகக் கொண்டே நடத்தப்பட வேண்டும். இது பிரச்சினையின் தீர்வுக்கான முதல் அடிப் படை.

> ***1940 - களின் இறுதியில் தஞ்சை மாவட்டத்தில் பொதுவுடமையாளர்கள் நடத்தியதற்குப் பிறகு, சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக் கத்தை சரியாகவும் வீச்சாக வும் முன்னெடுப்பவர்கள் நக்சல்பாரிப் புரட்சியாளர் கள் தாம்.***

சாதிய - தீண்டாமை அமைப்பு முறை நமது நாட்டில் சுமார் 2000 ஆண்டு களாக உள்ளது. இதற்கு எதிராக பௌத் தம் முதல் அம்பேத்கர் - பெரியார் வரை எத்தனையோ கலகங்கள் வெடித்திருக் கின்றன. ஆனால் அது இன்னமும் நீடித்தி ருப்பதற்குக் காரணம் இந்த முயற்சிகள் எல்லாம் அந்த அமைப்பு முறைக்குள்ளி ருந்தே, அதற்குள்ளாகவே தீர்வு காண முயன்றன. எனவேதான் இந்த முயற்சி கள் எல்லாம் சறுக்கி மீண்டும் சாதி - தீண்டாமை அமைப்புக்குள்ளாகவே விழுந்து நொறுங்கின. அந்த அமைப் புக்கு வெளியிலிருந்து - பிற சமுதாய - வர்க்க நோக்கிலிருந்து அது தாக்கித் தகர்த்தப்பட வேண்டும். காலனிய - ஏகா திபத்தியம் அத்தகைய முதற்தாக்குத லைத் தொடுத்தபோது சாதி - தீண்டாமை ஆட்டங்காணத் துவங்கியதை அறி வோம். ஆனால் ஏகாதிபத்திய - நிலப்பி ரபுத்துவ சமரசம் அதன் நகர்வைத் தடுத்து விட்டது. எனவே சாதி - தீண் டாமை அமைப்புக்கு வெளியிலிருந்து தாக்குதல் தொடுப்பதே அதற்கு இறுதி அடியாக இருக்கும். இது பிரச்சினையின் தீர்வுக்கு இரண்டாவது அடிப்படை.

இந்த இரண்டு அடிப்படையில்தான் நக்சல்பாரிப் புரட்சியாளர்களின் சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம் நடத்தப்படு கிறது. தனித் தேநீர் குவளைமுறை ஒழிப்பு, கோவில் - கருவறை நுழைவு, சாதி மறுப்புத் திருமணங்கள் எல்லாமே தாழ்த்தப்பட்ட சாதிகளின் போராட்ட மாக மட்டுமல்ல, தீண்டத்தக்க சாதியின ரும் பங்கேற்கும் இயக்கமாகவே நடத்தப் படுகிறது. தீண்டத்தக்க சாதிகளுக்கு நிர்ப் பந்தம் தரும் வகையிலேயே முழக்கங் கள் முன்நிறுத்தப்படுகின்றன.

சாதி வெறிக் கலவரங்கள் நடந்த சிவகிரி, கம்பம், விழுப்புரம், பென்னக ரம் பகுதிகளில் - மேல் சாதியினர் பெரும் பான்மையாக வாழும் தெருக்களில் சாதி - தீண்டாமை ஒழிப்பு பொதுக் கூட்டங்க ளில் நமது தோழர்கள் முழங்குகிறார்கள். ''நாங்க ஜெயலலிதா, நரசிம்மராவ் ஊழ லைப் பத்தி பேச வரல உங்க கட்ட இருக் கிற ஊழலைப் பத்தி பேச வந்திருக்கி றோம்'' என்று தீண்டத்தக்க சாதிகளைப் பார்த்து நேரடியாகவே இடித்துரைக்கி றார்கள். தமிழகமெங்கும் சுவரெழுத்தும் எழுதுகிறார்கள். தோழர்கள் தாக்கப்படு கிறார்கள், ஆனால் கலவரங்கள் மூழ வில்லை. ''நம்ம சாதிக்காரனே இப்படிச் செய்யறான் அதுக்குப் போயி அவனுங் களே எப்படி தாக்கறது?'' என்பதே எதிர் வாதமாக இருக்கிறது.

''மலைக்கு மரம் வெட்ட போறப்போ, அவங்க கிட்டத் தாண்டா கஞ்சி வாங்கிக் குடிக்கிறீங்க. அப்ப மட் டும் கீழ்சாதி, தீண்டக்கூடாதுங்கிறது எங்க போச்சு, நாம மேல் சாதிங்கிற கௌ ரவம் என்ன ஆச்சு'' என்று தோழர்கள் கேட்கிற போது வாயடைத்து நிற்கின்ற னர் தீண்டத்தக்க சாதிகள். என்ன உரிமை யோடு இந்தக் கேள்விகள் கேட்கப்படு கின்றன? தொடர்ந்து பல ஆண்டுகளாக தீண்டத்தக்க-தீண்டத்தகாத மக்களை இணைத்து அரசியல், வர்க்கப் போராட் டங்கள் நடத்தி வருவதுதான் இந்த உரிமை, துணிவைத் தருகிறது. ஆனால் இதே கேள்வியை தாழ்த்தப்பட்ட சாதி அமைப்புகள் எழுப்பினால் அங்கே கல வரம் மூழ்கிறது.

தாழ்த்தப்பட்டவர்களின் சாதி அமைப்புகள் ஒரே ஒரு சாதி மறுப்பு திரு மணத்தைக் கூட நடத்த முடியாத நிலை யில் இதுவரை பலவற்றைப் புரட்சிகர அமைப்புகள் நடத்தி முடித்து அகமண முறையைத் தகர்த்து வருகின்றன.

இவ்வாறு சித்தாந்தம், கொள்கை, இலட்சியம், நடைமுறை ஆகியவற்றில் சரியான திசையில் சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கம் நடத்துபவை நக்சல் பாரி புரட்சி அமைப்புகள் மட்டும்தான். ●



படிப்பகம்

www.padippakam.com

## சாதி தீண்டாமை ஒழிப்பு இயக்கம்:

# "குடம் வச்ச எடத்தை தண்ணி ஊத்திக் கழுவுவாங்க, எங்களுக்கு கோவம் கோவமா வரும்."

நீரில் எழுதிய எந்த எழுத்தும் நிலைப்பதில்லை. ஆனால் நீரில் எழுதிய சாதிச் சட்டம் நிலைத்திருக்கிறது. பென்னாகரத்திற்கு அருகே கிருஷ்ணாபுரத்தில் தாசில்தார் மூக்கின் கீழேயே இன்னமும் தண்ணீர் தீண்டாமை நடக்கிறது.

தீண்டாமைக்கு எதிராக விவசாயிகள் விடுதலை முன்னணியினர் கடந்த நவம்பர் 27-ல் போராட்டம் எடுத்தார்கள். சாதி தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தின் அங்கமாக கிருஷ்ணாபுரம் வட்டார ஆதிக்கச் சாதிகளின் வசம் உள்ள பொதுக் கிணற்றிலிருந்து நீர் எடுக்கும் போராட்டத்தைத் விவிமு தோழர்கள் நடத்தினார்கள்.

அறிவிப்பு வந்ததுமே தாசில்தாரும் ஏஎஸ்பியும் சேர்ந்து 'அமைதிக் குழு' கூட்டி நாடகத்தைத் தொடங்கினார்கள். கிருஷ்ணாபுரத்தில் எந்தவிதத் தீண்டாமையும் இல்லை என்று நிரூபிக்கப் படாதபாடுபட்டார்கள். தீண்டாமைக்கெதிராக போராட்ட அறிவிப்புச் சுவரொட்டியை தாசில்தார் அலுவலகத்திலும், கிருஷ்ணாபுரம், பென்னாகரம் முழுவதிலும் ஒட்டி விட்டு நேரடியாகக் களத்துக்குச் சென்று விட்டார்கள் வி.வி.மு.வினர்.

'அமைதிக் குழு' கூட்டத்தில் அம்பேத்கார் மக்கள் கட்சி (AMK) குருநாதனும் சரி, அதிமுக சார்பாகக் கலந்து கொண்ட தாழ்த்தப்பட்ட தலைவரும் சரி கிருஷ்ணாபுரத்தில் தீண்டாமை இல்லை என்றே பேசினார்கள். இரண்டு கூட்டங்களுக்குப் பிறகு தாசில்தார் அனைவருக்கும் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். அதன்படி ''இவ்விரு இன மக்களும் சாதி வேறுபாடின்றி இவர்களுக்குள் வாடா, போடா என்றும் வாயா, போயா என்றும் சகஜமாகப் பேசி அண்ணன் தம்பியாக வாழ்ந்து வந்துள்ளனர்.''

ஊருக்குள் தீண்டாமை இன்னமும் இருக்கிறது. கிருஷ்ணாபுரத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையாக ஒரு 'காலனி'யிலும், மற்றும் இரண்டு மூன்று சிறு பகுதிகளிலுமாக வாழ்கிறார்கள்.

ஊரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தனியே கிணறு உண்டு. அது உப்பு நீர். இதைத் தவிர இன்னொரு பொதுக் கிணறும் உண்டு. இந்தக் கிணற்றில் தான் தேவைப்பட்டாலும் தாழ்த்தப்பட்டோர் நீரெடுக்க அனுமதி இல்லை. இதுவே பிரச்சனைக்குள்ளான கிணறு. தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று தனியே போரிங் குழாய் போட்டிருந்தாலும் அவை உப்புத் தண்ணீர். நல்ல நீர் வேண்டுமென்றால் ஊரிலிருந்து எல்லோருமே உள்ளூர் காவல் நிலையத்தில் உள்ள குழாய்க்குத் தான் முன்பு போவார்கள். சமீபத்தில் தான் வன்னியர் தெருக்களில் போரிங் குழாய் போடப்பட்டது. அவற்றில் நல்ல நீர் வருகிறது. இப்போது தாழ்த்தப்பட்ட பெண்கள் அங்கு சென்றுதான் தண்ணீர் எடுக்கிறார்கள்.

அங்கே பம்படியில் தீண்டாமை இன்னும் இருக்கிறது. மற்றவர் நீர் எடுக்கும்போது தாழ்த்தப்பட்ட பெண்கள் மழை வெய்யிலில் எதுவானாலும் காத்திருக்க வேண்டும். அந்தப் பக்கத்திலிருந்து 'சரி எடுவா' என்று யாராவது கட்டளை போடுவார்கள். அப்புறம் எடுக்கலாம். அதைச் சொல்லும் போது தாழ்த்தப்பட்ட பெண்களின், சிறுமிகளின் குரலில் வேதனையும் கோபமும் கலந்து வந்தது.

''அண்ணே அவுங்க வருவாங்க. நாங்க தோண்டி வச்ச எடத்த அவுங்க தோண்டி தண்ணிய ஊத்தி மெழுகுவது போல காலால தள்ளி விடுவாங்க. தண்ணி மேல் தண்ணி ஊத்திக் கழுவுவாங்க. நமக்கு கோபம் கோபமா பொங்கி வரும்...''

பிற்படுத்தப் பட்டோர் தெருக்களில் உள்ள ஆண்களும் பெண்களும் ''அவுங்களுக்குத்தான் தனிக்கிணறு இருக்கிறதே; தனி போர்வெல்பைப் இருக்கிறதே. இங்க ஏன் வராங்க?'' என்று தான் கேட்கிறார்கள். 'அமைதிக்குழு'வில் அவர்கள் தந்த வாக்குமூலப்படியே அண்ணன் தம்பியாக 'ஊரும்' 'காலனியும்' ஒன்றாக வாழ்ந்தால் தாழ்த்தப்பட்டோர்கள் எங்கே தண்ணீர் எடுத்தால் என்ன?


ஊரிலே எந்தத் தீண்டாமையும் இல்லை என்பவர்கள், விவிமு எந்தப் பொதுக் கிணற்றிலிருந்து நீர் எடுக்கப் போராட்டம் நடத்தியதோ அதற்கு அடுத்த நிலத்தில் உள்ள கோயிலுக்குள் தாழ்த்தப்பட்டவர் நுழையக் கூடாது என்கிறார்கள். சுடுகாட்டிலும் தனித் தனி இடம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரு தரப்பு அரசியல் தலைவர்களும் இதனை ''அவுங்கவுங்க ரொம்ப நாளா இப்படி ஏற்பாடு செய்துகிட்டாங்க'' என்று பூசி மெழுகி விடுகின்றனர். இதை விடக் கொடுமை, ஒரே தெருவில் இடதுபுறம் உள்ள வன்னியர் வீடுகளுக்கு முன்னால் கால்வாய் வெட்டியிருக்கிறது; கழிவுநீர் சுலபமாக வெளியேறிவிடுகிறது; ஆனால் எதிர்ப்புறம் உள்ள தாழ்த்தப்பட்டோர் வீடுகள் முன்பாகக் கால்வாய் கிடையாது.

இதையெல்லாம் நன்றாக அறிந்த விவிமு போராட்டத்தில் இறங்கியது.

கிருஷ்ணாபுரம் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்துதான் ஊர்வலம் கிளம்பியது. செம்பதாகைகளும் தீண்டாமைக்கெதிரான முழக்கங்களும் ஊர் முழுக்க மக்களை ஈர்த்தன. சம்பந்தப்பட்ட பொதுக் கிணற்றுக்கு 1/2 கி.மீ. முன்பாக ஊர்வலம் போலீசால் தடுக்கப்பட்டது.

பொதுக்கிணற்றில் நீர் எடுக்கக் கூடாதென்று எழுதிக் கொடுக்கச் சொல்லி விவிமு தோழர்கள் தாசில்தாரிடம் கேட்டார்கள். இதை எதிர்பார்க்காத தாசில்தார் ஏஎஸ்பியிடம் பேசிவிட்டு ஊர்வலத்தை மேற்கொண்டு போக அனுமதித்தார்.

கிருஷ்ணாபுரமே பரபரப்பானது. ஊர்வலத்தில்



பொதுக் கிணறு ஊருக்குத்தான், சேரிக்கல்ல



படிப்பகம்

www.padippakam.com

உள்ளூர் தாழ்த்தப்பட்ட மக்கள் கலந்து கொள்ளவில்லை. ஆனால் ஊர்வலம் நெடுகவும், கிணற்றுக்கு அருகேயும் கூட்டாகத் திரண்டு விட்டார்கள். விவிமு தோழர்கள் இந்த இயக்கம் எதற்காக என்று தெருவிலேயே நின்று விளக்கினார்கள். யாருக்கும் எதிராக யாரையும் திரட்ட இதைச் செய்ய வில்லை; தீண்டாமைக்கெதிராக எல்லோரையும் ஒன்று திரட்டுவதே நோக்கம் என்று சொல்லிவிட்டு கிணற்றை நோக்கி ஊர்வலத்தைத் தொடர்ந்தார்கள்.

விவிமு தோழர்கள் சாமிக் கண்ணு, வெங்கடேசன் ஆகியோர் தலைமை ஏற்று வழி நடத்த, அவர்கள் மனைவி, பிள்ளைகளும், மற்ற விவிமு தோழர்களும் பின் செல்ல ஊர்வலம் முன்னேறியது.

கிணற்றை நெருங்கியதும் திடீரென்று திரண்ட வன்னியச் சாதிப் பெண்கள் வெறிகொண்டதுபோல கிணற்றுச் சுவரின் மேல் கவிழ்ந்து படுத்தார்கள். ''சாதி தீண்டாமை பாராட்டும் இவர்கள் மீது நடவடிக்கை எடு!'' என்றும் சாதி ஆதிக்க எதிர்ப்பு முழக்கங்களையும் தோழர்கள் எழுப்பினார்கள். அப்பெண்களின் மறியலை மீறி தலைமையில் சென்ற தோழர்கள் கையிலிருந்த தோண்டியைக் கயிற்றில் கட்டிக் கிணற்றுக்குள் சரேல் என விட்டார்கள். வன்னியப் பெண்கள் தோண்டியைப் பற்றிக் கொண்டு இழுத்தார்கள். தோண்டி இருபுறமும் வேகமாக இழுக்கப்பட்டது.

அதே நேரம் தோழர்களுக்கும் கிணற்றுக்கும் இடையே புகுந்த அம்பேத்கர் மக்கள் கட்சித் தலைவர் குருநாதன் கையை விரித்து மறித்தார். ''இங்கே எல்லாரும் சுமுகமாக இருக்கிறோம்'' என்று பசப்பல் நடிப்பு நடித்தார். இது போலீசுக்குக் காட்டிய ஒரு சாடைமொழி போலவும் இருந்தது. உடனே ஏஎஸ்பி ''இவங்களக் கைது செய்யுங்க'' என்று விறைத்து நின்று கத்தினார். விவிமு தோழர்கள் 17 பேரை அங்கேயே கைது செய்தது போலீசு.

போராட்டத்துக்கு முன்னால் 'ஊர் சார்பாக' ஒரு கும்பல் திரண்டு போய் தாசில்தாரிடம் முறையிட்டது. அதற்குத் தாசில்தார் வழிசொல்லிக் கொடுத்திருக்கிறார் — ''ஆம்புளங்களா மறிச்சா கலாட்டா ஆயிடும். பொம்பளங்கள அனுப்புங்க.'' தாசில்தார் உள்ளூரிலிருந்து கற்றுக் கொண்ட 'பாடங்களை'யே இப்போது சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

வன்னியப் பெண்கள் மறிப்பது

**கொண்டு போகிற சோற்றைப் பங்கு போட்டுக் கலந்து தின்பார்கள். பசி என்றால் பிடுங்கியும் தின்பார்கள். பாறைக்குள்ளிருந்து ஊறுகிற தண்ணீரை சாதி வித்தியாசம் பார்க்காமல் முகம் கவிழ்த்து நக்கி உறிஞ்சிக் குடிப்பார்கள். ஊருக்குத் திரும்பி வந்து தலைச் சுமையைக் கீழே போட்டதுமே வன்னியருக்குச் சாதித் திமிர் தலைமேல் ஏறிக் கொள்ளும்.**

இரண்டாவது தடவை என்று நம்மிடம் சொன்னார்கள் கிருஷ்ணாபுரம் தாழ்த்தப்பட்டவர்கள். ஏற்கெனவே அரசாங்கத்தால் ஒருமுறை தாழ்த்தப்பட்டவருக்கு இடம் ஒன்று ஒதுக்கப்பட்டபோது, அந்த இடத்தில் மறியல் நடத்தியிருக்கிறார்கள்.

இவ்வளவு நடந்த பிறகும் தாசில்தாரும் சரி, பிற்படுத்தப்பட்ட ஆண்களும் சரி கிணற்றடியில் தாழ்த்தப்பட்டவர்களே மறித்ததால்தான் போலீஸ் கைது செய்தார்கள் என்று கூசாமல் பொய் சொல்கிறார்கள். தீண்டாமையே நடக்கவில்லை என்று சாதிப்பதற்கு ஊரும், அரசும் செய்கிற தந்திரமே இது.

விவிமுவைச் சமாளிக்க முடியாத போலீஸ் தரகு வேலைக்காக ஏற்பாடு செய்த ஆளே ஏஎம்கே அமைப்பின் மாவட்டத் தலைவரான குருநாதன். உள்ளூரில் அரசியல் பிழைப்பு நடத்தி வரும் குருநாதன்தான் உள்ளூரில் தாழ்த்தப்பட்டவர் மத்தியில் விவிமு எடுத்த பிரச்சாரத்துக்கு முட்டுக்கட்டை போட்டவர்.

இவர் பென்னாகரம் வட்டத்தில் விவிமு நடத்திவரும் போராட்டங்களை, வழக்குகளை எல்லாம் தாங்கள் நடத்துவதாகக் கூசாமல் சொல்லிக் கொள்ளும் சிபிஐ 'வலது' கம்யூனிஸ்டு தலைவர்கள் கிருஷ்ணாபுரம் விவிமு போராட்டத்தை சாதி மோதலைத் தூண்டும் போராட்டம் என்கிறார்கள். சிபிஎம் 'இடது' கம்யூ-ஐச் சேர்ந்த கிருஷ்ணாபுரம் தலைவர் ஒருவர் தன்னை வன்னியர் என்று சொல்லிக் கொண்டார். சிபிஎம் கட்சி இவரை கிருஷ்ணாபுர போராட்டத்தில் சம்பந்தப்படக் கூடாதென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டது.

தாழ்த்தப்பட்டவர்களோடு ஒன்றாக 30 கி.மீ., தொலைவு கால் கடுக்க நடந்து போய் மூங்கில் வெட்டிக் கொண்டு வருவார்கள் வன்னியர்கள். அங்கே வெட்டுகிற இடத்தில் கொண்டு போகிற சோற்றைப் பங்கு போட்டுக் கலந்து தின்பார்கள். பசி என்றால் பிடுங்கியும் தின்பார்கள். பாறைக்குள்ளிருந்து ஊறுகிற தண்ணீரை சாதி வித்தியாசம் பார்க்காமல் முகம் கவிழ்த்து நக்கி உறிஞ்சிக் குடிப்பார்கள். ஊருக்குத் திரும்பி வந்து தலைச் சுமையைக் கீழே போட்டதுமே வன்னியருக்குச் சாதித்திமிர் தலைமேல் ஏறிக் கொள்ளும்.

ஆதிக்கச் சாதிக்காரனுக்கு சாதித் திமிர் ஏறுவது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்டவனுக்கு அடிமைப்பாத்திரமும் திரும்பி விடுகிறது. தன்னோடு ஒன்றாக நக்கிக் குடித்த வன்னியர் முன்னால் தாழ்த்தப்பட்டவர் கையைக் கட்டி விடுகிறார்.

கடந்த நான்கைந்து மாதங்களாக விவிமு போராட்டம் நடத்துவது அந்த ஆதிக்கச் சாதித் திமிரை அடக்குவதற்குத்தான்; தாழ்த்தப்பட்டவனின் கட்டிய கைகள் மேல் எழுவதற்குத் தான்!

• குப்பண்ணன்



போராட்டத்தில் கலந்து கொண்ட வி.வி.மு. தோழர்கள்



படிப்பகம்

www.padippakam.com



## சாதி தீண்டாமை ஒழிப்பு இயக்கம்: ஏரியூர் கோவில் நுழைவுப் போராட்டம்

# ''மேல் வரப்பும் கீழ் வரப்பும் சேருமா''

ஏரியூர் கிராமம். தருமபுரி மாவட்டம் பென்னாகரத்திற்கு அருகே சுமார் 20 கி.மீ. தொலைவில் உள்ள கொஞ்சம் பெரிய கிராமம்.

அந்த ஊரின் தாழ்த்தப்பட்ட குடிகள் அருந்ததியரும் பறையரும் சேர்த்து மொத்தம் 500 வீடுகள் ஒரு கலகத்தில் இறங்கின.

அவர்கள் சாதாரண நாட்களில் செல்வ விநாயகர் குந்தியிருக்கும் ஊர்க் கோயிலில் நுழையவே முடிந்ததில்லை.

ஏரியூர் கோயில் நுழைவுப் போராட்டத்திற்கு முன்பாக விவிமு பிரச்சாரம் எடுத்தது. அதையொட்டி போயர்கள், வன்னியர்கள் பார்வையாளர்களாக நின்று கொண்டார்கள். சிறுபான்மை வெள்ளாளக் கவுண்டர் குடும்பங்கள் மேல்சாதி ரெட்டிக் குடும்பங்களோடு சேர்ந்து கொண்டன; மேல்சாதி ரெட்டியார்கள் துண்டாக ஒதுங்கினார்கள்.

அரசியல் ரீதியாகக் கட்சிகளுக்குள் இருந்த சாதிப் பிரிவினையும், பிரதிநிதிகளுமாக அப்படி அப்படியே பிரிந்து நின்றார்கள். திமுக தலைவர் ஒ. பெருமாள் - ரெட்டியார்; திமுக கவுன்சிலர் ஸ்டாலின் - தாழ்த்தப்பட்டவர்; பாட்டாளி மக்கள் கட்சியிலும் தலைவர் சுப்பிரமணி பிற்படுத்தப்பட்ட சாதிகளோடு சேர்ந்தவராகவும், வார்டு மெம்பர் மணி அருந்ததியர் பறையரோடு சேர்ந்தவராகவும் நின்று அதே சமயம் பிரச்சனையை நேரடியாக ஆதரிக்காமல் ஒதுங்கி நின்றார்கள்.

தீண்டாமை ஒழிப்பின் அங்கமாகக் கோயில் நுழைவுப் போராட்டத்தை அறிவித்ததுமே பீதி அடைந்த அரசு இயந்திரம் - குறிப்பாக தாசில்தாரும், டிஎஸ்பியும் சேர்ந்து - உடனே ஒரு அமைதிக் குழுவைக் கூட்டியது.

ஏரியூர் பிரச்சனையை சட்டம் ஒழுங்குப் பிரச்சனையாக உருமாற்ற அமைதிக் குழு படாத பாடுபட்டது. 'எல்லாவற்றையும் பேசித் தீர்த்துச் சுமுகமாகச் செய்யலாம். 10 நாள் அவகாசம் கொடுங்கள்' என்று தந்திரமாகக் கேட்டது. இப்படியே உட்கார்ந்து பேசி, நின்று பேசி, நடந்து பேசினால் போராட்டத்தைப் பேசியே இழுத்தடித்து விடலாம் என்று நினைத்தது. விவிமு பிரதிநிதிகள் அதை ஏற்கவில்லை. போராட்ட நாளை உறுதியாக்கி மறுபிரச்சாரமும் செய்து முடித்தார்கள்.

போராட்ட நாளன்று உள்ளூரிலிருந்து சுமார் 150 பேர் அருந்ததியர், பறையர் குடும்பங்களிலிருந்து வந்தார்கள்; 80 விவிமு தோழர்கள் கலந்து கொண்டார்கள். ஏரியூரைப் பொறுத்த அளவில் அது ஒரு பிரம்மாண்டமான பேரணி.

முதலில் கோயிலுக்குள் செல்ல அடியெடுத்து வைத்தாள் ஒரு அருந்ததிப் பெண். ஒரு கணம் அவள் மனத்தில் நீண்ட காலமாய் இருந்து வரும் கிராமத்து ஆணைகள் எழுந்து மறித்தன. பின்னாலிருந்து முழக்கங்கள் வேகமாக அலை அலையாய் வந்த வண்ணமிருந்தன. அவள் பிரமை பிடித்து நின்றாள். அடுத்து வந்த பெண் விவிமுவின் தீர்மானமான முழக்கத்தைச் செயல்படுத்தும் வேகத்தில் அவசரமாக நின்றாள். ''கோயிலில் நுழையத்தான் வந்திருக்கோம் உள்ள போகலாம் வா'' என்று அவள் சொல்லிக் கொண்டே தனக்கு முன் நின்று விட்டவளை ஆதரவாகப் பற்றி இழுத்துக் கொண்டு முன்னேறினாள். அப்புறம் திரண்டு வந்தவர்களைத் தடுப்பதற்கென்று அங்கே எதுவும் இல்லை.

அது ஒரு ஆற்று வெள்ளம். மகிழ்ச்சி கட்டுடைத்து ஓடியது. ஏழே ஏழு குடும்பங்களே ரெட்டிகளுடையது. ஆனாலும் அவர்களின் திமிர் அடுத்த இரண்டு நாட்கள் கொடிகட்டிப் பறந்தது. ஒகேனக்கல்லிலிருந்து குடம் குடமாகக் காவிரிநீர் எடுத்து வந்து கோயில் கிணறு சுத்தப்படுத்தப்பட்டது; கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்து தீட்டுக் கழிக்கப்பட்டது; ரெட்டி, வன்னியரில் ஒரு சிலர் மட்டும் இரண்டு நாட்களுக்கு 'கை ஒடிப்போம் கால் ஒடிப்போம்' என்று தாழ்த்தப்பட்டவர்களைப் பயமுறுத்திப் பார்த்தார்கள்; அதற்கும் அடுத்த ஒன்றிரண்டு நாளிலேயே 'யாரும் பறப் பயலுகளுக்கு வேலை கொடுக்கக் கூடாது' என்று போடப்பட்ட நிபந்தனை ரெட்டிக் குடும்பங்களிலேயே பிளவை ஏற்படுத்தி விட்டது. ஒரு ரெட்டியார் நேரடியாகவே அருந்ததியர் குடும்பங்களிடம் சென்று ஆட்களை வேலைக்கு வரச் சொல்லி விட்டார். 'என்ன இருந்தாலும், அவங்கதானே உழைக்கப் போறாங்க. நீங்களாவந்து பாடுபடப் போறீங்க' என்று அவர் மற்ற ரெட்டிகளிடம் எதார்த்தமாகக் கேட்டார்.

ஏரியூர் போராட்டத்துக்குப் பிறகு அன்று கோயிலுக்குள் நுழைந்தவர்கள் மறுபடி அங்கு போவதில்லை. சாதியை வைத்து ஆதிக்கம் செய்பவர்களுக்கு அன்று பலமாக ஓரடி விழுந்தாலும் நிலவுடைமை உறவுகள் அங்கு மாறிவிடவில்லை. மாறி மாறி அம்மாற்றத்துக்கான போராட்டங்களோடு தீண்டாமை - சாதி ஒழிப்புப் போராட்டமும் இணையும் போதும், தொடர்ந்து நடக்கும் போதும் தான் போராட்டச் சாதனைகள் நடப்பில் இருக்கும். இப்போராட்டங்களைத் தொடர்ந்து நடத்துவோம் என்று விவிமு அறிவித்திருப்பதுதான் மிகச் சரியானது. ●

**போராட்டத்தின் போது மேல் சாதி ரெட்டித் தெருவில் கேட்டது:**

''இப்ப சக்கிலியருக்கு நக்சல் பார்ட்டி சிக்கியிருக்கு. அவங்களோட சேர்ந்து போறாங்க. வரட்டும் வரட்டும் கடைசி வரைக்கும் பார்க்கலாம். அவுங்கக் கூட சக்கிலியரு நிப்பாகளா?'' ஒரு ரெட்டிப் பெண்.

''இவுக யாரு கம்யூனிஸ்டா?''

''இல்ல, நக்சல் கட்சி. சக்கிலியர சேர்த்து நடத்துறாங்க.''

''அது சரி. மேல்வரப்பும் கீழ்வரப்பும் சேருமா?''

''அதெப்படிச் சேரும்? இதுக்கெல்லாம் யாரு காரணம்? ஊருக்குள்ள பல பட்டறை ஜாதிகள் இருக்குதுங்க. யாரு இத கேக்கப் போறாங்க... இவுங்க புதுசா கிளப்பி விட்டிருக்காங்க; சட்டம் வேற அவுங்க பக்கம் இருக்குது. திமிர் ஏறிப் போச்சு. அதனால அவுனுக செய்வான்க...''



படிப்பகம்

www.padippakam.com



களத்துப் பாடகரின்
நாட்டுப் புறப்பாடல்

ஆராதனையில் பஞ்சரத்தின கீர்த்தனைகளைப் பாடும் நாளன்று சென்ற முறை செய்ததைப் போல் இவ்வாண்டும் மகஇக எதுவும் செய்து விடக் கூடாது என்பதில் பார்ப்பனர்களுக்கும் மேலாக அவசர கதியில் செயல்பட்டது போலீசு. நேரடியாகத் தோழர்களும் அவர்கள் இல்லாத இடங்களில் பதிலியாக அவர்களின் வயதான பெற்றோர்களும் கொண்டு போகப்பட்டார்கள்.

## தமிழ் மக்கள் இசை விழா 5 ஆம் ஆண்டு:

# மலர்கிறது மக்கள் இசை

தமிழ் மக்கள் இசை விழாவிற்கு இது ஐந்தாம் ஆண்டு. தமிழிசையைத் திருடி அதற்கு கருநாடக இசை என்ற பெயரும் சூட்டிப் பார்ப்பனிய மத முலாமும் பூசி "இதுதான் தமிழக இசை" என்று சாதிக்கின்ற மோசடிக்கெதிரான போராட்டமே தமிழ் மக்கள் இசை விழா.

இவ்வாண்டு விழாத் தலைமையுரை வழங்கிய மகஇக மாநில இணைச்செயலர் தோழர். காளியப்பன் போராட்டத்தின் கடந்த ஐந்தாண்டு வரலாற்றைச் சுருக்கமாகப் படம் பிடித்துக் காட்டினார். இதுவரை சட்டம் மூலம் அனுமதி மறுத்தும், நிபந்தனைகள் விதித்தும் நம்மை எதிர்த்து வந்த விழாக் குழுவினர் இம் முறை மூப்பனாரின் கெடுபிடிகள் மூலம் போலீசை வைத்து தமிழகமெங்கும் முன்னெச்சரிக்கைக் கைதுகளைச் செய்தார்கள். ஆராதனையில் பஞ்சரத்தின கீர்த்தனைகளைப் பாடும் நாளன்று சென்ற முறை செய்ததைப் போல் இவ்வாண்டும் மகஇக எதுவும் செய்து விடக்கூடாது என்பதில் பார்ப்பனர்களுக்கும் மேலாக அவசர கதியில் செயல்பட்டது போலீசு. நேரடியாகத் தோழர்களும் அவர்கள் இல்லாத இடங்களில் பதிலியாக அவர்களின் வயதான பெற்றோர்களும் கொண்டு போகப்பட்டார்கள். திருச்சித் தோழர் முருகானந்தத்தின் 70 வயதுத்தாய் கைது செய்யப்பட்டார். இவர்கள் வெளியே இருந்தால் ஆபத்து என்று போலீசு வாதிடுகிறது. திருவையாறு சமாதிக்கும் பந்தலுக்கும் CRPF காவல் - 'முகாம் பணி'யிலிருப்பதாக அலுவலகத்தில் பதிந்து விட்டு வெற்றுடம்பில் பூணூல் நெளிய திருவையாறு பந்தலில் வந்தமரும் மத்திய / மாநில அரசு அதிகாரிகளுக்குப் பலத்த பாதுகாப்பு வேண்டாமா, அதற்காக.

சனவரி 9 அன்று திருவையாற்றில் தோழர். காளியப்பன் (மகஇக மாநில இணைச் செயலர்) பொதுக் கூட்டத்தில் பேசினார். 2 நாள் சென்றது. 'தமிழில் பாட வைப்போம்' என்ற காளியப்பனின் போர்க்குரல் சில ஆசாமிகளின் நிம்மதியைக் கலைத்திருக்க வேண்டும். "மொழி இனவெறி தூண்டியதாக" அவர் மீது வழக்குப் போடப்பட்டுச் சிறையில் தள்ளப்பட்டார். பின்னர் நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

இவை அனைத்தும் திருவையாறு விழாவை உத்தரவாதப்படுத்த; தமிழ் மக்கள் இசைவிழாவைத் தாக்கிச் சிதறடிப்பதற்காக. அவர்களின் கனவுகள் பலிக்கவில்லை. "எங்கள் காவிரிக் கரையில் உட்கார்ந்து கொண்டு தமிழில் பாடினால் தீட்டு என்கிறாயே எது இனவெறி? எது மொழிவெறி?" என்று ஐந்தாம் ஆண்டு தமிழ் மக்களிசை விழா மேடையிலிருந்து கேள்விக்கணை எழுப்பினார் காளியப்பன்.

"திராவிடக் கட்சி உள்ள சூழல் சாதகமானது என்று சிலர் இன்னமும் கருதி வரும் இன்றைய நிலையிலேயே இந்தக் கதி என்றால் நாளை பா.ஜ.க.



திரண்டு வந்த மக்கள் கூட்டம்



படிப்பகம்

www.padippakam.com

ஆட்சி வந்தால் எப்படி இருக்கும்?'' - எதிர்கால அபாயத்தைச் சுட்டிப்பேசிய தோழர் தமிழ் மக்களின் தொடர்ந்த ஆதரவோடு நடந்து வரும் போராட்டம் தொடரும், 10, 20 பேர் கலந்து கொள்ளும் எளியமுறையில் அல்ல, ஆயிரமாயிரமாய்ப் படை கிளம்பி வரும் என்று அறிவித்த போது அரங்கம் கை ஒலி எழுப்பி ஆமோதித்தது.

காலை ஆய்வரங்கின் முதல் உரை நிகழ்த்திய கவிஞர் வெ.மு.பொதிய வெற்பன் தமிழிசைப் பண்ணாய்வு வாணர் குடந்தை சுந்தரேசனார் பற்றிப் பேசினார். சாம்ப மூர்த்தி அய்யர் வாள்கள் தமிழிசையையே கருநாடக இசைக்காரர்கள் 'தத்தம்' செய்ததாக இருட்டடிப்பு ஆய்வுகளைச் செய்த நேரத்தில், அதற்குச் சவாலாகச் சுந்தரேசனார் முன்வைத்த ஆய்வுரைகள், ஏற்படுத்திய தமிழிசை மன்றம், நடத்திய ஆய்வு ஏடு போன்றவை தமிழிசைப் போராட்டத்துக்குக் கருத்துக்களம் அமைத்ததை வரிசைப்படுத்தி உணர்ச்சிச் செறிவோடு விவரித்தார்.

அடுத்து வந்த முனைவர். முருகேசன் 'பரதநாட்டிய அடவுகளும், பாரம்பரியக் கூத்து அடவுகளும் - ஒப்பாய்வு' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். ''தமிழ் மண்ணில் விறலியர்க்குரிய சுத்தமான ஆடல்தான் பிறகு செவ்வியலாகச் சதிராக ஒழுங்கு படுத்தப்பட்டது. அதற்குப் பரதம் என்று பெயர் சூட்டி பரத முனிவருக்குப் பிறந்த குழந்தையாக ஒரு மோசடிக் கதை பரப்பி விட்டார்கள் இ. கிருஷ்ணயரும், பிறகு வந்த பத்மா சுப்பிரமணியமும். இது ஒரு கலாச்சார அத்துமீறல். சதிரை 'பரத நிருத்தியம்' என்று வேண்டுமானால் சொல்லலாம் என்று ஏதோ சலுகை வழங்குவது போலப் பேசிய பத்மா சுப்பிரமணியத்தின் தந்திரம் இங்கே செல்லாது'' என்று பார்ப்பன மேதாவிகளைத் திரை கிழித்து விட்டு, புரிசை கண்ணப்ப சம்பந்தன் மற்றும் ஆசுத்திப்பட்டு கூத்துக்குழுக்களை நிகழ்த்தச் சொல்லி தமிழ் ஆடல்கலையின் அடிப்படை அலகான அடவு (அடைவு)களை சதிர் (பரதம்) - கூத்து இரண்டையும் ஒப்பிட்டு விளக்கினார். மெலட்டூர் குழுக்களுக்கு ஆடல் இயக்கம் செய்யும் திரு. ஏரம்ப நாதன், அவரது இளவல் திரு. ஜெயபாரதி, நாதசுரக் கலைஞர் திரு. பின்னைநல்லூர் தட்சிணாமூர்த்தி, தஞ்




***'அசுரகானம்' ஒலிப்பேழை தயாராவதன் முன்பு மசூதி இடிக்கப்படவில்லை; தயாராகும் போது இடிக்கப்பட்டது; நாடெங்கும் பார்ப்பனக் கும்பல் முசுலீம்கள் மீது தாக்குதலை அவிழ்த்து விட்டது. 'இப்படி நடக்க விட்டு விட்டோமே' என்ற கோபம். தாழ்த்தப்பட்டவரையே செங்கல் தூக்க வைத்தார்களே என்ற ஆதங்கம். பாட்டு பிறந்தது. பொங்கி வெடிக்கின்ற ஆத்திரத்துக்குத் தாளமே அடித்தளம்.***

சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர் செல்வ கணபதி, அங்கயற்கண்ணி ஆகிய ஐவரை அழைத்து கூத்தில் ஆடப்பட்ட அடவு சதிர் அடவுகளை ஒத்திருப்பதை அறுதியிட்டார் முருகேசன்.

இதுதவிர, குறவன் குறத்தி ஆட்டத்துக்கு ரெட்டிப்பாளையம் தப்பாட்டக் குழுவை இசைக்க வைத்தது, பரத ஜதிகளுக்கு தப்பில் அடித்து ஆடிக்காட்ட வைத்தது குறிப்பிடவேண்டிய விளக்க முறைகள். சொந்த முயற்சியில் சொந்தச் செலவில் கூத்துக் குழுக்களை ஏற்பாடு செய்ததோடு ஊன் உறக்கமில்லாமல் பயிற்சி எடுத்து மிகுந்த ஈடுபாட்டோடு அவர் நிகழ்ச்சியை அமைத்திருந்த முறை அனைவரையும் கவர்ந்தது.

'இறையும் இசையும்' என்ற தலைப்பில் படிக்கப்பட்ட முனைவர். எஸ்.ஏ. வீரபாண்டியனின் கட்டுரை. பழந்தமிழரின் சங்க இலக்கியங்களில் இறைவன் இசை படைத்தான் என்ற கருத்தே இல்லை என்றும், பரிபாடலில் கூட இறைவனோடு இசையைத் தொடர்புபடுத்தி ஒருவரி கூட இல்லை, முன்பு மனிதனோடு - மனித நடவடிக்கைகளோடு தொடர்பு கொண்டிருந்தது; தேவார காலத்திலிருந்தே இறையோடு இசையைத் தொடர்பு படுத்தியதும் 'இசையும் நீ இசைப்பயனும் நீ' என்று இறைவனைப் பாடியதும் உருவாகியிருக்க வேண்டும் என்று தக்க ஆதாரங்களோடு விளக்கியது.

ஆய்வறிஞர் ப. அருளி இசை தொடர்பான சொற்களை முன் வைத்து அவை எப்படித் தமிழில் இயங்கி வந்தன என்று விளக்கினார். எப்படி ஒரு மனிதனின் உறுப்புகளிலிருந்து நான்கு வருணங்கள் தோன்றின என்று சரடு விட்டார்களோ அதே போல சிவனின் ஐந்து தலைகளிலிருந்தும் ஐந்து ஸ்வரங்கள் தோன்றன என்கிறார்கள். ஆனால் 2700 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டிருப்பது போல அராகம் (ராகம்) (''உருட்டு வண்ணம் அராகம் பயிலும்'' சூத்திரம்) என்ற சொல் வழங்கி வந்தது. ராகம், தாளம், ஆலாபனை என்று இசையின் அடிப்படைச் சொற்கள் எல்லாமே தமிழ்ச் சொற்களே. அவை வடமொழிச் சொற்களே என்று வாதிடுபவர்கள் பொய்களைத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். தமிழரின் வாழ்க்கை, தமிழ் மொழியில் உள்ள சில வேர்ச் சொற்கள் போன்ற எடுத்துக்காட்டுகள் தந்து அந்த வாதங்களைத் தூக்கி எறிந்தார் அருளி. தமிழ் மண்ணின் வளங்களை, ஆற்றலை, கலையை மீட்டெடுக்கும் போராட்டத்தில் மகஇகவோடு தனது தோள் இருக்கும் என எழுச்சிமிக்க உரையை முடித்தார்.

தானாக முன் வந்து கட்டுரை அளித்த ஆய்வாளர் ஜோதிராணி இசைக்கருவிகளில் எப்படிச் சாதியம் தொழிற்படுகிறது என்பதை விமரிசன பூர்வமாக ஆய்வு செய்தார். ஆகம விதிகளின்படி இயங்கும் கோயில்களில் இசைக் கருவிகளுக்கும் எல்லைகள் போடப்பட்டுள்ளன. தோல் கருவிகள் வழிபாட்டில் இடம் பெறுவதில்லை. நம் கலைஞர்கள் இசைக்கும் கருவிகள் கிராமப்புறத்துத் தெய்வ வழிபாடுகளில் தான் வழி முறையில் பயன்படுத்தப்படுகின்றன. கிராமத்து உழைப்பாளிகளின் வாழ்க்கையோடு இணைந்த இந்த இசைக் கருவிகளையே மேல்சாதி மேல்வர்க்கத்தார் பிடுங்கிக் கொண்டு தங்களுடையதா



படிப்பகம்

www.padippakam.com

கப் பாவனை செய்கிறார்கள். நம் இசைக் கருவிகளின் பெயரும், வடிவமும் இவர்களிடமிருந்து காப்பாற்றப்படவேண்டும். அவை மறைந்து போகும் நிலை வரக்கூடாது.

'மகஇக பாடல் இசையமைப்பு அனுபவத்தை' தோழர் கோவன், இசைக்குழு தோழர்கள், தோழர். மருதையன் இணைந்து அளித்தார்கள். எமக்குத் தொழில் புரட்சி என்பதால் புதிது புதிதாக மக்களிசை அமைப்பாளர்களை உருவாக்கும் நோக்கத்தில் இசையமைப்பை ரகசியமாக வைக்காமல் அனுபவமாகப் பகிர்ந்து கொள்கிறோம் என்கிற முன்னுரையோடு தொடங்கினார்கள். ''அரசியலிலே எப்படி ஒரு விமரிசனப் பார்வையை வளர்த்துக் கொள்ள வேண்டுமோ அது போலவே இசையிலும் வேண்டும்.''

''புரட்சிப்பாடல் என்றால் ஒரு நாட்டுப்புற மெட்டெடுத்து அப்படியே பாடல் எழுதி விடுவதல்ல. இசையை அமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது; பல பாடல்களை இசையமைப்பதன் மூலம் கற்று வருகிறோம்'' என்று இசையமைப்பில் உள்ள நுணுக்கமான பிரச்சனைகளை விளக்கினார்கள். காவிரி நீர் உரிமைக்கான போராட்டம், இறால் பண்ணை அழிப்புப் போராட்டம், திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம் என்று களம் கண்ட பாடல்களை இசை அமைத்ததும், அவை விவசாயிகளிடம் பெற்ற ஆதரவையும் பற்றி விரிவாக விளக்கினார்கள்.

''சாந்தப்படுத்துவதே இசையின் வேலை என்று சங்கராச்சாரியும் சொன்னார். தியாகையர் ஆராதனையிலும் அதைத்தான் சொல்கிறார்கள். ஆனால் கோபத்தைத் தூண்டுவதும் இசையின் வேலைதான். 'அசுரகானம்' ஒலிப்பேழை தயாராவதன் முன்பு மசூதி இடிக்கப்படவில்லை; தயாராகும் போது இடிக்கப்பட்டது; நாடெங்கும் பார்ப்பனக் கும்பல் முசுலீம்கள் மீது தாக்குதலை அவிழ்த்து விட்டது. 'இப்படி நடக்க விட்டு விட்டோமே' என்ற கோபம். தாழ்த்தப்பட்டவரையே செங்கல் தூக்க வைத்தார்களே என்ற ஆதங்கம். பாட்டு பிறந்தது. பொங்கி வெடிக்கின்ற ஆத்திரத்துக்குத் தாளமே அடித்தளம். அதிலிருந்து பாடல் எழுத யோசித்தோம். கோபத்தின் தாளத்துக்கு என்ன மெட்டோ அதற்குப் பாட்டு. இப்படிப் பிறந்ததே 'ஆயிரங் காலம் அரிசன் என்றாயே / அரிசனன்னு பேருவைக்க யாரடா நாயே?'' என்ற பாடல், அடிமைகளுக்கு ஆண்டைகள் உபதேசித்ததுதான் சாந்தம். சாந்தமுலேகா சௌக்யமு லேதுரா என்றார் தியாகய்யர். இதை மாற்றினோம் எங்கள் இசை அமைப்பால்.''

நிலப்பிரபுத்துவ ஒடுக்கு முறைக்கு எதிராக தஞ்சை நையாண்டி மெட்டு பயன்படுத்தப்பட்டது. பட்டுத் துணி சுற்றிய கத்தி. ஒப்பாரிச் சோகத்துக்குள்ளே, நையாண்டிக்குள்ளே போர்க்குணம் சேர்க்கப்பட்டது. அந்தப் பாடல்தான் ராஜீவின் பீரங்கி பேர ஊழல் பற்றிய ''இந்திரா பெத்த புளளே இத்தாலி மாப்புள்ளே...'' என்ற பாடல். நையாண்டி மெட்டு விதவிதமாகப் பயன்படுத்தப்பட்டுப் பல பாடல்கள் எழுதப்பட்டன.




ஓரிழை இசை (Mono tone) மற்றும் ஈரிசை இசை (Poly Pony), ஒத்திசை (Harmony), வடிவங்கள் எப்படிப் பயின்று செய்யப்பட்டன என்பதும் விளக்கப்பட்டது. பாரதிதாசனின் 'பாரடா இந்த மானிடப் பரப்பை' என்ற எழுச்சிப் பாடலும் அவரது மற்ற பாடல்களும் இசை அமைக்கப்பட்ட அனுபவமும் விளக்கப்பட்டது.

''கொக்கோ கோலா குடிப்பது போல ஜாலிக்கு இசை என்கிறார்கள். அது முற்றிலும் தவறு. மன உணர்வை நெறிப் படுத்தும் இசை ஊடகங்களே ராகமும் தாளமும்'' என்று இசையின் சமூகப் பயன் அழுத்தமாகச் சொல்லப்பட்டது.

நிகழ்ச்சியைக் கேட்டு முடித்ததும் 'மகஇக பாடல்கள் பிறந்த கதை' யையே தனி ஒலிப்பேழையாக்கித் தமிழ் மக்களிடம் சேர்க்க வேண்டும் என்று தோன்றியது.

மாலை நிகழ்ச்சி கிட்டத்தட்ட 6,7 மணி நேரம் நடந்தது. அந்தப் பெரிய மேடையில் தமிழனின் இதயத்துடிப்பு கேட்டது. ஒலியால் எழுதப்பட்ட கவிதைகள் நம் இதயத்தோடு பேசின. கருமாந்துறை எல். முனுசாமி குழுவினரின் கம்பீரமான பெரிய மேளம் களத்துக்குள் நம்மை அழைத்தது. தருமபுரி கஞ்சி நாயக்கன்பட்டி காவேரி ஈசன் கோவிந்தன் குழுவினரின் ஆதிக்கூத்து 'கோவலன் கதை' ஆட்டமும், ஆத்தூர் கோமதி குழுவினரின் 'பாஞ்சாலி சபதம்' வில்லுப்பாட்டும் குறிப்பிட்டுச் சொல்லும்படி அமைந்தன.

ரெட்டிப்பாளையம் குமார் தப்பாட்டக் குழுவினர் பறைகளை நையாண்டி மேளச் சொல்லுக் கட்டுப் போல அடித்தும் ஆடியும் விதவிதமான ஆட்டவகைகளை நிகழ்த்தினார்கள்; ஒரே நேரத்தில் எழுச்சிச் சொல்லும், கதை நடையும், மின்னல் கீற்றுக்களும், கழைவித்தைகளும் தோன்றி மறைந்தன. தப்பாட்டக் குழுவினரும், பெரிய மேளமும் மகஇக கலைக் குழுவோடு இணைந்து தோன்றி பாடல்கள் அமைத்தது புதிய நிகழ்வாக அமைந்தது.

இம்முறை முந்தைய ஆண்டுகளை விடக் கூடுதலாகத் திரண்டிருந்த பார்வையாளரின் நெஞ்சை அள்ளிய பகுதி 'களத்துப் பாடகர்களின் நாட்டுப் பாடல்கள்'. உழைக்கும் மக்களின் உயிர்த் துடிப்பாக வயதான விவசாய மூதாட்டியர் பாடும்போதே ஆடினார்கள். கூடலூர் மாரி ஒரு தெம்மாங்கு பாடினார். கேலியும், குத்தலும், நகைச் சுவையும் கலந்து பார்ப்பன எதிர்ப்பைப் பாடிக் காட்டியது ஆரவாரமான வரவேற்பு பெற்றது.

ஐந்தாம் ஆண்டு தமிழ் மக்களிசை விழாவில் பேச்சுக்கள் குறிப்பிட்ட இலக்கு நோக்கி அமைந்திருந்தன. பார்ப்பனீயப் பண்பாட்டு ஆக்கிரமிப்பு என்பது இசை, ஆடல், பாடல்களில் எவ்வாறு நடந்தது என்ற வரலாற்றை ஆய்வு செய்கிற களமாகக் காலை அமர்வும், மாலை நிகழ்ச்சிகள் புதிய மக்களிசைக்கான வித்துக்களைத் திரட்டுவதாகவும் அமைந்தன.

■ மருத்துவன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com

PUTHIYA KALACHARAM

REGISTERED WITH THE REGISTAAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42648/87



இந்து மதவெறி பாசிஸ்டுகளின் புலிவேசத்தைக் கண்டு அஞ்சத் தேவையில்லை. பாசிசத்துக்குப் பல்லக்குத் தூக்கும் துரோகிகளை இனம் காண வேண்டிய தருணமிது. பாராளுமன்றத்திற்கு வெளியே பார்ப்பனியத்தின் அடிமை இந்தியா விழும்; நக்சல்பாரியின் புதிய இந்தியா எழும்!

## உழைக்கும் மக்களே, ஒன்று சேருங்கள்!

படிப்பகம்